795

பெரி மேஸன்

துப்பறிந்த

இரட்டைக் கொலை வழக்கு



01113mGE,P
N67—= ல
...க்கு

எர்ல் ஸ்டான்லி
கார்ட்னர்

பிரமிளா : பெரிய காடுபோல் மரங்கள் அடர்ந்து இருந்த அந்த எஸ்டேட்டுக்கு நடுவே மாளிகை ஒன்று இருந்தது. அந்த மாளிகையில் ஒருவரும் இருப்ப தாகவே தெரியவில்லை. நான் கூப் பிட்டுக் கூப்பிட்டுப் பார்த்தேன். ஒரு பதிலும் வரவில்லை.

காரை அங்கேயே நிறுத்திவிட்டு கீழே இறங்கி நடக்க ஆரம்பித்தேன்.

அருகே இருந்த புதரின் வெளியே ஒரு மனிதனுடைய கால்களைப் பார்த் துத் திடுக்கிட்டேன். அருகே சென்ற வுடன் அங்கே ரத்னமாகவும், ஜம்பு லிங்கமாகவும் இதுவரை நடித்துவந்த மரகதத்தின் கணவர் மார்பிலே குண்டு பாய்ந்திருப்பதைக் கண்டேன்.

உடல் ஜில்லிட்டுக் கிடந்தது.

பெரிமேஸன் : உனது சிநேகிதி மரகதம் கூறியது போல் நீ பெரிய சாகசக்காரியாகவும், பொய் சொல்பவளாகவும், பொல் லாதவளாகவும்தான் எனக்குத் தோன்று கிறது.

பிரமிளா : நீங்கள் சொல்லுவது தவறு. அப்படி நான் பொய் சொல்லக்கூடியவளாய் இருந்தால் இன்னும் நம்பக்கூடியதாக வும் வேடிக்கையாகவும் கற்பனை செய்து கூறியிருப்பேன்.

சென்னையில் லிப்கோ ஸ்டாகிஸ்ட்டுகள் :

எம். தாமோதரம் & கம்பெனி,

108, கார்ப்பொரேஷன் பழக் கடை, எஸ்பிளனேட், சென்னை-1.

பெரிமேஸன் துப்பறிந்த

இரட்டைக் கொலை வழக்கு

எர்ல் ஸ்டான்லி கார்டனர்

BOOKS SECTION
1968
DEPT.

பதிப்பகத்தார்

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி

தியாகராயநகர் : : சென்னை-17

[விலை ரூ. 1.75

PERRY MASON

SOLVES THE CASE OF THE

BIGAMOUS SPOUSE

by **ERLE STANLEY GARDNER**

O111, 3MG6.,
N67

COPYRIGHT © ERLE STANLEY GARDNER

LIFCO EDITION IN TAMIL
FIRST EDITION: 1967
SECOND EDITION: 1968

TAMIL NADU ARCHIVES LIBRARY
111603

Printed at:
Sulekha Printers, 5, Bujanga Rao Street, Madras-15

எழுத்தாளர் கார்ட்னரும் அவரது கற்பனைப் பாத்திரங்களும்

ஏர்ல் ஸ்டான்லி கார்ட்னர் எழுதிய "Perry Mason Solves the Case of Bigamous Spouse," என்னும் துப்பறியும் கதையின் தமிழாக்கம் இந்த நாவல்.

எர்ல் ஸ்டான்லி கார்ட்னர் பிரபல கிரிமினல் வக்கீலும், துப்பறியும் அமெரிக்கக் கதாசிரியரும் ஆவார். இவர் தம்முடைய முதிர்ந்த, ஆழ்ந்த அனுபவங்களைக் கொண்டும், குற்றங்களைக் கண்டுபிடிக்கப் பிரபல விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்புகளைப் புகழடையச் செய்யவும், உண்மைக்கும் நியாயத்திற்கும் பாடுபட்டுப் பெயரையும் புகழையும்கூட தியாகம் செய்த அரசாங்க வக்கீல்களின் கடமையின் சிகரத்தை விளக்கவும், போலீஸ் விசாரணை எப்படி அவசரப்பட்டு நிதானமில்லாமல் செய்யக்கூடாது என்பதை விளக்கவும், நிரபராதிகள் எப்படித் தண்டிக்கப்படாமல் இருக்க வக்கீல்கள் நெறியுடன் பாடுபட்டு உழைக்கவேண்டும் என்பதை உணரவேண்டும் என்பதற்காகவும், அநேக வழக்குகளைக் கதையாகப் புனைந்திருக்கிறார். உயர்ந்த நோக்கத்துடன் கற்பனா சக்தியையும் பயன்படுத்திக் கதைகளை நியாயத்திற்கு எடுத்துக்காட்டாக எல்லோருக்கும்

பயன்படும்படி சிருஷ்டித்திருக்கிறார். அநேக நல்ல போதனைகள் இக்கதைகளில் புதைந்து கிடக்கின்றன.

இவரும் மற்ற எழுத்தாளர்கள்போல் ஆரம்பத்தில் கதைகளைப் பிரசுரிக்க பதிப்பகத்தார்களால் மறுக்கப்பட்டு கஷ்டங்களை அனுபவித்தவர்தான். இவருக்கு இப்பொழுது 77 வயதாகின்றது. எல்லா எழுத்தாளர்களையும்விட இவர் எழுதின புத்தகங்கள்தாம் 3 மடங்கு அதிகமாக விற்பனையாகியிருக்கின்றன. சுமார் 1550 லட்சம் புத்தகங்கள் விற்பனையாகியிருக்கின்றன. மேலும் இவரது புத்தகத்தை வெளியிடும் 'பாக்கெட் புக்ஸ்' பதிப்பகத்தார் (Pocket Books) வருடம் 365 நாட்களிலும், எட்டு மணி நேரத்தில் மணிக்கு 2000 பிரதிகள் விற்பனை செய்கின்றனர். இவரது புத்தகங்கள் உலகம் முழுவதும் 20 அந்நிய மொழியில் வெளியாகின்றன. இவர் தோன்றும் டெலிவிஷன் படங்கள் ஒரே சமயத்தில் 34 தேசங்களில் காட்டப்படுகின்றன. உலகம் முழுவதும் இவர் கதைகள்தாம் அதிகம் படிக்கப்படுகின்றன. இவர் தெற்குக் கலிபோர்னியாவில், லாஸ் ஏன்ஜல்ஸுக்கு 100 மைல் தென்கிழக்கே, 3000 ஏக்கர் பெரிய எஸ்டேட்டில் தனிப்பட்ட முறையில் வசித்து வருகின்றார். இவர் அந்த எஸ்டேட்டை தம்முடைய 49-வது வயதில் வாங்கினார். அதற்குமுன் நாடோடி மாதிரி ஊரைச் சுற்றிக்கொண்டு காருடன் சேர்க்கப்பட்ட துணைவண்டியில் (டிரயிலரில்) வசித்துக்கொண்டு கதைகளை எழுதிவந்தார். இவர் எழுதுவதேயில்லை. சொல்லிக்கொண்டே போவார். அது டேப் ரிகார்டில் பதிவாகிவரும். அவைகளை எடுத்து டைப் செய்து கவனிக்க ஆறு செயலாளர்கள் இருக்கின்றார்கள். இவர் தகப்பனார் ஒரு மைனிங் இஞ்சினியராதலால் சிறு வயதில் இவர் படிப்பு கெட்டுவிட்டது அடிக்கடி பள்ளிகளை மாற்றவேண்டிய சந்தர்ப்பங்கள்

ஏற்பட்டன. பிறகு ஒரு வக்கீலிடம் குமாஸ்தாவாக இருந்து சட்ட நுணுக்கங்களை அறிந்து பிறகு வக்கீலுக்குப் படித்து வக்கீல் தொழிலில் ஏழை, அனாதைகளுக்குப் பரிந்து வாதாடி வழக்கு நடத்தி அனுபவத்தை ஏற்படுத்திக்கொண்டார். அந்த ஆழ்ந்த அனுபவந்தான் அவர் கதைகள் எழுதத் தகுந்த அஸ்திவாரமாகிவிட்டது.

கிரிமினல் சட்டத்திலும் பினாலஜியிலும் நிபுணர் என்று கருதப்பட்டு அநேக போலீஸ் அதிகாரிகளின் கூட்டங்களில் சொற்பொழிவாற்றியுள்ளார். அவர் போதனைகள் விலையில்லா மாணிக்கமாகக் கருதப்படுகின்றன.

அவருடைய முதலில் புகழ்பெற்ற கதை "கூச்சலிடும் எலும்புக் கூடு", அவருடைய 34-வது வயதில் "ப்ளாக்மாஸ்க் மாகசைனில்" பிரசுரிக்கப்பட்டதாகும். அதிலிருந்து வாரத்திற்கு மூன்று அல்லது நான்கு கதைகள் வீதம் எழுதிப் பிரபல எழுத்தாளராகிவிட்டார். அவர் தம் 43-வது வயதில் முதன்முதல் "பெரிமேஸன்" என்னும் பெயருடன் கூடிய கதாபாத்திரத்தைச் சிருஷ்டித்து "வெல்வெட் நகங்கள்" என்னும் முதல் கதையில் அறிமுகப்படுத்தினார்.

பெரிமேஸன், எர்ல் ஸ்டான்லி கார்ட்னரின் உயர் தரக் சற்பனைப் பாத்திரம். பெரிமேஸன் ஒரு கிரிமினல் வக்கீல் மட்டுமல்லாமல், பெரிய துப்பறியும் நிபுணரும்கூட. போலீஸாரால் சரிவர உண்மையைக் கண்டு பிடிக்க முடியாமல் அவசரமாகக் கிடைத்த சாட்சியங்களைக்கொண்டு உண்மைக்கு மாறாகக் குற்றம் சாட்டப்பட்ட பல குற்றவாளிகளை, அந்த சிக்கல்களிலிருந்து காப்பாற்றி, துப்பறியும் சாமர்த்தியத்தால் உண்மைக் கொலையாளியைக் கண்டுபிடித்து, அவசர

சாட்சிகளைச் சாமர்த்தியமாகக் குறுக்கு விசாரணை செய்து, நிதானமில்லாமல் குற்றம் சாட்டப்பட்ட நிரபராதிகளைக் காப்பாற்றி இருக்கிறார்.

மிகப் புகழும் கீர்த்தியும் அடைந்தவர். சுயலாபத்தையும், பணத்தையுமே குறிக்கோளாகக் கொண்டவரல்லர். விடாமுயற்சியுடனும், சுறுசுறுப்பாகவும், தம் கைப் பணத்தையும் செலவழித்து, உண்மைக்கு உழைக்கும் ஏழை பங்காளன். அவருக்கு எப்பொழுதும் எல்லா வழக்குகளிலும் எல்லாக் கஷ்டங்களையும் சகித்துக்கொண்டு கூட ஒத்துழைத்தவர்கள், அவருடைய, அழகிய பெண்செயலாளர் (Private Secretary) உஷாவும், துப்பறியும் நிபுணர் அர்ஜுன் சிங்கும். இவர்களனைவரும் கார்டனரின் கற்பனைப் பாத்திரங்கள்!

சென்னை-17.

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி,
பதிப்பகத்தார்.

FOREWORD

For many years now I have been interested in telling the public about the importance of legal medicine.

Recently I have become interested in some of the Japanese doctors who have specialized in this field.

From time to time I have dedicated my books to leaders in the field of forensic medicine. I have watched the manner in which the real leaders in this field have weeded out the expert *witness* who was the bane of the profession years ago, and have developed the *expert* witness whose devotion is to truth, whose only loyalty is to scientific accuracy, whose sole objective is to assist justice by developing the true facts in the field of scientific research.

Few People realize the importance of what is being discovered in the field of blood and blood grouping.

Thanks to the dedicated work of the hematologists we are now able to bring the searchlight of scientific accuracy to bear upon many cases of disputed paternity. We are able to save many lives which would otherwise be lost.

Dr. Yokoyama tells me hematologists at present are able to classify approximately forty blood group systems, seventy blood group factors and more than 100,000,000,000 theoretically possible genotypes.

Constantly, day and night, these scientists are pushing back the frontiers of knowledge.

The Japanese scientist is peculiarly gifted in this field because he combines the patience of the Oriental with his inherent powers of observation, his passion for detail with the zealous devotion of a dedicated scientist.

I have recently come in contact with Dr. Mitsuo Yokoyama, who, while a relatively young man, has,

nevertheless achieved international recognition for his work in the field of hematology.

And because I would like to have my readers realize something of the vital importance of legal medicine and recognize the great strides which have been made by the Japanese medical profession in the field of research, I respectfully dedicate this book to my friend:

MITSUO YOKOYAMA, M.D., Ph.D.

—ERLE STANLEY GARDNER

இந்தத் துப்பறியும் நாவலில் வரும் பாத்திரங்கள்

[அந்தந்தப் பெயர்களின் அருகே, எர்ல் ஸ்டான்லி கார்ட்னர் எழுதிய ஆங்கிலப் புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.]

பெரிமேஸன்—PERRY MASON:

திறமை வாய்ந்த வக்கீல், இவரது சட்ட நுணுக்க அறிவும் திறமையான வாதமும் உண்மைக் குற்றவாளியை வெளிப்படுத்திவிடும்.

உஷாதேவி—DELLA STREET:

பெரிமேஸனுடைய அந்தரங்கக் காரியதரிசி; திறமை மிகுந்த புத்திசாலி.

பிரமிளா—GWYNN ELSTON:

வசீகரமான தோற்றமுடைய, புத்தகக் கம்பெனி விற்பனையாளர்; தன்னைக் கொல்வதற்குச் சதி நடக்கிறது என்று பயந்து பெரிமேஸன் உதவியைப் பெற வந்தவள்மீது கொலைக்குற்றமே சாட்டப்படுகிறது. அவளுக்காகப் பெரிமேஸன் கோர்ட்டில் ஆஜராகிறார்.

மரகதம்—NELL ARLINGTON GRIMES:

தன் கணவர் வேறு ஒரு பெயரை வைத்துக் கொண்டு, மற்றொரு பெண்ணை மணந்து வாழ்கிறார் என்பதை அறிந்தவுடன் அவள் உள்ளத்தில் எத்தகைய வேதனை தோன்றியதோ?

ரத்னம்—FELTING GRIMES: (Sometimes FRANKLINE GILLETT)

மரகதத்தின் கணவர் ஒருசமயம் ஜம்புலிங்கம் என்ற பெயருடன் மறைந்து இரட்டை வாழ்வு நடத்தி வருகிறார்.

அர்ஜுன்சிங்—PAUL DRAKE:

பெரிமேஸனுக்கு உதவும் துப்பறியும் நிபுணர். தனிக் காரியாலயம் வைத்திருக்கிறார்.

நந்தகுமார்—LIEUTENANT TRAGG :

போலீஸ் அதிகாரி; தனிப்பட்ட துப்பறியும் நிபுணருக்குச் சளைத்தவரல்லர் என்பதைப் புலப்படுத்த மிகத் துரிதமாக வழக்கை புலனாய்வு செய்பவர்.

நாகலிங்கம்—GORMAN GILLETT :

ஒரு செய்திப் பத்திரிகையில் வெளிவந்த பிரமுகர் ஒருவருடைய செய்தியைப் படித்ததிலிருந்து அவரைப் பயமுறுத்திப் பணம் பறித்து வாழ்க்கையை ஒதுக்குப் புறமாக மலையடிவார நகரத்தில் கழித்தவர்.

ஜம்புலிங்கம்—FRANKLINE GILLETT :

ரத்னம் என்ற பெயரும் இவருக்குண்டு. நாகலிங்கத்தின் மகனாகவும் இவர் மாறியதால் இவருக்கு நல்ல லாபம்.

முத்து—COLLINGTON HALSEY :

சங்கரலிங்கம் எஸ்டேட்டில் பணியாற்றினாலும் அந்தஸ்து மிகுந்த ஓர் உறவு இவனுக்கு உண்டு.

குமார்—CARL FREEMAN JASPER :

ரத்னம் சொந்த முறையில் வேலைக்கு அமர்த்திக் கொண்ட தனிப்பட்ட துப்பறியும் நிபுணர்.

சங்கரலிங்கம்—GEORGE BELDING BAXTER :

சங்கராபுரம் எஸ்டேட்டின் சொந்தக்காரர். இவரது ரிவால்வரை வேலைக்காரன் தொலைத்துவிட, அது பிரமிளாவிடம் சிக்க ரத்னம் அந்த ரிவால்வரால் சுடப்பட்டு இறந்துகிடக்க பிரமிளா கைதிக்கூண்டில் நிற்கும் நிலை ஏற்பட்டது.

சங்கராபுரம் எஸ்டேட் வேலைக்காரன்—MINNIE CROWDER :

சங்கராபுரம் எஸ்டேட் வேலைக்காரன்தான் எனினும் சங்கரலிங்கம் இவனிடம் தந்த ரிவால்வரை நழுவ விட்டுவிடாமல் இருந்திருந்தால்......

1

வரவேற்பு அறையில் வனிதை !

வக்கீல் பெரிமேஸனுடைய காரியாலயம் எட்டடுக்கு மாடியுடன் கூடிய அந்தக் கம்பீரமான கட்டடத்தில் மூன்றாவது மாடியில் இருந்தது.

அந்த மூன்றாவது மாடியின் ஒருபக்கத்து விசாலமான பகுதியில் அவருடைய அலுவல்கள் நடைபெற்று வந்தன. பெரிமேஸன் தனது அலுவல்களைக் கவனிப்பதற்குத் தனி அறை இருந்தது.

பெரிமேஸனுடைய ஆபீஸ் அறைக்குள் தள்ளுகதவைத் திறந்துகொண்டே அவருடைய அந்தரங்கக் காரியதரிசி **உஷாதேவி** வழக்கத்துக்கு மாறாகத் தன் பின்னால் கையில் எதையோ மறைத்துக்கொண்டு, கண்களில் குறும்புத்தனம் மிளிர, உதடுகளில் புன்சிரிப்பு தவழ ஏதோ கேட்டுக் கொண்டே நுழைந்தாள்.

மேஜையின் எதிரே இருந்த சுழல் நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்துகொண்ட பெரிமேஸன் என்னவென்று வினவினார்.

உஷா : எனக்குச் சில விஷயங்கள் தெளிவாகத் தெரிய வேண்டும்.

பெரி: கேளேன், சொல்கிறேன்.

உஷா: டெலிபோனில் ஒருவர் பேசுவது ரிசீவரில் அப்படியே எவ்வாறு மின்சார அலைகளாக மாற்றப்பட்டு மீண்டும் ஒலியாக மாறிக் கேட்கிறது?

பெரி: டெலிபோனில் துவாரத்தில் பணத்தைப் போடுவதால் அவ்விதம் வேலை செய்கிறது!

உஷா: லண்டனில் இரவு மணி ஒன்று இருக்கும் போது இந்தியாவில் மணி என்ன?

பெரி: அவர்கள் தூங்கும்போது இங்கே விழித்துக் கொண்டு இருக்கிறோம்.

உஷா: அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியா பாலைவனத்தில் கோடைகாலத்தில் நிமிர்ந்து நோக்கினால் ஏன் உயந்த மலைச்சிகரங்கள்மேல் பனி படர்ந்திருப்பது தெரிகிறது?

வக்கீல் பெரிமேஸன், எரிச்சலும், கோபமும் கொண்டு: "உன்னைப் பளீரென்று இரண்டு அறை கொடுக்க முடியாதபடி நீ பெரியவளாக வளர்ந்துவிட்டாய். உன்னை ஒழித்துக் கட்டுவோமென்றால் அது முடியாத அளவுக்கு நீ மிகவும் உபயோகமுடையவளாய் இருக்கிறாய். நீ ஏன் இதுபோன்ற குழந்தைத்தனமான கேள்விகளைக் கேட்கிறாய்?"

உஷாதேவி உதடுகளில் குறும்புத்தனம் மிளிர, "இது வரை ஒரே மாதிரியாக கொலை, கொள்ளை, கற்பழித்தல் போன்ற வழக்குகளே வேறு பெயர் மாற்றங்கொண்டு வருகின்றன. ஒரே மாதிரியான நிலையில்தான் வக்கீல் தொழிலும் நடைபெறுகிறது என்று வருத்தப்பட்டுக்கொண்டிருந்தீர்களே, இப்பொழுது உங்கள் கவலையையும் வருத்தத்தையும் போக்கப் புதுமாதிரியாக ஒரு கேஸ் வந்திருக்கிறது" என்றாள்.

பெரிமேஸன் அவளை உற்றுநோக்கி, "கலிபோர்னியா பனிமலைக்கும், டெலிபோன் ஒலி அலைக்கும், புதிய கேஸ் வந்திருப்பதற்கும் என்ன ஒற்றுமை, என்ன தொடர்பு இருக்கிறது?" என்று கேட்டார்.

உஷா, தன் பின்னால் கரங்களில் மறைத்து வைத்திருந்த ஒரு புத்தகத்தைக் காண்பித்து, "இந்தப் புத்தகத்தில் உங்கள் குழந்தை கேட்கக்கூடிய 37 கேள்விகள் இருக்கின்றன. அவற்றிற்குப் பதில் தெரியுமா? மேலும் இந்தப் புத்தகத்தின் கடைசியில் ஒரு கூப்பன் இருக்கிறது. அதில் பெயர், விலாசம் எழுதி ஆர்டர் கொடுத்தால் 50 கேள்விகளுக்கு விரிவாகப் பதில் கூறும் பெரிய புத்தகம் அனுப்புவதற்குப் பிரசுரகர்த்தர்கள் ஏற்பாடு செய்யும் விவரம் அடங்கிய நிபந்தனைத்தான் இருக்கிறது" என்று புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டினாள். அதில் பிரமிளாதேவியின் பெயர், விலாசம், அவளுடைய டெலிபோன் நம்பர் குறிக்கப் பட்டிருந்தன.

பெரி: நான் குழந்தை ஒன்றுக்குத் தகப்பனாக ஆக வேண்டும்; அதற்காக இப்புத்தகம் வாங்குவதற்கு இந்தக் கூப்பனில் கையெழுத்திட வேண்டும் என்கிறாயா?

உஷா: இல்லை. இல்லை. குமாரி பிரமிளாதேவி தங்களைச் சந்திப்பதற்காக வரவேற்பாளர் அறையில் பொறுமையாக உட்கார்ந்துகொண்டிருக்கிறாள். 'விசிட்டிங் கார்டு இருந்தால் கொடுங்கள், தங்களிடம் கொடுக்கிறேன்' என்று கேட்டதற்கு, தன் பெயர், விலாசம் அடங்கிய இந்தச் சிறு புத்தகத்தைக் கொடுத்தாள்.

பெரிமேஸன்: "நான் புத்தகம் வாங்கும் நிலையிலா இப்போது இருக்கிறேன்? தலைக்குமேல் வேலை இருக்கும்போது அவளை எதற்கு என்னைச் சந்திப்பதற்குக் காக்க வைத்திருக்கிறாய்?" என்று குறைபட்டுக்கொண்டே உஷா கொடுத்த புத்தகத்தை வாங்கிப் பக்கங்களைத் திருப்பியவாறு, "தூந்திரப் பிரதேசத்துப் பிராணிகள் மாரிக்காலத்தை எப்படிக் கழிக்கின்றன என்றோ, கோடைகாலத்தில் மாரிக்காலத்தை விட பகல் அதிகம் என்றோ, கண்ணாடிப் பாத்திரத்தில் வைத்திருக்கும் தண்ணீரைவிட, மட்பாண்டத்தில் இருக்கும் தண்ணீர் ஏன் அதிகக் குளிர்ச்சியாய் இருக்கிறது என்றோ தெரிந்துகொள்ளாமலேயே என்னால் காலத்தைக் கழிக்க முடியும்" என்று சொன்னார்.

உஷா உடனே குறுக்கிட்டு, "அதில்லை விஷயம். பிரமிளா தங்களிடம் புத்தகத்தை விற்க வரவில்லை. வங்காள பாஷை வார்த்தை ஒன்றை மொழிபெயர்த்துச் சொல்லுமாறும், அவளிடம் உள்ள மெல்லிய காகிதம் ஒன்றில் விஷம் கலந்திருக்கிறதா என்பதைக் கண்டறிவதற்குமே அவள் தங்களைக் காண வந்திருக்கிறாள்" என்றாள்.

வக்கீல், "ம்...சரிதான்" என்று அலட்சியமாகக் கூறினார். உஷா மேலும் தொடர்ந்து, "இப்பொழுது அவளிடமிருந்து அவ்வளவுதான் நான் அறிய முடிந்தது. பிறகு மேலும் அதிகம் அறியலாம். அவளைப் பார்த்தால் மனநிலை சரியில்லாதவள்போல் தோன்றுகிறது. மிகவும் உணர்ச்சி வசப்பட்டவள்போல் தோன்றுகிறது. கவர்ச்சிகரமான தோற்றம்" என்றாள்:

பெரி: அவளுக்கு என்ன வயதிருக்கும்?

உஷா: இருபது வயதிருக்கும் என்று தோன்றுகிறது. அவள் பார்வை, பேச்சு, விழிகள் இவற்றைக் கூர்ந்து கவனிக்கும்போது சற்றுக் காமவசப்பட்டவளாகவும் இருக்கக் கூடும் என்று தோன்றுகிறது என்பதை உங்களுக்கு ரகசியமாகக் கூறுகிறேன்.

பெரி: பார்த்தாயா, பார்த்தாயா? நான் சிறிது நேரத்திற்கு முன்புதான் வக்கீல் தொழிலில் பழைய வழியே செல்லவேண்டியிருக்கிறது என்று குறைப்பட்டுக்கொண்டேன். அவள் கையில் வைத்திருக்கும் கசங்கிய காகிதத்தில் விஷம் தோய்ந்து இருக்கிறது என்றா பார்க்கச் சொன்னாள்?

உஷா: ஆமாம்; தனக்கு யாரோ விஷம் வைக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்று கவலைப்படுகிறாள்.

பெரி: அவளுடைய சிநேகிதியின் தவறாக இருக்கலாம். என்றாலும் ருசிகரமான விவகாரமாகத் தோன்றவில்லையே? எனினும் அவளை வரச்சொல் பார்ப்போம்.

பிரமிளா என்ற அந்த மங்கையை பெரிமேஸனிடம் அழைத்து வருவதற்காக, உஷா வரவேற்பு அறையை நோக்கிச் சென்றாள்.

2

பானத்தில் விஷம்—பிரமிளா-மேஸன் சந்திப்பு

வக்கீலின் அறைக்கதவைத் திறந்துகொண்டு மிஸ் பிரமிளா உள்ளே நுழைந்தாள். தன்னுடைய புடவைத் தலைப்பைச் சரிசெய்துகொண்டு சற்றே விலகியிருந்த மேலாடையை இழுத்துப் போர்த்துக்கொண்டு, வக்கீல் பெரி மேஸன் எதிரே நாற்காலியில் அமர்ந்தாள். பெரிமேஸன் மேஜைமீதிருந்த 'பைல்களைப்' புரட்டிக்கொண்டே அவளை நோக்கி, "நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்? என்ன செய்கிறீர்கள் என்பதை முதலில் தெரிவித்தால் நல்லது" என்றார்.

பிரமிளா தனது கையிலுள்ள 'ஹாண்ட்பேக்கை'த் திறந்து, பிறகு மூடி, "நான் ஒரு பிரபல புத்தகக் கம்பெனியின் விற்பனைப் பிரதிநிதியாக வேலை பார்க்கிறேன். அவர்கள் வெளியிடும் குழந்தைகள் சம்பந்தமான புத்தகங்களை விற்பனை செய்யும் இலாகாவில் எனக்கு உத்தியோகம். குழந்தைகள் சம்பந்தமான புத்தகம் என்று பெயரே தவிர குழந்தைகள் கேட்கும் சந்தேகம் நிறைந்த பல கேள்விகளுக்குப் பெற்றோர்கள் கூறும் பதிலையும், மேலும் பெரியவர்கள் தெரிந்துகொள்ள வேண்டிய உலகிலுள்ள பல விஷயங்களையும் தெரிவிக்கும் கருத்துக்கள் பல நிறைந்த

புத்தகங்களை விற்பனை செய்வது எனக்குக் கொடுக்கப்பட்ட முக்கிய வேலை. அவர்கள் ஒவ்வொருநாளும் குறிப்பிட்ட சில இடங்களை நிர்ணயித்துப் புத்தகம் வாங்கக்கூடிய பெரிய மனிதர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு அங்கே போகுமாறு சொல்வார்கள்'' என்று அவள் தன் தொழிலைப் பற்றிச் சுருக்கமாகச் சொன்னாள்.

பெரிமேஸன் அவளுடைய பேச்சில் குறுக்கிட்டு ''நான் பெற்றோராவதற்கு இப்பொழுது தயாராய் ஆகவில்லை'' என்றார்.

பிரமிளா சிரித்துக்கொண்டே, ''நானும் இப்பொழுது உங்களிடம் புத்தகம் விற்க வரவில்லை. என் உயிருக்கு ஏற்படப்போகும் ஓர் ஆபத்தைக் குறித்துத் தங்களிடம் தெரிவித்து யோசனை கேட்பதற்காக வந்தேன். எனக்கு ஏற்பட்டுள்ள பெரும் ஆபத்தை நீக்குவதற்கு உங்களுடைய ஆலோசனை பெரிதும் தேவை'' என்றாள்.

பெரிமேஸன் அவளை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்து, ''உன்னை யார் கொலை செய்ய எத்தனிக்கிறார்கள்? எதற்காக அப்படி அவர்கள் செய்ய முயற்சி செய்கிறார்கள் என்ற விஷயங்களையெல்லாம் தெளிவாக எனக்குச் சொன்னால்தான் நல்லது. ஒருவேளை பிறர் கொன்றுவிடுவார்கள் என்று நீ கற்பனை செய்துகொண்டு பயந்துகூட இருக்கலாம் அல்லவா?'' என்று கேட்டார்.

''நான் பயந்து கற்பனை செய்துகொள்ளவில்லை. உறுதியாக ஏற்பட்ட சில சம்பவங்களைப் பார்த்தபிறகுதான் எனக்குப் பெரும் கவலை தோன்றிவிட்டது. நான் என்னைப் பற்றிய விவரங்கள் அனைத்தையும் எடுத்துச் சொன்னால்தான் உங்களுக்கு முழுவதும் புரியும்'' என்றாள் பிரமிளா.

சொல்லுமாறு தலையசைத்தார் வக்கீல்.

''நான் வேலை செய்யும் அந்தப் பிரபல புத்தகக் கம்பெனியைப் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். அவர்கள் புத்தகங்களை விற்பதற்குக் கையாளும் முறை நூதனமானது. வெவ்வேறு விதமான புத்தகங்களை யார் யார் வாங்கு

வார்கள் என்பதற்கான பட்டியலை அவர்கள் சேகரித்து வைக்கிறார்கள். தினமும் சுமார் பத்துப் பேர்களையாவது பார்க்கவேண்டுமென்று என்னிடம் கொடுப்பார்கள். நான் தினமும் அவர்களுடைய காரியாலயத்திற்குச் செல்ல வேண்டிய அவசியமில்லை. யார் யாரைப் பார்க்கவேண்டுமென்பதற்கான பட்டியலை அவர்கள் தபாலில் அனுப்பி விடுவார்கள் அல்லது டெலிபோனில் கூப்பிட்டுச் சொல்லுவார்கள்.''

''நீ இருக்கும் இடத்தில் டெலிபோன் இருக்கிறதா?'' என்று வக்கீல் கேட்டார்.

''ஆமாம், நான் வசிக்கும் வீட்டில் இருக்கிறது. நான் தினமும் முன்பே பார்த்தவர்களைத் தவிர ஒவ்வொருநாளும் பத்து புதிய நபர்களைப் பார்க்கவேண்டும். புத்தக விற்பனையின்பேரில் எனக்குக் கமிஷனும் உண்டு. நல்ல வருமானம் இதில் எனக்கு வருகிறது. எனக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் குடும்பங்கள் அனேகமாக இரண்டு, மூன்றுக்கு மேற்பட்ட குழந்தைகள் உடைய நடுத்தரக் குடும்பத்தவராகவும் சற்று வசதியுடைய குடும்பத்தவருமாகத்தான் இருப்பார்கள்'' என்றாள் பிரமிளா.

வக்கீல்: நீ தங்கியிருக்கும் இடம் ஹோட்டல் அறையா? அல்லது தனிப்பட்ட வீடா?

பிரமிளா: ''எனக்குச் சரியான வீடு இந்த நகரத்தில் கிடைக்கவில்லை. என்னுடைய சிநேகிதி மரகதம் சிறு வயதில் என்னுடன் படித்தவள். அவளை நான் தற்செயலாகச் சந்தித்தேன். அவள் என்னைத் தன்னுடன் வந்து தங்குமாறு மிகவும் வற்புறுத்தினாள். அவள் வசிக்கும் வீடு சிறியதாயினும் அழகானது. அவளைத் தவிர அந்த வீட்டில் வேறு குடித்தனம் கிடையாது. அதனால் எனக்குத் தனியே ஓர் அறையை ஒழித்து விட்டிருந்தாள். ஆனால் அவளுடைய கணவன் ரத்னம் ஒரு மாதிரியான நபர். அவருடைய பார்வையைக் கண்டாலே எனக்குப் பிடிக்காது. நான் குளிக்கும் அறையிலிருந்து திரும்பும்பொழுதும், அறைக்கு

வந்து உடையை மாற்றிக்கொள்ளும்பொழுதும் அசந்தர்ப்பமாக நான் கட்டிலில் ஒரு மாதிரியாகப் படுத்திருக்கும்பொழுதும் அவர் பார்க்கும் பார்வை என்ன என்னவோ செய்யும். அதனால் நான் மிகவும் வேதனை அடைந்து பலமுறை என்னுடைய சிநேகிதியிடம் மெல்ல அவளுடைய கணவரைப்பற்றிப் புகார் செய்தேன். என் சிநேகிதி மரகதம் மிகவும் நல்லவள். அவள் சிரித்துக்கொண்டே, 'எல்லா ஆண்களுக்கும் இருக்கும் குணத்தையும் குறைபாட்டையும்தான் நீயும் சொல்கிறாய். அழகான பெண்ணைத் திரும்பிப் பார்க்காத ஆண் இந்த உலகத்தில் யார் இருக்கிறார்கள்? ஆனால், நீ சர்வ ஜாக்கிரதையாக இருப்பாய் என்ற தைரியத்தினாலும், உன்மீது எனக்குப் பூரண நம்பிக்கை இருப்பதாலும் என் கணவர் உன்னை அடிக்கடி ஒரு மாதிரியாகப் பார்த்தாலும் நான் தைரியமாக இருக்கிறேன்' என்றாள். ஆனால், அவள் கணவரோ என்னை எப்படியாவது நெருங்கிச் சந்தித்துப் பேசுவதற்கும், என்னோடு பழகுவதற்கும் பல சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொள்ள முடிவு செய்தார். அவர் முகத்தைக்கூட நான் ஏறிட்டுப் பார்ப்பதில்லை. இன்னும் சொல்லப்போனால் அவரை நான் சற்று அவமரியாதையாகக்கூடப் பேசி ஒதுக்கி இருக்கிறேன் என்று சொல்லலாம்" என்று பிரமிளா சொல்லி வரும்போது வக்கீல் குறுக்கிட்டு, "ஒரு தடவையாவது ரத்னம் நினைத்தது நிறைவேறச் சந்தர்ப்பம் ஏற்பட்டு இருக்கிறதா?" என்று கேட்டார்.

பிரமிளா சற்றுக் கோபத்துடன், "என் உயிர் போனாலுங்கூட அவர் முகத்தை நான் ஏறிட்டுப் பார்க்கமாட்டேன்; அவருக்கு நான் துளிகூட இடம் கொடுக்கமாட்டேன், இசையமாட்டேன். இவ்வளவு நாட்கள் கன்னியாகக் காலம் கழித்து அதிலிருந்து மாறுவதற்குப் போயும் போயும் அவரிடமா சிக்கவேண்டும்?" என்றாள்.

"ஓஹோ! சரி; எனக்கு அதிக வேலை இருக்கிறது. அதனால் உன் கதையைச் சீக்கிரம் சொல்லி முடி" என்று வக்கீல் அவளை அவசரப்படுத்தினார்.

"என்னுடைய சிநேகிதி மரகதத்தினுடைய கணவர் என்ன தொழில் செய்கிறார், எங்கே போகிறார், அவருடைய காரியாலயம் எங்கே என்பதுகூட எனக்குத் தெரியாது. ஏன் அவருடைய மனைவிக்குக்கூடத் தெரியாது. அவர் காலையில் சென்றாரானால் இரவு நெடுநேரம் கழித்துத் திரும்பிவருவார். ஆனால், அவரிடம் ஏராளமாகப் பணம் புழங்கிக்கொண்டிருந்தது. உயர்தரமான உடைகளையே அவர் உடுத்துவார். வீட்டிற்கு வரும்பொழுதுகூட 'டாக்ஸி'யில்தான் வருவார். நான் சில சமயங்களில் மரகதத்திடம் கேட்பேன், அவளுடைய கணவருடைய தொழில், வருமானம் இவை பற்றி. ஆனால், அவைகளைப்பற்றி அவள் கவலைப்பட்டதாகவே தெரியவில்லை. 'குடும்பம் நடத்துவதற்குத் தேவையான பணமும் சுகமாக வாழ்வதற்கு வேண்டிய வசதியும் இருந்துவிட்டால் கணவருக்கு எந்த வேலையாக இருந்தால் என்ன?' என்று சிரித்துக்கொண்டே சொல்லிவிடுவாள். ஆனால், அவளைப்போல் எள்ளளவும் கணவர்மீது சந்தேகப்படாதவர்களைப் பார்த்ததே கிடையாது. கணவனுடைய வேலை, வருமானம் தெரிந்துகொள்ளாமலும் கணவன் பிற பெண்களை முறைத்துப் பார்ப்பதைப்பற்றிச் சந்தேகம் கொள்ளாமலும் இருக்கும் ஒரு பெண் மிகவும் அபூர்வமானவளே!"

வக்கீல் குறுக்கிட்டு, "உன் தோழியைப்பற்றி நீ நற்சான்றிதழ் கொடுத்தது போதும்; மேற்கொண்டுள்ள அவசியமுள்ள விஷயங்களைச் சீக்கிரம் சொல்லு" என்றார்.

"நேற்றைய தினம் எனக்கு என் காரியாலயத்திலிருந்து யார் யாரைப் பார்க்கவேண்டுமென்ற பட்டியல் வந்தது. அதில் ஜம்புலிங்கம் என்ற பெயரும் அவருடைய விலாசமும் இருந்தது. அவர் பெரும் பணக்காரர். சங்கராபுரம் எஸ்டேட் அருகில் அவருடைய பங்களா இருந்தது. நான் என்னுடைய வழக்கப்படி அந்த விலாசத்திற்குப் புறப்பட்டுச் சென்றேன். எப்பொழுதுமே குறிப்பிட்ட விலாசத்துக் குடும்பத் தலைவரைப் பார்ப்பதற்கு முன்பு அந்த வீட்டுக் குடும்பத் தலைவியைப் பார்த்து அவர்களிடம் சுமுகமாகப்

பழகி அவர்களைத் திருப்திசெய்து சரிசெய்துகொண்டு பிறகுதான் அந்த வீட்டுத் தலைவரிடம் செல்வது வழக்கம். ஏனெனில் மனைவி சரி என்று சொன்னால் அதற்குச் சம்மதிக் காத கணவர் உலகத்தில் உண்டா? அதைப்போல் நான் அந்த வீட்டிற்கும் அந்த வீட்டு எஜமானியை முதலில் பார்ப் பதற்காகச் சென்றேன். எங்கள் பிரசுராலயத்தில் நாங்கள் சுத்தமாகவும் கவர்ச்சிகரமாகவும் ஆடை அணிந்து செல்வ தற்கு வேண்டிய சௌகரியம் செய்துகொடுத்து இருக் கிறார்கள். அதற்கு ஏற்ற பணமும் தருகிறார்கள். புத்தக விற்பனைக்குப் பெண்களை நியமிப்பதால், அதிலும் கவர்ச்சி கரமான அழகுடைய பெண்களை நியமிப்பதால் வெற்றி நிச்சயம் என்பது அவர்கள் கொண்ட முடிவு. அதனால்தான் அந்த வேலைக்கு இன்டர்வியூவுக்கு வந்த நூறு பேர்களில் என்னைச் சேர்த்து ஐந்து பேரை மட்டும்தான் அவர்கள் தேர்ந்தெடுத்தார்கள். நான் என்னைப்பற்றிப் புகழ்ந்து சொல்வதாக நினைக்கவேண்டாம். என்னுடைய இயற்கை அழகும் நான் செய்துகொள்ளும் 'மேக்கப்பு'ம் என் தொழி லில் வெற்றியைத் தாராளமாகத் தேடித்தருகின்றன. ஆனால், சில சமயங்களில் சில வீடுகளில் பெண்களைச் சந்தித்த பிறகு அவர்கள் அந்த வீட்டு ஆண்பிள்ளைகளைச் சந்திக்க என்னை அனுமதிப்பதில்லை. தங்கள் கணவரின் குணத்தை அறிந்த அவர்கள் என்னுடன் பழகினால் என்னைக்கண்டு தம் கணவன்மார் மயங்கிவிடப் போகிறார்கள் என்பதற்காகத் தாங்களே பதில் சொல்லி அனுப்பிவிடுவார்கள். நான் ஜம்புலிங்கத்தின் வீட்டிற்குச் சென்றவுடனேயே அங்கு ஆச்சர்யம் ஒன்று காத்திருந்தது. ஜம்புலிங்கமும் மரகதத்தின் கணவர் ரத்னமும் ஒரே ஆசாமிதான் என்பதைத் தெரிந்து கொண்டேன்'' என்று கூறிப் பிரமிளா சற்று நிறுத் தினாள்.

வக்கீல் தம் பார்வையை உயர்த்தி, ''உனக்கு எப்படி அது தெரியும்?'' என்று கேட்டார்.

பிரமிளா பெருமூச்சு விட்டவாறு, ''நான் ஜம்புலிங்கத் தின் மனைவியைச் சந்தித்து அவளிடம் புத்தகத்தைப்பற்றி

பேசிக்கொண்டிருந்தேன். அப்பொழுது அங்கே ஏழு வய துள்ள சிறுவன் ஒருவன்—அவளுடைய மகன்—வந்தான். அவனைப் பார்த்தவுடனேயே நான் திடுக்கிட்டேன். அவன் அப்படியே ரத்னத்தை உரித்ததுபோல் தோற்றமளித்தான். ஒரு கணம் என்னால் பேசவே முடியவில்லை. வந்த காரியத் தையும் தெரிவிக்காமல் அந்தப் பையனை உற்று நோக்கிக் கொண்டிருந்தேன்'' என்று அவள் சொன்னவுடன்,

வக்கீல், ''உலகத்தில் சில சந்தர்ப்பங்களில் ஒரே மாதிரி யாக அச்சில் வார்த்ததுபோல் ஒற்றுமையுள்ள மனிதர்கள் இருப்பது வழக்கம்; அதனால் தப்பு அபிப்பிராயம் கொள்ள லாமா?'' என்று கேட்டார்.

''அதுவும் எனக்குத் தெரியும். ஆனால், நான் பிறகு அங்கே நடந்த விஷயங்களிலிருந்தும் சந்தர்ப்பச் சூழ்நிலைகளி லிருந்தும் நான் நினைத்தது சரிதான் என்பதை ஊர்ஜிதம் செய்துகொண்டுவிட்டேன். ரத்னமும், ஜம்புலிங்கமும் ஒரே ஒருவர்தான் என்று எனக்கேற்பட்ட அதிர்ச்சியிலிருந்து நான் மீண்டு அந்தச் சிறுவனை நோக்கிப் பேச்சுக் கொடுத் தேன். அவனுடைய தந்தையைப்பற்றி வினவினேன். என் னுடைய சிநேகிதி மரகதத்தின் கணவர் ஒரு சமயம் வடக்கே கல்கத்தா அருகே வேலையாய் இருந்தது தெரியும். நான் அந்தப் பையனை விசாரித்தவுடனேயே அவன் உள்ளே ஓடிச் சென்று, தனது தந்தையின் புகைப்படத்தைக் கொண்டு வந்து, 'என் தந்தை வங்காளத்தில் வேலை பார்க்கிறார்' என்று கூறினான். அந்தப் புகைப்படத்தைப் பார்த்தவுடன் என்னுடைய சந்தேகம் நிவர்த்தியாகியது. அந்தப் படத்தில் இருந்தவரும் என் சிநேகிதியின் கணவர் ரத்னமும் ஒரே நபர்தான். வந்த வேலையை விட்டுவிட்டு நான் அந்தப் பையனுடனேயே பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்து அவ னுடைய அம்மா அவனை விளையாடப் போகச்சொல்லி அதட்டி அனுப்பிவிட்டாள்.''

வக்கீல்: நீ அந்தப் பெண்ணிடம் புகைப்படத்தில் தெரிந்த உருவ ஒற்றுமையைப்பற்றி ஏதாவது கேட் டாயா?

பிரமிளா, "நான் அம்மாதிரி ஒன்றும் கேட்கவில்லை. என் உள்ளத்திலே எழுந்த பரபரப்பையும் உணர்ச்சியையும் சிரமப்பட்டு அடக்கிக்கொண்டு நான் வந்த காரியத்தைப் பற்றி மட்டும் அவளிடம் தெரிவித்தேன். அவளும் இன்று மாலை என்னை வரச் சொல்லிவிட்டாள். நானும் அங்கிருந்து உடனே புறப்பட்டு வந்துவிட்டேன். அந்தப் புகைப் படத்தில் வங்காள பாஷையில் எழுதியிருந்த வார்த்தைகளை மட்டும் நன்றாக மனத்தில் பதிய வைத்துக்கொண்டு அதே மாதிரி இதோ எழுதிக்கொண்டு வந்திருக்கிறேன். உங்களுக்கு வங்காள பாஷை தெரிந்திருந்தால் இதைப் படித்துப் பார்த்துக் கூறுங்கள்" என்று கூறி தன்னுடைய பையிலிருந்து அவள் எழுதி வைத்திருந்த ஒரு துண்டுக் கடிதத்தை எடுத்துக் கொடுத்தாள்.

வக்கீல்: நீ எப்பொழுது ஜம்புலிங்கத்தின் மனைவியைப் பார்த்தாய்?

பிரமிளா: நேற்றுப் பகல்.

வக்கீல்: அவளுடைய புருஷன் இன்று சாயந்திரம் வீட்டிற்கு வருவதால் உன்னை அவள் மீண்டும் வந்து சந்திக்கச் சொன்னாளா?

பிரமிளா: அதைப்பற்றி எனக்கு நிச்சயமாகத் தெரியாது. ஆனால் இரவு 8½ மணிக்கு வருமாறு மட்டும் சொன்னாள்.

வக்கீல்: என்னமோ விஷயம் என்று சொன்னாயே அதைப்பற்றி இதுவரை ஒன்றும் சொல்லவில்லையே. அது என்ன விஷயம்?

பிரமிளா: நான் நேற்று இரவு வீட்டிற்குத் திரும்பினேன். என் தோழி மரகதம் எப்பொழுதும்போல் என்னை வரவேற்றாள். தினம் விசாரிப்பதுபோல் எங்கெங்கே சென்றேன், யார் யாரைப் பார்த்தேன், அங்கு ஏற்பட்ட அனுபவங்களைப் பற்றியெல்லாம் விசாரித்தாள். அவளுக்கு நான் செல்லப்போகும் இடங்களைப்பற்றி முன்கூட்டியே தெரியும். தபாலில் வரும் பட்டியலை அவளிடம் நான் காட்டிச் சில இடங்களுக்குப் போகும் வழியைக் கேட்டுக் கொள்வேன். அதைப்போல் நேற்று வந்திருந்த பட்டியலையும் அவளிடம் காட்டினேன். நான் இல்லாதபொழுது தபாலில் என் காரியாலயத்திலிருந்து வரும் கடிதத்தை அவளும் பிரித்துப் பார்த்து என் மேஜைமீது வைத்துவிடுவாள். அவசரமான காரியமாக இருந்தால் நான் அந்த நேரத்தில் வெளியே எங்கு இருப்பேன் என்பதைத் தெரிந்து கொண்டு அந்த இடத்திற்குப் போன் செய்வாள். அன்று நான் போகவேண்டிய பட்டியலை அவள் முன்பே பார்த்திருப்பாள் என்பதனால் நான் ஜம்புலிங்கத்தின் வீட்டிற்குச் சென்றதைப்பற்றி மறைக்காமல் கூறிவிட்டேன். ஜம்புலிங்கத்தின் மனைவியைச் சந்தித்ததுபற்றித் தெரிவித்தேன்.

வக்கீல்: உருவ ஒற்றுமையைப்பற்றி, அதாவது உன் தோழியின் கணவரும் ஜம்புலிங்கமும் ஒரே தோற்றமுடையவராய் இருப்பதைப்பற்றி அவளிடம் கூறினாயா?

பிரமிளா: இல்லை. ஆனால், இரவு ரத்னம் சீக்கிரமாகவே வீட்டிற்கு வந்துவிட்டார். மூவரும் உட்கார்ந்து வழக்கம் போல் நடுஹாலில் பேசிக்கொண்டிருந்தோம் தான் புதிதாக பழரச மாத்திரை ஒன்று வாங்கி வந்திருப்பதாகவும் அதைத் தண்ணீரில் போட்டவுடன் பழரசமாகிவிடும் என்று சொல்லிக்கொண்டே கிளாஸ் டம்ளரில் அவர் குளிர் பானம் ஒன்றைத் தயாரித்துக் கொடுத்தார். எனக்கு உள்ளத்தில் ஏதோ திடீரென்று சந்தேகம் தோன்றியது. நான் மெதுவாக என் அறைக்குள் செல்வதுபோல் சென்று அதைக் கீழே ஊற்றிவிட்டு வந்துவிட்டேன் பிறகு இரவு எல்லோரும் படுக்கச்சென்ற பிறகு பழரசம் கொட்டிய இடத்தில் பிளாட்டிங் பேப்பரை வைத்து ஒத்தி எடுத்துக் கொண்டேன். அதில் 'ஸ்டிச்னைன் விஷம்' கலந்திருக்கும் என்ற சந்தேகம் எனக்குத் தோன்றியது. ஏனென்றால் ஜம்புலிங்கமாகவும் ரத்னமாகவும் இரட்டைவேடம் போடும் அவர் தன்னுடைய பொய் வேஷம் என்மூலம் தம்முடைய மனைவி மரகதத்திற்குத் தெரிந்துவிடக்கூடாது என்று பயந்து என்னைக் கொல்வதற்காக இப்படி விஷம் கலந்து

கொடுத்திருப்பார் என்று தோன்றியது. மரகதத்திற்குக் குழந்தை கிடையாது. என்றாலும் அவள் தன் கணவனிடம் மிகுந்த ஆசை வைத்திருந்தாள். குடும்பமும் ஒற்றுமையாக நடந்துவந்தது. தன் கணவன் மற்றொரு பெண்ணை மணந்துகொண்டு அதன்மூலம் அவருக்கு ஒரு குழந்தையும் இருக்கும் விஷயம் மரகதத்திற்குத் தெரிந்துவிட்டால், தன் கணவரின் மறுதார விவாகத்திற்கு அவரை எதிர்த்து அவர்மீது வழக்குத் தொடுப்பதற்குக்கூட அவள் முடிவு செய்யலாம். அதனால் ரத்னம் தன்னைப்பற்றிய ரகசியம் அறிந்த என்னைக் கொலை செய்வதற்குத் திட்டமிட்டிருக்கலாம்.

வக்கீல்: ஓஹோ! அப்படியானால் இதில் யார் ரத்னத்தின் மனைவி? யார் அவருடைய வைப்பாட்டி? இருவரும் தாங்கள்தாம் உண்மை மனைவிகள் என்றல்லவா நினைப்பார்கள்?

பிரமிளா: அது எனக்குத் தெரியாது. அங்கே ஜம்புலிங்கத்தின் மனைவி நான் அவருடைய மகனுடன் பேசிக்கொண்டிருப்பதையும் அந்தப் படத்தைப் பார்த்துக்கொண்டிருப்பதையும் கண்டவுடன் மேலும் அவன் பேசுவதை உடனே தடுத்துவிட அவனை விளையாட அனுப்பியதிலிருந்து, கள்ள நட்பு ஏற்பட்டு அதன் மூலமாக சட்டவிரோதமாகப் பிறந்த பையனாய் அவன் இருக்கலாம் என்று ஊகித்தேன். ஒருவேளை பிறகு கல்யாணம் செய்துகொண்டும் இருக்கலாம். நான் அந்தப் படத்தைப் பார்த்ததிலிருந்து அவள் எனக்கு உண்மை தெரியும் என்பதை ஊகித்துக் கொண்டுவிட்டாள் என்று நினைக்கிறேன். அவள் அன்று இரவு ஜம்புலிங்கம் வந்தவுடன் சொல்லியிருக்கலாம்.

சற்று நேரம் அங்கு மௌனம் நிலவியது.

வக்கீல்: அப்படியானால் நீ இன்று உன் வீட்டிற்குப் போகவேண்டாம். சந்தேகங்கள் நிவர்த்தியாகட்டும். பிறகு போகலாம்.

பிரமிளா: ஐய்யையோ, அதுதான் முடியாத காரியம். நான் சற்றுத் தாமதமாக வீட்டிற்குப் போனால்கூட என்

சிநேகிதி மரகதம் கவலைப்படுவாள். நான் போகாமலிருந்தால் வீட்டில் என்னைக் காணவில்லை என்று போலீஸிற்குப் போன் செய்துவிடுவாள். அத்துடன்கூட ரத்னம் இன்னும் ஒருவாரம் தான் வரமாட்டேன் என்றும் வியாபார நிமித்தமாக வெளியூர் செல்வதாகவும் காலையில் சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார். அதனால் என்னுடைய சிநேகிதிக்குத் துணையாக நான் இன்று இருந்தாகவேண்டும்.

வக்கீல்: அப்படியானால் இன்று ஜம்புலிங்கத்தின் வீட்டிற்குச் சென்று அவருடைய மனைவியை 8½ மணிக்குச் சந்திக்க செல்லப்போவதில்லையா?

பிரமிளா: எங்கேஜ்மெண்ட் பிரகாரம் நான் கட்டாயம் போய்த்தான் ஆகவேண்டும். அத்துடன் உண்மையைத் தெரிந்துகொள்வதற்கு அந்தச் சந்தர்ப்பத்தை விட்டால் வேறு சந்தர்ப்பம் கிடைக்காது. மேலும் நான் அங்கே ஜம்புலிங்கத்தின்மீது சந்தேகம் ஏற்பட்டுவிட்டதாகக் காண்பித்துக்கொள்ளாமல் போனால்தான் உண்மை புலப்படும். ஆனால் இன்று இரவு 8½ மணிக்கு நான் வரப்போவதை ஜம்புலிங்கம் தெரிந்துகொண்டிருப்பார். ஜம்புலிங்கமும் ரத்னமும் ஒன்றாக இருப்பதனால் அவர் என்னைச் சந்திக்க விரும்பாமல் ஏதாவது ஒரு காரணம் சொல்லி தட்டிக்கழித்து வெளியே சென்றுவிடுவார். அந்த இடத்தில் என்னைத் தீர்த்துக்கட்ட எத்தனிக்கமாட்டார். இந்த பிளாட்டிங் பேப்பரில் விஷம் இருப்பது உண்மை என்றால் நான் ரத்னத்தின் ரகசியத்தைப்பற்றி என் தோழி மரகதத்திடம் உண்மையை எடுத்துச் சொல்லிவிட்டு அந்த வீட்டைவிட்டு ஒரேயடியாகக் கிளம்பி வந்துவிடுவேன். மேலும் அந்த வீட்டில் இருப்பது முடியாது. என் தோழி மரகதத்தைப் போல் ஜம்புலிங்கத்தின் மனைவி அவ்வளவு வெள்ளை உள்ளம் படைத்தவள் என்று சொல்லமுடியாது. நான் இன்று எப்படியும் அங்கே சென்று புத்தக விற்பனை சம்பந்தமாக வருவதாகச் சொல்லியிருந்தபடி ஜம்புலிங்கத்தைச் சந்திக்கப் போகிறேன்.

உடனே வக்கீல் குறுக்கிட்டு, "நீ அங்கே போவதைப் பற்றி ஆட்சேபணை இல்லை. ஆனால், அங்கு ஒன்றும் சாப்பிடாதே. தண்ணீர்கூட குடிக்காதே. மேலும் வாய் தவறியும்கூட அந்தப் பெண்ணிடம் ரத்னத்தின் இரட்டை வேடத்தைப்பற்றிச் சொல்லாதே. ஆனால், அவளுடைய கணவனை முன்பாகவே உனக்குத் தெரியும் என்று சொல்லிக் கொள். என்னுடைய இதோ இந்த விசிட்டிங் கார்டைக் கொடுத்துவிடு. அதை அவள் தன் கணவரிடம் காட்டுவாள். பார்த்தபிறகு அவர் புரிந்து கொள்வார். உன்னை ஒன்றும் செய்யமுடியாது என்பதைத் தெரிந்து கொண்டுவிடுவார்."

பிரமிளா அவருடைய விசிட்டிங் கார்டைக் கையில் வாங்கிக்கொண்டு சிரித்தவாறே சொன்னாள்: "நீங்கள் இந்த அறைக்குள்ளேயே உட்கார்ந்துகொண்டு எல்லாம் சுலபமாகப் பேசிவிடுகிறீர்கள். ஆனால், அங்கு போய்ப் பார்த்தால் அல்லவா தெரியும்? இப்பொழுதே என்மீது ரத்னத்திற்கு எவ்வளவு ஆத்திரம் இருக்கிறதோ! உம்... நான் என்னைப்பற்றிக் கவலைப்படவில்லை. ஆனால், என்னுடைய சிநேகிதி மரகதத்தைப்பற்றித்தான் வருத்தமாய் இருக்கிறது. நான் அவளிடம் அவள் கணவனைப்பற்றிய உண்மையைச் சொல்லாமல் இங்கே வந்துவிட என் மனம் இடம் கொடுக்கவில்லை. அவளும் நானும் உயிருக்கு உயிராய்ப் பழகிவிட்டோம். எங்களுக்குள் வித்தியாசமே கிடையாது. ஒருவரோடொருவர் இதுவரையில் எந்தவிதமான ரகசியத்தையும் மறைத்து வைத்துக்கொண்டது கிடையாது. எவ்விதமான பிரச்சினைகளையும் நாங்கள் ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொண்டு தீர்த்துக்கொள்வோம். அது சரி; உங்களுக்கு நான் எவ்வளவு பீஸ் கொடுக்கவேண்டுமென்று நீங்கள் சொல்லவில்லையே. எனக்கு வருமானத்திற்கு ஒன்றும் குறைவில்லை. தாராளமாகத் தரலாம்."

வக்கீல், "என்னுடைய இந்த விசிட்டிங் கார்டு ஜாக்கிரதை. உன்னுடைய முகவரியையும் உன் வீட்டுப் போன் நம்பரின் எண்ணையும் என்னுடைய செயலாளரிடம்

கொடுத்துவிட்டுப் போ. என்னுடைய துப்பறியும் நிபுணர்களுக்குத் தெரியலாம். 24 மணி நேரமும் திரிந்துகொண்டிருக்கும் அவர்கள் எப்பொழுதும் தயாராய் இருப்பார்கள். அவர்களுடைய டெலிபோன் நம்பர் இதோ இருக்கிறது. இந்தக் கட்டடத்தின் கீழ்மாடியில்தான் அவர்களுடைய காரியாலயம். நீ எப்பொழுது வேண்டுமானாலும் எந்த நேரமானாலும் அவர்களுக்குப் போன் செய்யலாம். அவர்கள் உடனே எனக்குத் தெரியப்படுத்தி விடுவார்கள். நீ சொல்வதுபோல் கொடுக்கவேண்டிய பீஸை இப்பொழுது தர வேண்டாம். உனக்கு பாங்க் அக்கௌண்ட் இருந்தால் 25 ரூபாய்க்கு ஒரு செக் எழுதி அதை இந்தக் கவரில் வைத்து வாயை ஒட்டி, அந்தக் கவரின் மேலே உன் விலாசத்தை எழுதி வை. விஷம் என்று நீ சந்தேகப்பட்ட அந்தக் காகிதத்தையும் ஒரு கவருக்குள் போட்டு ஒட்டிக் கொடுத்துவிடு" என்றார்.

பிரமிளா அவரை வியப்புடன் பார்த்து, "என்ன, கிரிமினல் கேஸுக்கு சாட்சியம் தயார் செய்வதுபோல் செய்கிறீர்களே" என்றாள்.

வக்கீல், "நான் ஒன்றும் அவன்மீது வழக்கு போடப்போவதில்லை. சில விவரங்கள் எனக்குச் சரிவரத் தெரியவில்லை. புலப்பட்டதும் பிறகு நான் சில ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அதற்காகத்தான் உன்னை முன்ஜாக்கிரதையாக இருக்கச் சொல்கிறேன். ஆனால், நீ மிகவும் சாமர்த்தியமான பெண்; துணிவுள்ளவள். தைரியமாகக் கவலைப்படாமல் போய் வா" என்றுகூறி அவளை அனுப்பிவைத்தார்.

பிரமிளா அந்த அறையைவிட்டுச் சென்றபிறகு அவள் நடந்து செல்வதையே பார்த்துக்கொண்டிருந்துவிட்டு, தன்னுடைய காரியதரிசி உஷாவை அழைத்து, அவள் வைத்துவிட்டுப் போன காகிதத்தில் விஷம் கலந்திருக்கிறதா என்பதைப் பரிசோதகரைக்கொண்டு உடனே பார்க்க ஏற்பாடு செய்யும்படிக் கூறினார். டெலிபோனில் துப்பறியும் நிபுணர் அர்ஜுன்சிங்கைக் கூப்பிட்டு எந்த நிமிஷமும்

தயாராய் இருக்கும்படி எச்சரித்து வைத்தார். பிறகு ரத்னம், ஜம்புலிங்கம் இருவருடைய விலாசத்தையும் அவரிடம் கூறி அதில் ரத்னத்தைப்பற்றி நிறையத் தெரிந்துகொள்ள வேண்டியதிருக்கிறதென்றும், தகவல்களை உடனுக்குடனே சேகரிக்கவேண்டும் என்றும் கூறினர். பிரமிளா மிகவும் தைரியசாலி என்றும், இன்று இரவு தன் உயிருக்கு எந்தவித ஆபத்தும் வராமல் அவள் காத்துக்கொள்வாள் என்றும், அன்றைய இரவு அமைதியாகக் கழியும்வரை தனக்கு எந்த விதமான தொல்லைகளும் ஏற்படாது என்றும் தம் மனத்தைப் பெரிமேஸன் நிம்மதிப்படுத்திக்கொண்டார்.

3

பிரமிளா சந்தித்த போலி துப்பறிபவன்—மர்மக் கொலை

வக்கீலின் காரியதரிசி உஷாதேவி விஷப் பரிசோதகரிடம் கொடுத்த மெல்லிய காகிதத்தைப் பரிசோதகர் சோதித்து முடித்தார். அதில் பாஷாணம் ஒட்டிக்கொண்டிருப்பதாகத் தெரியவந்தது. இவ்விஷயத்தை உடனே உஷாதேவி பெரிமேஸனிடம் தெரிவித்தாள். அந்தக் காகிதத்தை ஜாக்கிரதையாகப் பாதுகாத்து வருமாறு உஷா தேவியிடம் தெரிவித்துவிட்டு, பரிசோதகரை அழைத்து எந்தச் சமயத்திலும் சாட்சியம் சொல்வதற்குத் தயாராய் இருக்கவேண்டுமென்றும், பிரமிளாவைக் காப்பாற்றுவதற்கு இந்தத் தடயம் மிகவும் உபயோகப்படும் என்றும் தெரிவித்தார். பிறகு துப்பறியும் நிபுணர் அர்ஜுன்சிங்கை அழைத்து மெல்லிய" காகிதத்தில் ஒட்டிக்கொண்டிருந்த விஷத்தைப்பற்றிய செய்தியைக் கூறி அன்று இரவு 8½ முதல் 9½ மணி வரை தான் அழைத்தவுடன் வரத் தயாராய் இருக்குமாறும் கூறினர். தேவைப்பட்டால் தாக்குதலைச் சமாளிப்பதற்கும் தற்காப்புக்குமாக இரண்டு ஆட்களையும் அமர்த்திக்கொள்ளுமாறு கூறினர். அவர் சென்ற பிறகு இரவு 7½ மணி வரையில் வேறு வழக்கு சம்பந்தமான பைல்களைத் தம்முடைய காரியதரிசி உஷாதேவியுடன்

கவனித்துவிட்டு அவளையும் அழைத்துக்கொண்டு காரில் புறப்பட்டார்.

வழக்கமாகச் செல்லும் பிரபல ஹோட்டலுக்குப் பெரி மேஸன் சென்றார். அவர் எப்பொழுதும் அந்த ஹோட்டலில் டெலிபோன் வசதி இருக்கும் தனி அறையில் உட்கார்ந்து தான் சாப்பிடுவது வழக்கம். பெரிமேஸன் பிரபல வக்கீல் ஆனதால் தங்கள் ஹோட்டலுக்கு அவர் வருவதே பெரும் பாக்கியமாகக் கருதி அவருக்கு வேண்டிய வசதிகளை அந்த ஹோட்டல் சொந்தக்காரர் செய்வது வழக்கம்.

அவர் சாப்பிட்டுக்கொண்டிருக்கும்பொழுது டெலி போன் மணி அடித்தது. துப்பறியும் நிபுணர் அர்ஜுன் சிங் டெலிபோனில் பேசினார். "தாங்கள் சொல்லியது போன்றே பிரமிளா என்பவள் என்னைப் போனில் கூப்பிட்டாள். தங்களுடன் இன்னும் சிறிது நேரத்தில் பேசப்போவதாகவும் சொன்னாள்" என்று அர்ஜுன்சிங் கூறினார். அவர் பேசிமுடித்த சிறிது நேரத்திற்கெல்லாம் மீண்டும் டெலிபொன் மணி அடித்தது. பிரமிளா டெலி போனில் வக்கீலை அழைத்தாள்.

பிரமிளா: வக்கீல் சார்! நான் ஜம்புலிங்கத்தின் வீட்டிற்குச் சென்றிருந்தேன். ஆனால் அங்கே நான் எதிர்பார்த்ததுபோல் ஜம்புலிங்கம் இல்லை. வீட்டிற்குள் நுழைந்தவுடனேயே அவருடைய மனைவி என்னை உட்காரக்கூடச் சொல்லாமல் புத்தகம் வாங்குவதற்காக ஆர்டர் கொடுப்பதற்கு இப்பொழுது வசதியில்லை என்று தெரிவித்துவிட்டாள். நானே சற்றுநேரம் தாமதம் செய்ய விரும்பினேன். அதனால் அவளிடம் பேச்சுக் கொடுத்தேன். "நீங்கள் எப்படியாவது கணவரிடம் சொல்லி புத்தகத்துக்கு ஆர்டர் தர வேண்டும்" என்று வற்புறுத்தினேன். அப்படிப் பேசிக் கொண்டே நேரம் கழிந்தால் அவளுக்கு என்மீது சந்தேகம் ஏற்படாது. ஆனால், அவள் என்மீது சந்தேகப்பட்டதாகத் தெரியவில்லை. தங்களால் புத்தகம் வாங்க முடியாதிருப்பது பற்றி அவள் வருத்தம் தெரிவித்துக்கொண்டாள். நான்

மிகவும் சாமர்த்தியமாக அவள் கணவரைப்பற்றி எதுவும் கேட்காமல் இருந்தேன்.

வக்கீல், "சரியான சாமர்த்தியசாலிதான் நீ? பொய் சொல்வதற்கு இந்த உலகத்தில் நோபல் பரிசு கொடுப்பது என்றால் உனக்குத்தான் கொடுக்கவேண்டும்" என்றார்.

மறுபக்கமிருந்து டெலிபோனில் பிரமிளா சிரிப்பது நன்றாகக் கேட்டது. அவள் சிரித்துக்கொண்டே, "என்ன செய்வது? இந்த உலகத்தில் பொய் சொன்னால்தான் பிழைக்க முடியும். இல்லாவிட்டால் கௌரவமாகக்கூட வாழ முடியாது" என்றாள். அவள் பேசிக்கொண்டிருக்கும்பொழுதே வக்கீல் குறுக்கிட்டு, "நீ கொடுத்துவிட்டுச் சென்ற காகிதத்தைப் பரிசோதனை செய்துவிட்டோம். அதில் பயங்கரமான 'ஸ்ட்ரிக்னைன்' விஷம் கலந்து இருக்கிறது என்பது தெரிந்துவிட்டது" என்றவுடன் பிரமிளா நடுநடுங்கிவிட்டாள். அவள் கிரீச்சிட்ட குரலில், "விஷமா? ஐயோ நான் சந்தேகித்தது சரியாகிவிட்டது. அந்தப் பாதகன் ரத்னம் எந்தவிதமான கொடிய செய்கை செய்வதற்கும் அஞ்சமாட்டான். அவனை எப்படியாவது ஒழித்துக்கட்டித்தான் ஆகவேண்டும்" என்று கூவினாள். பிறகு, சற்று சாந்தமடைந்து, "வக்கீல் சார், புகார் செய்தாலும் செய்தேன், உங்களுடைய துப்பறியும் நிபுணர்களுடைய ஆட்கள் என்னைத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறார்கள். நான் என் இஷ்டப்படி போக விடாமல் கூடவே என்னையும் அவர்கள் தொடர்கிறார்கள். சற்று முன்புகூட நான் சங்கராபுரம் எஸ்டேட்டிலிருந்து வெளியே வந்தேன்.' அப்பொழுது மழை நன்றாகக் கொட்டிக் கொண்டிருந்தது. என் காரை நடுச்சாலையில் நின்று ஒருவர் நிறுத்தினார். தனது கார் பஞ்சர் ஆகிவிட்டதாகவும் அருகேயுள்ள பெட்ரோல் பங்கு வரையில் தன்னை அழைத்துப்போய் விடும்படியாகவும் அவர் என்னைக் கேட்டுக்கொண்டார். நான் சற்றுத் தயங்கினேன். அந்த இரவு வேளையில் மழை கொட்டும்பொழுது ஒரு பெண்ணை வழியில் நிறுத்திக் கேட்கும் அந்த ஆசாமியைப் பார்க்கும்பொழுது எனக்குப்

பயமாக இருந்தது. ஆனால், அவர் உடனே தம்முடைய கோட்டுப் பையிலிருந்த துப்பறியும் நிபுணர் என்ற அடையாளச் சின்னத்தைக் காட்டினார். அவர் நல்ல கம்பீரமான தோற்றமுடையவர்; அழகாய் இருந்தார். அவர் பேச்சும் மிகக் கனிவாய் இருந்தது. அதனால் நான் அவரைப்பற்றிச் சந்தேகப்படாமல் அவரைக் காரிலே ஏற்றிக்கொண்டேன். நான் இப்பொழுதுதான் அவரைப் பெட்ரோல் பங்குக்கு அருகே இறக்கிவிட்டேன். பெட்ரோல் பங்கிலிருக்கும் டெலிபோனிலிருந்துதான் பேசுகிறேன்" என்றாள்.

வக்கீல் பெரிமேஸன் அவள் கூறுவதைக் கவனமாகக் கேட்டுக்கொண்டார். "நீ இப்போழுது நேரே வீட்டுக்குச் சென்றபிறகு வெளியே எங்காவது போகப் போகிறாயா?" என்று கேட்டார். "இல்லை" என்று கூறிய பிரமிளா, "நான் வீட்டிற்குச் சென்றவுடன் மரகதத்திடம்கூட பேசப் போவதில்லை. 'தலை வலிக்கிறது' என்று சொல்லிவிட்டுச் சாப்பிடாமலேயே படுத்துக்கொள்ளப் போகிறேன்" என்றாள்.

வக்கீல்: "நீ வீட்டிற்குச் சென்றவுடன் ரத்னம் இரவு அங்கே வந்துவிட்டார் என்றால் உடனே யாருக்கும் தெரியாமல் வெளியே வந்து அருகே எங்கிருந்தாவது துப்பறியும் அர்ஜுன்சிங்குக்குப் போன் செய்" என்று கூறினார்.

பிரமிளா மீண்டும் மெல்லச் சிரித்து, "இன்று இரவு நிச்சயமாக வீட்டிற்கு ரத்னம் வரமாட்டார் என்று எனக்குத் தெரியும்" என்றாள்.

வக்கீல் உடனே, "அப்படியானால்' ஜாக்கிரதையாக வீட்டிலே படுத்துக்கொண்டிரு. காலையில் சரியாகப் பத்து மணிக்கு எனது காரியாலயத்தில் என்னைச் சந்திக்கவேண்டும்" என்றார்.

டெலிபோனை வைத்துவிட்டு, பிறகு பெரிமேஸன் உடனே அர்ஜுன்சிங்கை டெலிபோனில் அழைத்து பிரமிளா டெலிபோனில் கூறிய விவரத்தைத் தெரிவித்தார். தான் சங்கராபுரம் எஸ்டேட்டுக்குத் தமது உதவியாளர்

யாரையும் அனுப்பவில்லையென்றும், பிரமிளாவைத் தொடர்ந்து கண்காணிக்கவும் யாரையும் அனுப்பவில்லையென்றும் அர்ஜுன்சிங் கூறினார்.

பெரிமேஸன் சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்தார். தமது காரியதரிசியிடம், "அர்ஜுன்சிங் பிரமிளாவைக் கண்காணிக்க தாம் யாரையும் அனுப்பவில்லை என்கிறார். சங்கராபுரம் எஸ்டேட் அருகில் அவருடைய உதவியாளரின் எந்தக் காரும் பஞ்சர் ஆகவில்லையென்றும் உறுதியாகக் கூறுகிறார். அப்படியென்றால் பிரமிளாவின் காரை நிறுத்தி அதில் ஏறிக்கொண்டவர் யாராய் இருக்கும்?" என்று கேட்டுச் சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்தார். பிறகு அந்த ஹோட்டலில் விரைவாகச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு உஷாதேவியுடன் வெளியே புறப்பட்டுவிட்டார்.

மறுநாள் காலை பத்து மணிக்கு பெரிமேஸன் தமது அறையிலிருந்து காரியதரிசி உஷாதேவியை அழைத்து "பிரமிளா வந்துவிட்டாளா?" என்று கேட்டார்.

வரவேற்பாளர் அறைக்குச் சென்று பார்த்துவிட்டு வந்த உஷாதேவி, "இன்னும் பிரமிளாவைக் காணவில்லை" என்று கூறினாள். ஐந்து நிமிஷம் கழித்து மீண்டும் உஷாதேவி பெரிமேஸன் அறைக்கு வந்து, "இன்னும் அவளைக் காணோமே?" என்றாள். பெரிமேஸனுக்குச் சற்றுக் கோபம் வந்தது "நேற்று இருந்த ஊக்கமும், துடிதுடிப்பும் இன்று அவளுக்கு இல்லைபோல் தோன்றுகிறது. அதனால்தான் இங்கே வருவதற்குத் தாமதப்படுத்துகிறாள். சரி, நாம் வேறு வேலையைக் கவனிப்போம்" என்று எரிச்சலுடன் கூறினார்.

பெரிமேஸன் 15 நிமிஷம் கழித்து உஷாதேவியைக் கூப்பிட்டு மரகதத்தின் வீட்டிற்குப் போன் செய்து பிரமிளா இருக்கிறாளா? என்று விசாரிக்கச் சொன்னார். அதுபோல் உஷாவும் போன் செய்து அங்கே பிரமிளா இல்லை என்றும் அவள் காலை ஏழு மணிக்கே வீட்டைவிட்டுப் புறப்பட்டு விட்டதாகவும் மரகதம் கூறுவதாகத் தெரிவித்தாள். "'எங்கே போய் இருக்கிறாள் என்று தெரியுமா?' என்று நான்

மரகதத்தை விசாரித்தேன். போன இடம் தெரியவில்லை என்று மரகதம் பதில் சொல்கிறாள். பிரமிளா வந்தால் தெரிவிப்பதாகவும் மரகதம் டெலிபோனில் சொல்வதாகக் கூறினாள்'' என்று உஷா சொன்னாள்.

''யார் பேசுகிறது என்று மரகதம் கேட்டிருப்பாளே'' என்றார் பெரிமேஸன். ''ஆமாம். என்னை யார் என்றும், ஏதாவது பிரமிளாவுக்குச் சமாசாரம் சொல்வதற்கு விஷயம் இருக்கிறதா என்றும், அவள் வந்தால், எந்த இடத்துக்குப் போன் செய்யவேண்டுமென்றும் அவள் துருவித் துருவிக் கேட்டாள். நான் அவளுடைய பள்ளிச் சிநேகிதி என்றும் அவளைப் போனில் கூப்பிடுவதற்கு விசேஷமாக ஒன்றுமில்லை என்றும் பொதுவாகப் பேசுவதற்காகத்தான் கூப்பிட்டதாகவும் சொன்னேன்'' என்றாள் உஷாதேவி.

பெரிமேஸன் கோபத்துடன் மேஜையைத் தட்டி, ''பிரமிளாவுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்துவிட்டால் நான் அர்ஜுன்சிங்கை சும்மாவிடப் போவதில்லை; அவனைக் கண்காணிக்கும்படிக் கூறியிருந்தேன். அப்படிச் செய்யவில்லை'' என்று கூவினார்.

அந்தச் சமயம் டெலிபோன் மணி அடித்தது. ரிஸப்ஷன் அறையிலிருந்து ரிஸப்ஷனிஸ்ட் அழைத்தாள். பிரமிளா வந்துவிட்டதாகவும், இங்கே உட்கார்ந்திருப்பதாகவும் கூறினாள். ரிஸப்ஷன் எனப்படும் வரவேற்பு அறை இருந்த இடத்திற்கு மேல் மாடியில் பெரிமேஸனுடைய ஆபீஸ் அறை இருந்தது. யாராவது அவரைப் பார்க்கவேண்டுமென்றால் வரவேற்பாளர் அந்தரங்கக் காரியதரிசியான உஷாவுக்குப் போன் செய்வார். உஷாதேவி பெரிமேஸனுடன் சந்திப்பதற்கான நேரத்தைக் குறிப்பிடுவாள். பிரமிளா வந்துவிட்டாள் என்றவுடன் உஷாவை அனுப்பி அவளை உடனே அழைத்து வருமாறு பெரிமேஸன் கட்டளையிட்டார். பிரமிளா வக்கீலின் அறைக்குள் நுழைந்தாள். அவள் முகம் வெளுத்திருந்தது. சற்று அவள் சோர்ந்தும் காணப்பட்டாள். கண்ணிமைகள் படபடவென்று அடித்துக்கொண்டன.

அவளைப் பார்க்கும்பொழுதே ஏதோ ஒரு சங்கடத்தில் சிக்கிக்கொண்டவள்போல் தோன்றியது.

வக்கீல், ''என்ன பிரமிளா ஒருமாதிரியாய் இருக்கிறாய்? ரத்னம் வீட்டிற்குத் திரும்பி வந்துவிட்டாரா? நேற்று இரவு ஏதாவது நடந்ததா? நான் வரச்சொன்ன நேரத்திற்கு ஏன் வரவில்லை?'' என்று கேட்டார்.

பிரமிளா சோகம் நிறைந்த குரலில், சற்று விம்மியவாறு, ''அவர் இனிமேல் ஒருபொழுதும் வீட்டுக்குத் திரும்பி வரமாட்டார். இனி என்னை எப்பொழுதும் சந்திக்கவும் மாட்டார். அவர் இறந்துவிட்டார்'' என்றாள். பிறகு படபடப்புடன், ''நான் அவரை இப்பொழுதுதான் முக்கால் மணி நேரத்திற்கு முன்பாகப் பார்த்தேன். அவர் இறந்தது யாருக்கும் தெரியாது. அவருடைய மனைவி மரகதத்திற்குக் கூடத் தெரியாது'' என்றாள். அவள் இதயம் படபடப்பதன் எதிரொலியாக அவள் பேச்சிலும் நடுக்கம் காணப்பட்டது. பெரிமேஸன் தமது புருவத்தைச் சுருக்கிக்கொண்டு, ''ரத்னம் இறந்துவிட்டாரா?'' என்று அழுத்தமாகவும் அதே சமயம் அவள் முகத்தை ஊடுருவிப் பார்க்கும் குரலில் கேட்டார்.

''ஆமாம்; அவர் கொலை செய்யப்பட்டுவிட்டார்'' என்றாள் பிரமிளா.

''அவரை நீ கொலை செய்துவிட்டாயா? விஷயங்களை இவ்வளவு மெதுவாகச் சொல்லாதே. சீக்கிரமாகச் சொல்லித் தொலை. அழுது, பயந்து வீணாக அதிர்ச்சியடையாதே. என்னிடம் உண்மையை ஒளிக்காமல் சொல்லவேண்டும். நீ அவரைக் கொலை செய்துவிட்டாயா?'' என்று பெரிமேஸன் கண்டிப்பான குரலில் கேட்டார்.

பிரமிளாவின் கண்கள் கலங்கியிருந்தன. துக்கம் அவள் நெஞ்சை அடைத்துக்கொண்டது. எதற்கும் துணிவு கொண்ட வீர மாது என்றாலும் திடசித்தமுடையவளாதலால் பிரமிளா மெல்லிய குரலில் சொன்னாள்: ''நேற்று இரவு என்னிடம் துப்பாக்கியைக் கொடுத்த அந்தத் துப்பறியும் நிபுணரைத் தேடிக்கொண்டு சங்கராபுரம்

எஸ்டேட்டுக்குச் சென்றேன்...'' என்று அவள் சொல்ல ஆரம்பித்தவுடன் வக்கீல் அதிர்ச்சி அடைந்து, ''என்னது, துப்பாக்கியா? உன்னிடம் நேற்றுத் துப்பறியும் நிபுணர் கொடுத்தாரா? புதிது புதிதாக இட்டுக்கட்டிச் சொல்கிறாயே?'' என்றார்.

''நான் நேற்று டெலிபோனில் சரிவரச் சொல்ல முடியவில்லை. நான் முதலில் இருந்தே சொல்லட்டுமா?''' என்று கேட்டாள் பிரமிளா.

''நீ முதலிலிருந்து எல்லாவற்றையும் விவரமாகச் சொல்லித் தொலை. ஏதாவது மறைத்தாயோ உனக்குத்தான் ஆபத்து'' என்று பெரிமேஸன் உறுமினார். பிரமிளா சொல்லத் தொடங்கினாள்:

''நேற்று இரவு நான் ஜம்புலிங்கத்தைச் சந்திக்கப் புறப்பட்டபொழுதே வானம் இருண்டிருந்தது. இலேசாக மழை தூறிக்கொண்டிருந்தது. இருந்தாலும் 8½ மணிக்கு அவரைச் சந்தித்து அவரின் ரகசியங்களைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்ற ஆவலில் நான் என் ஆபீஸ் காரை எடுத்துக்கொண்டு நானே ஓட்டிக்கொண்டு புறப்பட்டேன். ஜம்புலிங்கம் வரவில்லை. எவ்வளவோ வற்புறுத்தி புத்தக ஆர்டரும் கிடையாது என்று அவர் மனைவி சொன்னபிறகு நான் அங்கிருந்து திரும்பி வந்துகொண்டிருந்தேன். மழையோ நன்றாகப் பெய்ய ஆரம்பித்துவிட்டது. காரை நான் ஓட்டிக்கொண்டு போகும்பொழுது என் காருக்கு எதிரிலிருந்து என் கண்களைப் பறித்துவிடுவதுபோல் வெளிச்சம் அடித்தது. நான் காரை நிறுத்தப் பயந்து மேலும் வேகமாக ஓட்ட ஆரம்பித்தேன். சாலையின் குறுக்கே நின்றுகொண்டு இருந்த மனிதன் ஒருவன் கண்கள் கூசும்படியாக டார்ச் லைட்டை அடித்துக்கொண்டிருப்பதைப் பார்த்தேன். காரை நிறுத்தாமல் ஓட்டிக்கொண்டு போக என்னால் முடியவில்லை. தன்னுடைய கார் பஞ்சர் ஆகிவிட்டது என்றும், தான் ஒரு துப்பறியும் நிபுணர் என்றும் கூறி தன் அடையாளத்தைக் காட்டி தன்னை அருகேயுள்ள பெட்ரோல் பங்கில் விட்டுவிடுமாறு அவன் கேட்டுக்கொண்டான். கார் கண்ணாடிகள்

மழைக்காக நன்றாகத் தூக்கப்பட்டிருந்ததால் நான் முன் ஜாக்கிரதையாகக் கதவுகளுள் இருந்தபடியே கேட்டேன். ஆனால், அவன் பேசுவதைக் கேட்பதற்காக மெல்ல என் பக்கத்துக் கண்ணாடியைக் கொஞ்சம் இறக்கினேன். அவனுடைய தோற்றமும் பேச்சும் என்னைப் பெரிதும் கவர்ந்தன. அதனால்தான் என்னுடைய மனம் சற்றுக் குதூகலித்தது. ஆனால், உள்ளுக்குள்ளே எனக்குப் பயம் இருந்தது. அவன் சட்டென்று தன் பையிலிருந்து துப்பாக்கியை எடுத்துத் திறந்திருந்த கதவின் இடுக்கு வழியாக உள்ளுக்குள்ளே போட்டுவிட்டு, ''நீங்கள் நினைப்பதுபோல் நான் ஒன்றும் செய்துவிடமாட்டேன். துப்பாக்கியையும் போட்டுவிட்டேன். என்னைத் தயவுசெய்து ஏற்றிக்கொண்டு பெட்ரோல் பங்கில் விட்டுவிடுங்கள்'' என்று கேட்டுக்கொண்டான். நானும் வேறு வழியின்றி அவனைப் பங்கில் இறக்கிவிட்டேன். அவன் பேச்சை நம்பினேன். ஆனால், துப்பாக்கியை எடுத்து வைத்துக்கொண்டேன். பெட்ரோல் பங்கில் அவன் இறங்கியவுடன் உங்களுக்குப் போன் செய்தேன். போனை வைத்த பிறகு மீண்டும் அவனைத் தேடினேன். அங்கிருந்தவர்களைக் கேட்டேன். அப்படி யாரும் அங்கே வரவில்லை என்றும் காரிலிருந்து இறங்கினவன் அப்பொழுதே சென்று இருளில் மறைந்துவிட்டதாகவும் அவர்கள் கூறினார்கள். ஆனால், அவனுடைய துப்பாக்கியோ என்வசமே இருந்துவிட்டது. நான் வீட்டிற்கு வந்ததும் மரகதத்திடம் எனக்குத் தலைவலி தாங்க முடியவில்லை என்று பொய் சொல்லிப் படுக்கச் சென்றுவிட்டேன். ஆனால், மரகதமோ என்னைச் சும்மாவிடவில்லை. என்னுடைய படுக்கை அறைக்கு வந்தாள். என் அருகே கட்டிலில் உட்கார்ந்தாள். அவளுடைய பார்வை ஒரு மாதிரியாக இருந்தது.

'''நீ வர வர என்னிடம் சிறிது நாளாக சரிவர நடந்துகொள்வதில்லை. எதையோ ஒளிக்கப் பார்க்கிறாய்' என்று புகார் தெரிவித்துப் பேச ஆரம்பித்தாள்.

''அவள் இதுநாள் வரையில் இதுபோல் பேசியதே கிடையாது. தன் கணவன் ரத்னத்துடன் நான் சிறிது காலமாக

சிநேகிதம் வைத்திருப்பதாகவும் அவருடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும், அவருடன் வெளியே ஊர் சுற்றுவதாகவும் அவள் ஒரு வெடிகுண்டைப்போல் தூக்கிப் போட்டாள். நான் உண்மையிலேயே திடுக்கிட்டேன். தன் கணவர் என்னிடம் பழகுவதைப்பற்றித் துளிக்கூட என்னைச் சந்தேகப்படாமல், இதற்கு முன்பு நான் கூறிய புகாரைக் கூட மறுத்துப் பேசிய மரகதம் இப்பொழுது தன் கணவனுக்கும் எனக்கும் தொடர்பு இருக்கிறது என்று கூறுகிறாளே என்று எனக்குக் கோபம் கோபமாக வந்தது. இருந்தாலும் நான் அடக்கிக்கொண்டு, அவள் கணவனை நான் சந்திக்கவே இல்லை என்றும் அவள் கூறுவதுபோல் எனக்கும் அவருக்கும் தொடர்பு இல்லையென்றும் கூறிவிட்டேன். ஆனால் நான் ஐம்புலிங்கமாக நடிக்கும் அவளுடைய கணவரை சங்கராபுரம் எஸ்டேட் அருகேயுள்ள வீட்டில் சந்திக்கப் போனதைப்பற்றிச் சொல்லவேயில்லை. உங்களைச் சந்தித்து நேற்றுப் பேசியதையும் நான் தெரியவிக்கவில்லை. ஆனால், இரவு சற்று முன்பு துப்பறியும் நிபுணரை வழியில் சந்தித்ததையும் அவர் துப்பாக்கியை என்னிடம் கொடுத்துவிட்டுப் பொய் சொல்லிச் சென்றதையும், அதனால்தான் எனக்கு இவ்வளவு 'தலைவலி' வந்துவிட்டது என்பதையும் தெரிவித்தேன். அதை அவள் நம்பவில்லை. நான் ஏதோ பொய் சொல்கிறேன்; கற்பனைக் கதை கூறுகிறேன் என்று ஏளனம் செய்தாள். 'டிடெக்டிவ்' எங்காவது ஒரு பெண்ணுடைய மடியில் துப்பாக்கியைப் போட்டுவிட்டுப் பொய் சொல்லி ஓடிச் செல்வானா, அதுபோல் இதுவரை கேள்விப்பட்டதில்லை என்று கூறிச் சிரித்தாள். பல குறுக்குக் கேள்விகளைக் கேட்டாள். 'அது சரி, என் கணவருடன் உன்னுடைய உறவு எவ்வளவு தூரத்தில் இருக்கிறது?' என்று கேட்டு வற்புறுத்தினாள். நான் எவ்வளவோ சமாதானம் அவளுக்கு எடுத்துச் சொன்னேன். அவள் கேட்கவில்லை. கடைசியாக நான், 'சத்தியமாக உன் கணவனுக்கும் எனக்கும் எந்தவிதமான உறவும் இல்லை' என்று கடுமையான குரலில் கூறப் பிறகு தான் அவள் நிம்மதி அடைந்தாள். பிறகு என்னுடன்

சாதாரணமாகப் பேசிக்கொண்டிருந்தாள். ஒன்றுமே சாப்பிடாமல் நான் படுத்துக்கொள்வதைக் கண்டு கவலைப்பட்டு உடனே சென்று ஒரு டம்ளரில் பால் சுடச்சுடக் கொண்டுவந்து தந்தாள். நான் பாலைக் குடித்தேன். அவளும் படுக்கச் சென்றாள். உடனே நான் என்னை அறியாமல் நன்றாக அன்றிரவு தூங்கிவிட்டேன்.

"மறுநாள் காலை நான் எழுந்தவுடன் மீண்டும் மரகதம் என்னிடம் வந்தாள். மீண்டும் முதல் நாள் இரவைப் போல் பேச ஆரம்பித்தாள். 'நேற்று நீ சொன்ன துப்பாக்கிக் கதையை நான் நிச்சயமாக நம்பமாட்டேன்' என்றாள். நான் என் தலையணை அடியிலிருந்த துப்பாக்கியை எடுத்து, நான் சொன்னதெல்லாம் உண்மை என்பதை ருசுப்படுத்துவதற்காக அதைக் காட்டினேன். அவள் அதை எடுத்துச் சோதனை செய்து பார்த்தாள். துப்பாக்கியைப்பற்றி முன்பே அறிந்தவள்போல் பார்த்தாள். அதில் ஒரு தோட்டா மட்டும் சுடப்பட்டிருந்தது. மரகதமும் அந்தத் துப்பாக்கியை என்னிடம் கொடுத்துவிட்டாள். துப்பாக்கியை வாங்கியவுடன் அந்தத் துப்பாக்கி என்னிடம் இருப்பது தவறு என்று எண்ணி, அந்தத் துப்பறியும் நிபுணரைச் சந்தித்துக் கொடுக்க சங்கராபுரத்தை நோக்கி நான் சென்றேன். எப்படியும் அவரை அந்தப் பக்கத்தில் கண்டுபிடித்து விடலாம் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. சங்கராபுரம் எஸ்டேட்டின் வாசல் கேட் திறந்திருந்தது. நான் எஸ்டேட்டுக்குள் காரை ஓட்டிக்கொண்டு நுழைந்தேன். பெரிய காடுபோல் மரங்கள் அடர்ந்து இருந்த அந்த எஸ்டேட்டுக்கு நடுவே மாளிகை ஒன்று இருந்தது. அந்த மாளிகையில் ஒருவரும் இருப்பதாகவே தெரியவில்லை. நான் கூப்பிட்டுக் கூப்பிட்டுப் பார்த்தேன். ஒரு பதிலும் வரவில்லை. ஒருவேளை பின்பக்கம் யாராவது இருப்பார்களோ என்ற எண்ணம் எனக்குத் தோன்றியது. நடந்து சென்றால் திடீரென்று மாளிகைக்குக் காவலாய் இருக்கும் அல்சேஷன் நாய் பாய்ந்து வந்து விடப்போகிறதே என்று காரிலேயே சென்றேன். மழை

பெய்து சகதியாய் இருந்ததால் சக்கரம் சேற்றிலே புதைந்தது. அதனால் காரை அங்கேயே நிறுத்திவிட்டு கீழே இறங்கி நடக்க ஆரம்பித்தேன். அங்கே அருகே இருந்த புதரின் வெளியே ஒரு மனிதனுடைய கால்களைப் பார்த்தேன்; திடுக்கிட்டேன். அருகே சென்றவுடன் அங்கே ரத்னமாகவும் ஜம்புலிங்கமாகவும் இதுவரை நடித்துவந்த மரகதத்தின் கணவர் பிரேதமாகக் கிடந்தார். அவர் மார்பிலே குண்டு பாய்ந்திருந்தது. உடல் ஜில்லிட்டுக் கிடந்தது. எனக்கு நாக்கு மேலண்ணத்துடன் ஒட்டிக் கொண்டுவிட்டது. ஒன்றும் தோன்றவில்லை. உடனே காரை எடுத்துக்கொண்டு வேகமாக எஸ்டேட்டின் வெளியே வந்துவிட்டேன். கையிலிருந்த துப்பாக்கியையும் அருகே இருந்த புதரில் எறிந்துவிட்டேன். உங்களை 10 மணிக்குச் சந்திக்க வேண்டுமென்பதால் நேரே இங்கு வந்துவிட்டேன்."

பெரிமேஸன் விஷமத்தனமாக நகைத்தார். "உனது சிநேகிதி மரகதம் கூறியதுபோல் நீ பெரிய சாகசக்காரியாகவும், பொய் சொல்பவளாகவும் பொல்லாதவளாகவும் தான் எனக்குத் தோன்றுகிறது. அஞ்சாமல் பொய் சொல்லுகிறாயே" என்றார்.

பிரமிளாவுக்குக் கோபம் தாங்கவில்லை. "நீங்கள் சொல்வது தவறு. அப்படி நான் பொய் சொல்லக்கூடியவளாய் இருந்தால் இன்னும் நம்பக்கூடியதாகவும் வேடிக்கையாகவும் கற்பனை செய்து கூறியிருப்பேன். டிடெக்டிவ் துப்பாக்கியை என்னிடம் கொடுத்தார் என்பது நம்பக்கூடியதோ இல்லையோ, ஆனால், அது முற்றிலும் உண்மை. என்னுடைய காரில் எப்படியாவது ஏறிக்கொள்ளவேண்டுமென்று அவர் பரபரப்புடன் காணப்பட்டது இன்னும் என் கண்முன்னே நிற்கிறது" என்றாள்.

பெரிமேஸன், "சரி, அது போனால் போகட்டும். நீ என்னுடைய கட்சிக்காரியாகிவிட்டாய். நீ சொல்வதெல்லாம் முற்றிலும் உண்மை என்ற நம்பிக்கையுடன்

ஏற்றுக்கொள்கிறேன். அல்லது நீ என்னிடம் பொய் சொல்லியிருந்தாயானால் நீயாகவே உன் அழிவைத் தேடிக் கொள்கிறாய் என்றுதான் அர்த்தம். தூக்குமரத்திற்குச் சென்று தூக்குக் கயிற்றை கழுத்தில் நீயே மாட்டிக் கொண்டவளாகிறாய். இதை நீ நன்றாக உணர்ந்துகொள்ள வேண்டும். டாக்டரிடம் நோயாளி பொய் சொல்லலாமா? அதைப்போல்தான் வக்கீலிடமும் பொய் சொல்வது சரியன்று. நீ இதுவரை சொன்னவை யாவும் உண்மை என்ற நம்பிக்கையில் நான் ஏற்றுக்கொள்கிறேன். பிறகு நீ சொன்னவை பொய் என்று தெரிந்தால் நான் உனக்கு விரோதமாக மாறி உன் பேரிலேயே பெரும் வழக்கு தொடுக்கும்படியாக ஆகிவிடும்" என்று கடுமையான குரலில் அவளை எச்சரித்தார். பிறகு, "சரி, நீ தினமும் செய்யும் வேலைகளை இன்றும் தொடர்ந்து வழக்கம்போல் செய். யார் யாரைப் பார்ப்பாயோ அவர்களைப் பார்ப்பதற்குச் செல்" என்றார்.

பிரமிளா சற்று நேரம் மௌனமாக இருந்தாள். பிறகு, "நான் கண்டதைப் போலீஸிற்குத் தெரியப்படுத்த வேண்டாமா?" என்று கேட்டாள்.

பெரிமேஸன்: "என்னிடம் சொல்லிவிட்டாய் அல்லவா? அது போதும். நான் சொல்வதுபோல் நீ நடந்துகொண்டாலே போதுமானது. நீயாகவே ஒன்றும் செய்யவேண்டாம். உன்னைப்பற்றி எனக்குத் தெரியும். நீயே பயந்து ஓடுவதாகவோ மறைவதாகவோ ஒருவருக்கும் தவறான எண்ணத்தை ஏற்படுத்திவிடாதே. அன்றாடம் நீ வழக்கம்போல் செய்யும் வேலைகளைச் செய்துகொண்டிரு. இதுவரை நடந்த சமாசாரத்தை ஒருவரிடமும் சொல்லக்கூடாது. பேசவும் கூடாது, ரத்னமும் ஜம்புலிங்கமும் இருவரும் ஒருவரே என்று நீ கண்டுபிடித்துவிட்டபடியால் மரகதம் அவருடைய முதல் மனைவியா என்பது தெரியவில்லை. இதில் யார் மனைவி, யார் வைப்பாட்டி என்பதை அறிந்துகொள்ள வேண்டும். நீ இன்று இரவு வரையில் உன் காரியாலயத்தில் கொடுத்திருக்கும் திட்டப்படி யார் யாரைப் பார்க்க

வேண்டுமோ அவர்களைப் பார்த்து வா. கொலையுண்டவரை நீ நேரில் கண்டதாகவே காட்டிக்கொள்ளாதே. இன்று இரவு உன்னுடைய வேலை எல்லாம் முடிந்தபிறகு உன்னுடைய சிநேகிதி மரகதத்தின் வீட்டிற்குச் செல். நானோ அல்லது என் காரியாலயத்தைச் சேர்ந்தவர்களோ அங்கே காத்திருப்போம்" என்றார்.

பிரமிளா தனது ஆடைகளைச் சரிசெய்துகொண்டு புன்முறுவலுடன் எழுந்தாள். மீண்டும் அவள், "நான் இதுவரை சொன்னதெல்லாம் உண்மைதான். பொய் சொல்லவேண்டுமென்று நான் நினைத்திருந்தால் நிச்சயமாக இதைவிட அதிகமாகக் கற்பனையுடன் ஜோடித்துக் கூறி இருக்க முடியும்" என்று மீண்டும் சொல்லிவிட்டுப் புறப்பட்டுவிட்டாள்.

அவள் சென்றவுடன் பெரிமேஸன் அர்ஜுன்சிங்கை டெலிபோனில் அழைத்தார் அர்ஜுன்சிங் உடனே வந்து சேர்ந்தார். "நான் இப்பொழுது டெலிபோனில் போலீஸ் ஆபீஸரைக் கூப்பிட்டு ஒரு கொலை கேஸைப்பற்றி ரிப்போர்ட் செய்யப்போகிறேன்" என்றார். அர்ஜுன்சிங் ஆச்சரியத்துடன், "இது என்ன புதுமாதிரியான காரியமாக இருக்கிறதே! நீங்களே போலீஸை அழைத்துச் சொல்லப் போகிறீர்களா? யாரை ஏமாற்றும் வித்தை?" என்று கேட்டார்.

பெரிமேஸன், "சங்கராபுரம் எஸ்டேட்டிலுள்ள புதரில், அதற்கு அடுத்த மாளிகையில் வசித்துவந்த ஐம்புலிங்கம் என்பவர் கொலை செய்யப்பட்டுக் கிடக்கிறார்" என்றார். உடனே டெலிபோனில் போலீஸ் நிலையத்தை அழைத்து, இன்ஸ்பெக்டரிடம் தம்முடைய கட்சிக்காரர் ஒருவர் மூலமாய் ஒரு கொலைபற்றித் தெரிந்துகொண்டதாகவும், சங்கராபுரம் எஸ்டேட்டில் புதர் அருகே ஐம்புலிங்கம் என்பவர் கொலையுண்டு கிடப்பதாகவும் சட்டபூர்வமாக தனக்குத் தெரிந்ததை உடனே தெரிவித்துவிட்டேன் என்றும் கூறினார். இன்ஸ்பெக்டர் டெலிபோனில் ஏதோ கேட்டிருக்க வேண்டும். அதற்கு பெரிமேஸன் அழுத்தம் திருத்தமான

குரலில், "கொலையுண்டவரைப் பார்த்ததாக என்னிடம் தெரிவித்த கட்சிக்காரருடைய பெயரை நான் தங்களுக்குத் தெரிவிக்கவேண்டிய அவசியமில்லை. அதுபோலவே சட்டமும் இருக்கிறது" என்று சொல்லி டெலிபோனை சட்டென்று வைத்துவிட்டார். அவர் டெலிபோனில் பேசுவதையும் டெலிபோனைத் திடீரென்று வைத்துவிட்டதையும் உஷாவும் அர்ஜுன்சிங்கும் ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருந்தனர்.

4

கைதான பிரமிளா—மேஸன் - போலீஸ் அதிகாரி மோதல்

பெரிமேஸன் சற்றுநேரம் அமைதியாக ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். அர்ஜுன்சிங் அவர் எதிரேயுள்ள நாற்காலியில் அமர்ந்து முழங்கையை மேஜைமீது ஊன்றிக்கொண்டே, "நேற்று இரவு பிரமிளாவின் காரை நிறுத்தி அவளுடைய காரில் ஏறிக்கொண்ட போலித் துப்பறிபவரைக் கண்டுபிடிக்க நான் ஏற்பாடு செய்துவிட்டேன். ஆனால், இதையெல்லாம் ஏன் நீங்கள் இவ்வளவு விரிவாக விசாரிக்கச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டார்.

பெரிமேஸன்: சங்கராபுரம் எஸ்டேட்டின் முன்னால் தான் கார் நிறுத்தப்பட்டிருந்தது. அந்த சங்கராபுரம் எஸ்டேட்டின் சொந்தக்காரர் யார் என்று தெரியுமா?

அர்ஜுன்சிங்: சங்கராபுரம் எஸ்டேட்டின் சொந்தக்காரர் சங்கரலிங்கம். அவர் பெரிய வியாபாரி. கிட்டத்தட்ட அவருக்கு 45 வயதிருக்கும். நான்கு ஐந்து வருஷங்களுக்கு முன்பு விவாக ரத்து வழக்கு ஒன்று அவர்மீது நடந்தது. அவர் ஏராளமான பணத்தை அந்தப் பெண்ணுக்குத் தந்து அவளிடமிருந்து விடுதலை பெற்றார். இப்பொழுது அவர்

அந்த மாளிகையில் தனியாகத்தான் வசிக்கிறார். அவர் பெரிய 'ஸ்போர்ட்ஸ்மென்'.

பெரிமேஸன்: இன்னும் அவரைப்பற்றி என்னென்ன கிடைக்கக்கூடியதோ எல்லா விவரங்களையும் உடனே சேகரியுங்கள். அந்த எஸ்டேட்டுக்கு அருகே ஜம்புலிங்கம் என்பவர் தமது மனைவி, ஏழு வயது மகன் ஆகியவர்களுடன் வசித்து வந்தார். நேற்று இரவு அவர் கொலை செய்யப்பட்டு சங்கராபுரம் எஸ்டேட்டின் தோப்பின் நடுவே உள்ள புதரில் அவர் உடல் கிடக்கிறது. இதைத்தான் நான் இப்பொழுது போலீஸாருக்குத் தெரிவித்தேன்.

அர்ஜுன்சிங்: இது என்ன? போலீஸுக்கும் இந்தப் புகாரைத் தெரிவித்துவிட்டு என்னையும் துப்பறியச்சொல்கிறீர்களே! இது என்ன நியாயம்!

வக்கீல்: என்னுடைய நம்பிக்கை இந்தக் கொலை ·38 ரிவால்வரால் சுடப்பட்டிருக்கிறது என்பது. அந்தத் துப்பாக்கியும் அந்த எஸ்டேட்டின் அருகே புதரிலேயே கிடக்கிறது. இதோ நான் கொலை நடந்த இடத்தின் வரைபடத்தை வரைகிறேன். இந்த இடங்களையெல்லாம் நீ கவனமாக மனத்தில் வாங்கிக்கொள். நீ உடனே அங்கே போய்ப் பார். ரிவால்வரை அங்கே தேடவே வேண்டாம். கைப்பற்றவும் வேண்டாம். போலீஸாரை விட்டே அந்த இடத்தைத் தேடும்படிச் செய்து அந்தத் துப்பாக்கியை அவர்களே கைப்பற்ற ஏற்பாடு செய்ய வேண்டும். போலீஸார் அந்தத் துப்பாக்கியைப் புதரிலிருந்து தேடிக் கண்டுபிடித்தவுடனேயே எனக்குத் தெரிவிக்க வேண்டும்.

அர்ஜுன்சிங்: ஜம்புலிங்கம் கொலை செய்யப்பட்டதையும் ரிவால்வர் இருக்குமிடத்தையும் கணக்காக நீங்கள் சொல்வதைப் பார்த்தால் ஒருநாள் நம்மையும் சந்தேகப்பட்டு ஜெயிலில் வைத்துவிடுவார்கள்.

வக்கீல்: அதைப்பற்றி நீ கவலைப்படாதே. நான் சொல்வதைச் செய். சங்கரலிங்கத்தைப்பற்றியும் இந்தக்

கொலையைப்பற்றியும் உடனே ஒரு விவரங்கூட விடாமல் சேகரித்துவிடு. போலீஸார் வருத்தப்படாமலும் மிகவும் சாமர்த்தியமாகவும் புத்திசாலித்தனத்துடனும் தந்திரமாக நடந்து விசாரித்துவிடு. ஆனால் உன்னை ஏதாவது போலீஸ் அதிகாரிகள் விசாரித்தால், நான்தான் உன்னைத் துப்பறிய அனுப்பியதாகச் சொல். போலீஸார் புதரிலிருந்து துப்பாக்கியைத் தேடிக் கண்டுபிடித்ததும் உடனே எனக்குத் தெரியப்படுத்திவிடு. மேலும் நேற்று இரவு அங்கே 9 மணி முதல் 10 மணி வரை இருந்த கார் யாருடையது? பிரமிளா வின் காரை நிறுத்தி அதில் ஏறிக்கொண்ட துப்பறிபவர் யார்? அந்தக் காரில் எந்தவிதமான டயர்கள் மாட்டப் பட்டிருந்தன? சங்கராபுரம் எஸ்டேட்டில் டயர் சுவடுகள் எப்படிப் பதிந்திருக்கின்றன? அங்கே கிடக்கும் சிகரெட்டுத் துண்டுகள், காலித் தீப்பெட்டி, சிகரெட் பெட்டி இவைகள் ஏதாவது கிடைத்தால் அவைகளையும் சேகரித்துக்கொண்டு வந்துசேர். அத்துடன் நெடுஞ்சாலையிலுள்ள பெட்ரோல் பங்க்கில் விசாரித்து ஓர் அழகிய பெண்ணுடன் காரில் வந்த வரின் அங்க அடையாளங்களைக் கேட்டு அறிந்துகொள். நீ செய்வது அனைத்தும் போலீஸ்காரருக்குத் தெரியாமல் இருக்கவேண்டும். நீ செல்லும் இடங்களில் உன்னைத் தொடர்ந்து போலீஸார் பின்பற்றாமல் இருக்கும்படியும் கவனித்துக்கொள்.

இப்படி அவர் அர்ஜுன்சிங்கினிடம் சொல்லிக்கொண்டே இருக்கும்பொழுது திடீரென்று பெரிய போலீஸ் அதிகாரி நந்தகுமாரும், மற்றும் போலீஸாரும் பெரிமேஸன் அறைக் குள் முன்கூட்டியே வருவதாகத் தெரியப்படுத்தாமலும் முன் அனுமதி இன்றியும் நுழைந்துவிட்டார்கள்.

"இப்படி நீங்கள் வருவது உங்கள் வழக்கமாகிவிட்டது. இப்படி என்னுடைய அறைக்குள் எச்சரிக்கையில்லாமல் நுழைந்து எனக்குத் தொந்தரவு கொடுப்பதைவிட உங் களுடைய செயல்களில் குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் வெளியே காட்டினால் எவ்வளவோ நன்றாக இருக்குமே" என்று பெரிமேஸன் குத்தலாகக் கேட்டார்.

போலீஸ் அதிகாரி நந்தகுமார், "அது எங்களுக்குத் தெரியும். நீங்கள் உங்களுடைய துப்பறிபவருடன் என்ன யோசனை செய்துகொண்டிருக்கிறீர்கள் என்பதைக் கவனிக்கத்தான் திடீரென உங்களுக்குத் தெரியாமல் நாங்கள் இங்கு வந்தோம். அர்ஜுன்சிங் அவர்களே, துப்பறியும் விஷயத்தில் சட்டப்பிரகாரம் நியாயமாக நடந்துகொள்ளுங்கள். சட்டத்திற்கு முரணாக நடந்தால் உங்களுடைய லைசென்ஸ் ரத்தாகிவிடும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்" என்று கூறிவிட்டு, மீண்டும் பெரிமேஸனைப் பார்த்து, "கொலை நடந்ததைத் தங்களிடம் முதலில் தெரிவித்த உங்கள் கட்சிக்காரர் பெயரைத் தெரிந்து கொள்வதற்காக நான் இங்கு வந்தேன்" என்றார்.

வக்கீல்: அதை நான் சொல்வதற்குச் சட்டப்படி கட்டுப்பட்டவன் இல்லை. அது என் கடமையும் அன்று.

போலீஸ் அதிகாரி: இப்படி நீர் சொல்வதன் மூலம் அந்த வழக்குக்கு உடந்தையுள்ளவராய் இருக்கிறீர்கள் என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

வக்கீல்: அது எனக்குத் தெரியும். சட்டம் தெரியும். வழக்குக்கு எப்படி, எப்பொழுது போலீஸில் தெரியப்படுத்த வேண்டும்; சாட்சியத்தை மறைப்பது என்றால் என்ன என்ப தெல்லாம் எனக்கு ஒருவரும் ஞாபகப்படுத்தவேண்டிய அவசியம் இல்லை. என் கட்சிக்காரர் சொன்ன விவரங்களைத் தெரியப்படுத்தலாம்; தெரியப்படுத்தாமலும் இருக்கலாம். நேரில் பார்க்காத நிகழ்ச்சியைப்பற்றி யாரோ சொன்ன வுடன் அதைப்பற்றி உங்களிடம் சொல்லவேண்டிய அவசிய மில்லை. கேள்விப்பட்டதெல்லாம் சாட்சியம் ஆகாது. அங்கு துப்பு இருந்தாலும் இருக்கலாம். இல்லாமல் போனாலும் போகலாம். அதனால் நான் நேரில் காணாததை இப்பொழுது உங்களுக்குத் தெரிவிக்காமல்கூட இருந்திருக்கலாம். நான் டெலிபோனில் சொன்னதிலிருந்து குற்றம் இருக்கலாம் என்று எண்ணி என் கட்சிக்காரர் பெயரைச் சொல்லும்படி யாக என்னை வற்புறுத்துவது சரியல்ல.

பெரிமேஸன் இப்படிச் சொன்னவுடன் நந்தகுமார் சட்டென்று தம்முடைய குரலை மாற்றிக்கொண்டு, "இல்லை, இல்லை. நாங்கள் சந்தேகமாகத்தான் இங்கு வந்தோம்" என்று வேடிக்கையாகச் சொல்லிவிட்டு, "ஆனால் நீங்கள் கொலைக்குற்றவாளிக்கு உடந்தையாக—உதவியாக—இருப்பதாக நாங்கள் அறிந்தால்..." என்று வார்த்தை முடிக்கவில்லை.

வக்கீல்: "சட்டப்படி நிரபராதியான குற்றவாளி அல்லாதவனை, தவறுதலாகக் குற்றவாளியாக்கினால் அவருக்கு உதவுவதும் அவருக்கு உடந்தையாய் இருப்பதும் சட்டப்படி குற்றமல்ல, தெரியுமா?" என்று அதிகாரியை எச்சரித்து, "நீங்கள் வந்திருப்பது எங்கள் கட்சிக்காரரைப் பிடித்துக்கொள்வதற்காகத்தான் என்பது எனக்குத் தெரியும்" என்று மீண்டும் சுட்டிக் காட்டினார்.

பெரிய போலீஸ் அதிகாரி: அதுவும் சரிதான். நீங்கள் எனக்குப் போன் செய்துகொண்டிருக்கும்போதே உங்கள் காரியாலயத்திற்கு வந்து போகிறவர்களை நாங்கள் கண்காணிக்க முடிவு செய்தோம். ஆனால், போக்குவரத்து இடைஞ்சல்களினால் உங்கள் கட்சிக்காரர் எங்கள் கண்களிலிருந்து தப்பிவிட்டார். நீங்கள் டெலிபோன் செய்துகொண்டிருக்கும்பொழுது உங்கள் இடத்தைச் சுற்றிப் பெரிய வலை விரித்தோம். அதில் சிலர் சிக்கிக்கொண்டிருக்கிறார்கள். பொதுவாக நல்லது செய்வதைச் சிலர் கவனிப்பதில்லை. பைத்தியம் பிடித்தவர்கள்போல் கூக்குரல் இடுகிறார்கள் வேலை செய்யாவிட்டாலும் வேலை செய்யவில்லை என்று பத்திரிகைகளில் புகார் செய்கிறார்கள்.

பெரிமேஸன்: அதெல்லாம் சரி. இப்பொழுது உங்கள் வேலை இங்கில்லை. சங்கராபுரம் எஸ்டேட்டில்தான்; அங்கு செல்லுங்கள்.

பெரிய அதிகாரி: ஆகா; நாங்கள் ஒரே சமயத்தில் இரண்டு இடங்களையும் கவனித்துக்கொண்டுதான் வருகிறோம். உங்கள் கட்சிக்காரருக்குச் சங்கராபுரம் எஸ்டேட்டில்

கொலை நடந்தது தெரியுமா? அதை நாங்கள் கட்டாயம் தெரிந்துகொள்ளவேண்டும்.

வக்கீல்: அதை நான் நிச்சயம் சொல்லமுடியாது. யாரோ அவருக்குச் சொல்லியிருக்கலாம். அதைக் கேட்டு என்னிடம் அவர் சொல்லியிருக்கலாம். அதைக் கேட்டு நான் போலீஸுக்குத் தெரிவித்திருக்கலாம். என் கட்சிக்காரரே இந்தக் கொலையைச் செய்திருந்தால் நான் ஒருநாளும் போலீஸுக்குத் தெரிவித்திருக்கமாட்டேன். என் கட்சிக்காரர் என்னிடம் சொன்னது தொழில் முறையில் சட்டத்தால் காப்பாற்றப்படும்.

பெரிய போலீஸ் அதிகாரி: "அது சரிதான். ஆனால், போலீஸ்காரரே முதலில் கண்டுபிடிக்கட்டுமே என்ற எண்ணத்துடன் நீங்கள் முன் எச்சரிக்கையாக சில காரியங்களைச் செய்துவருகிறீர்கள் என்று நான் நினைக்கிறேன். எனக்கும் மேற்கொண்டு என்ன செய்யவேண்டும் என்று தெரியும்" என்று கூறிவிட்டு அங்கிருந்து புறப்பட்டார்.

அவர்கள் சென்றவுடன் பெரிமேஸன் பரபரப்புடன் தனது அந்தரங்கக் காரியதரிசி உஷாதேவியிடம், "எனக்கே போலீஸார் வலை விரித்துவிட்டிருக்கிறார்கள். நான் இப்பொழுதே கொலையுண்ட ரத்னத்தின் மனைவி மரகதத்தைப் பார்க்கவேண்டும். அதனால் நீ என்னுடைய காரை வேறு இடத்திற்கு எடுத்துக்கொண்டு போய் நிறுத்தி வைத்திரு..." என்று அவர் சொல்லிக்கொண்டே இருக்கும்பொழுது மீண்டும் போலீஸ் அதிகாரி, பிரமிளாவைக் கையுடன் அங்கே அழைத்துக்கொண்டு வந்துவிட்டார். "அடையாளம் தெரிகிறதா? இந்தப் பெண்தானே உங்கள் கட்சிக்காரர்? கொலை செய்ததை உங்களிடம் தெரியப்படுத்தியவர்?" என்று குறும்பாகக் கேட்டார்.

பெரிமேஸன்: ஓ! இவளா? செக் கொடுக்க வந்திருக்கிறாள்!

போலீஸ் அதிகாரி: அவளுடைய செக் புத்தகப்படி நேற்றே உங்களுக்கு 25 ரூபாய்க்கு அவள் செக் கொடுத்திருக்கிறாளே!

பெரிமேஸன்: (கோபமடைந்து) நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பது எனக்குப் புரிகிறது. கொலை சம்பந்தமான விஷயம் எனக்கு நேற்றே தெரிந்திருந்தும், என்னுடைய கட்சிக்காரர் என்னைச் சந்தித்து நேற்றே பணம் கொடுத்திருந்தும், நான் உடனே உங்களிடம் புகார் செய்யாதது தொழில் சம்பந்தப்பட்ட முறையில் பெரும் குற்றமாகாது. ஆனால், நீங்கள் ஒரு நபரைக் குற்றவாளி என்று கைது செய்வதற்கு முன்பு அந்த நபரிடமிருந்து சோதனை செய்து கைப்பற்றியது மட்டும் என்ன நியாயம்? ஏதோ நியாயத்திற்குப் பாடுபடுவதாக வேறு சொல்லிக்கொள்கிறீர்கள். இதுதான் நியாயமா? நேர்மையா? இவளை ஏன் இங்கு அழைத்து வந்தீர்கள்?

போலீஸ் அதிகாரி: நீங்கள் மிகவும் புத்திசாலி; மேதை. இப்படித் திடீரென்று சட்டத்தை நுழைத்து எங்களை மடக்கப் பார்க்கலாமா? யோக்கியமாகவும் நல்லெண்ணத்துடனும் பாடுபடுவதற்குச் சிறிதுகூட மதிப்புக் கொடுக்க மாட்டேன் என்கிறீர்கள். அரைமணி நேரமாய் இந்தப் பெண் பிரமிளாவை நாங்கள் எவ்வளவோ கேட்டோம். எதற்காகத் தங்களுக்கு 25 ரூபாய்க்கு செக் கொடுத்தாள் என்பதைச் சொல்லமாட்டேன் என்கிறாள். மேலும் கடந்த ஒருமணி நேரமாய் தான் எங்கிருந்தாள் என்பதையும் அவள் தெரிவிப்பதற்குப் பிரியப்படவில்லை. நீங்கள் எங்களுக்குப் போன் செய்த உடனே உங்கள் ஆபீஸை விட்டு வரும் ஒவ்வொருவரையும் அவர்கள் யார், எந்தப் பகுதிக்குப் போகிறார்கள், அவர்கள் எங்கே தங்கள் காரை நிறுத்துகிறார்கள், எந்த இடத்திற்குப் போகிறார்கள் என்பதைக் கண்காணிக்க ஏற்பாடு செய்தோம். உங்கள் காரியாலயத்திற்கு எதிரேயிருந்து புறப்படும் கார்கள் அனைத்தையும் கண்காணிக்க உத்தரவிட்டோம். அதனால் சில பேருக்கு இடைஞ்சல் ஏற்பட்டிருக்கலாம். பொதுமக்களுக்கும் சற்றுச் சிரமம்தான். விமான நிலையத்திற்கு நேரத்தில் போக முடியாமல் ஒருவருக்கு அதனால் தொல்லைகூட ஏற்பட்டுவிட்டது. நாங்கள் என்ன செய்யமுடியும்? பொது

மக்களின் நன்மைக்காக இவற்றையெல்லாம் நாங்கள் செய்துதான் ஆகவேண்டியிருக்கிறது. அப்படி வலை வீசிய பொழுது கார்களை நிறுத்தும் இடத்தில் பிரமிளாவைக் கண்டோம். அவளால் தக்க சமாதானம் கூற முடியவில்லை. அவளால் திடீரென்று கற்பனை ஏதும் செய்து கூறவும் முடியவில்லை. முதலில் அவள் டிரைவிங் லைசென்ஸை பார்த்துக் கேள்விகள் கேட்க ஆரம்பித்தோம். அவள் உடனே வக்கீல் அனுமதியில்லாமல் தான் எதற்கும் பதில் சொல்லமுடியாது என்று கண்டிப்பாக மறுத்துவிட்டாள். அவளுடைய டிரைவிங் லைசென்ஸை எடுத்துப் பார்த்த பொழுது அதிலிருந்த செக் புத்தகத்திலிருந்து தங்களுக்கு 25 ரூபாய்க்குச் செக் கொடுத்து இருப்பது கண்ணில் பட்டது. உடனே அவள் தங்கள் கட்சிக்காரி என்பதை எளிதில் தீர்மானித்துவிட்டோம். சங்கராபுரம் எஸ்டேட்டில் இருக்கும் பிரேதத்தைப்பற்றி ஏதாவது தெரியுமா என்று அவளை உடனே கேட்டோம். அவள் சில விநாடிகள் சும்மா இருந்துவிட்டு எதற்கும் வக்கீலைப் பார்த்துப் பேசிவிட்டுத்தான் பதில் சொல்லமுடியும் என்று அழுத்தம் திருத்தமாகக் கூறிவிட்டாள்.

பெரிமேஸன்: என்னய்யா? என்னுடைய 'பீஸ்' 25 ரூபாய் தான் என்று நினைக்கிறீர்களா? அதனால் அவள் என்னுடைய கட்சிக்காரியாகிவிட முடியுமா?

போலீஸ் அதிகாரி: ஐயா, மன்னிக்கவும். நாங்கள் அப்படிக் குறைவாக நினைத்துவிடவில்லை. நேற்று வேறு ஏதாவது ஆலோசனை கேட்க உம்மிடம் வந்திருக்கலாம். அதற்காக 25 ரூபாய்க்கு செக் கொடுத்திருக்கலாம். நேற்று அவள் கேட்ட அந்த ஆலோசனை இன்று காலை நிறைவேறியிருக்கும்.

அப்பொழுது பிரமிளா பெரிமேஸனை நோக்கி மிகவும் பரிதாபகரமாகப் பார்த்தது 'எனக்கு உதவி புரியவேண்டும்' என்று கேட்பதுபோல் இருந்தது.

பெரிமேஸன்: பிரமிளா என்னுடைய கட்சிக்காரிதான். நான் அவளுடன் தனியாகப் பேசவேண்டும்.

"அப்படி அனுமதி கொடுக்க முடியாது. நாங்கள்—போலீஸ்காரர்கள்—விசாரித்தவுடனே சர்க்கார் வக்கீல் விசாரிக்கவேண்டும். அதற்குமுன் நாங்கள் யாரையும் அனுமதிக்கமுடியாது" என்று அதிகாரி கண்டிப்பாகத் தெரிவித்து விட்டார்.

பெரிமேஸன்: அப்படியானால் அவளைக் கைது செய்திருக்கிறீர்களா?

போலீஸ் அதிகாரி: அழகு நிறைந்த அந்தஸ்துள்ள பெண். ஆனால், கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லத் தயங்குகிறாள், அதனால் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. சந்தேகம் தீரும்வரை அவள் கைதிபோல்தான்.

வக்கீல்: சரி, சரி, அதனால்தான் போலீஸோடு ஒத்துப் போவது எங்கள் தொழிலுக்கே ஆபத்து என்பதை நான் ஊர்ஜிதம் செய்துவிட்டேன். நான் அரைமணி நேரம் தாமதமாக டெலிபோன் செய்திருந்தால் நீங்கள் என்ன செய்திருப்பீர்கள்?

போலீஸ் அதிகாரி, "ஹோ! அப்பொழுது நாங்கள் என்ன செய்வோம் தெரியுமா; உங்கள் கடமையைச் சரியாகச் செய்யாததாகவும், கொலை நடந்த செய்தியைத் தெரிந்தும் மறைத்ததாகவும், சாட்சியங்களை மறைப்பதற்கு ஏற்பாடு செய்ததாகவும் குற்றம் சாட்டுவோம். ஆனால், நீங்கள் பிரமிளாவை வெளியே அனுப்புவதையும் போலீஸுக்கு டெலிபோன் செய்வதையும் ஒரே நேரத்தில் கையாண்டிருக்கிறீர்கள். பழைய காலத்துப் போலீஸார் என்றால் ஏமாந்து விடுவார்கள். ஒரே பாதையில் சாமர்த்தியமும் முன் யோசனையும் இல்லாமல் நாங்கள் போய்க்கொண்டிருப்போம் என்று தப்புக் கணக்கு போட்டிருப்பீர்கள். இப்பொழுது அப்படியில்லை. நீங்கள் உங்களுடைய தொழில் சாமர்த்தியப்படி உங்கள் கட்சிக்காரருக்குப் புத்தி சொல்லலாம். அதில் எனக்கு ஆட்சேபணையில்லை" என்று திட்டவட்டமாகக் கூறினார்.

வக்கீல் உடனே பிரமிளாவை நோக்கி, "நீ ஒரு வாக்குமூலம் போலீசாரிடம் கொடுக்கவேண்டும். அவர்கள் கேட்கும் எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லவேண்டாம் இந்த வழக்கின் போக்கைத் தெரிந்து நான் சொன்னபிறகு தான் நீ பேசவேண்டும். போலீஸ் அதிகாரி எவ்வளவோ பசப்பு வார்த்தைகளைச் சொல்வார். உன்னைத் தம் சொந்த பெண்மாதிரிக் காப்பாற்றுவதாகவும் எல்லா உதவிகளையும் செய்து தருவதாகவும் கூறுவார். கடந்த 24 மணி நேரம் எங்கிருந்தாய், என்ன செய்துகொண்டிருந்தாய் என்பதைத் தெரிவித்துவிட்டால் உன்னைக் காப்பாற்றி விடுதலை செய்து விடுவதாகவும் ஆசை வார்த்தைகளைக்கூறி ஏமாற்றுவார்கள். நீ அனாவசியமான விஷயங்களையெல்லாம் சொல்லும்படியாகச் செய்து விடுவார். நீ ஒரிரு வார்த்தைகூட பேச வேண்டாம். நான் நேரில் பேசிக்கொள்கிறேன்" என்று எச்சரித்தார்.

போலீஸ் அதிகாரி: "சரி, சரி, இதுவரையில் போதும். அவள் உங்கள் கட்சிக்காரிதான் என்பது எங்களுக்குத் தெரிந்துவிட்டது. இனி நாங்கள் அவளை அழைத்துச் செல்கிறோம். அத்துடன் நீங்களும் ஒரு கொலைவழக்கில் சம்பந்தப்பட்ட நபர்தான். அதனால் அவளுடன் கூட நீங்களும் வரக்கூடாது. அவள்மீது நாங்கள் வழக்குத் தொடர்ந்தபிறகு தான் வக்கீல் என்ற உரிமை உங்களுக்கு உண்டு" என்று கூறினார்.

வக்கீல், பிரமிளாவை நோக்கி அழுத்தம் திருத்தமாக, "நீ ஒரு சிறு கேள்விக்குக்கூட பதில் சொல்லவேண்டாம். 'நீ எங்கே வசிக்கிறாய்? இப்பொழுது மணி என்ன?' என்று கேட்டால்கூட நீ வாயைத் திறக்காமல் மௌனம் சாதிக்க வேண்டும். உன்னுடைய கைப் பையை அவர்கள் சோதனை போட்டதே அவர்கள் செய்த முதற்குற்றம்......" என்று அவர் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே போலீஸ் அதிகாரி பிரமிளாவைத் தம்முடன் அழைத்துச் சென்றுவிட்டார்.

அவர்கள் சென்றதும் வக்கீல் உஷாதேவியிடம், "நீ உடனே போய் காரை எடுத்துக்கொண்டு இப்படியும் அப்படியும் செல்வதாகச் சாலையில் ஒரு பத்து நிமிஷத்திற்குப்

போக்குக் காட்டிக்கொண்டிரு. அந்தப் பகுதியிலேயே சுற்றிக்கொண்டிரு. காரை எங்கும் நிறுத்தவேண்டாம்; நான் வந்ததும், என்னைப் பார்த்ததும் மெதுவாகச் செல். திடீரென்று நான் காரில் ஏறிக்கொள்கிறேன். உடனே நீ போ!'' என்று கூறி அவளை அனுப்பினர். அவள் செல்லும் பொழுது, “ உஷா! நாம் இந்த ஒரு விஷயத்திலாவது போலீஸாருக்கு முன்பாக காரியத்தைச் சாதித்துக்கொள்ள வேண்டும். நீ ஒரு பத்து நிமிஷம் சாலையில் இப்படியும் அப்படியும் செல்வதாகப் போக்குக் காட்டிக்கொண்டிருக்க வேண்டும், ஜாக்கிரதை!'' என்று திரும்பவும் எச்சரித்தார்.

5

கொலையுண்டவனின் மனைவி மரகதத்தை மேஸன் சந்திக்கிருர்

பெரிமேஸன் காரியாலயம் இருக்கும் சாலை எப்பொழுதுமே ஜனநடமாட்டமும் போக்குவரத்துச் சந்தடியும் மிகுந்து காணப்படும். ஒரு கார் வழியில் நின்றுவிட்டால்கூட அதைத் தொடர்ந்து இரண்டு பர்லாங்கு தூரத்திற்குக் கார்கள் நின்றவண்ணம் இருக்கும். பெரிமேஸன் சொன்னபடியே அவருடைய அந்தரங்கக் காரியதரிசி உஷா தேவி காரை ஓட்டிக்கொண்டு இரண்டு மூன்று முறை அந்தத் தெருவிலேயே வலம் வந்துகொண்டிருந்தாள். மெதுவாகக் காரை ஓட்டியவாறு அவள் சென்றுகொண்டிருந்தாள். வக்கீலும் தான் சொன்னதுபோலவே ஓர் இடத்தில் காரின் கதவைத் திடீரென திறந்துகொண்டு ஏறி அமர்ந்துகொண்டார். ஒருவரும் அறியாமல் அவர்கள் மரகதத்தின் வீட்டை அடைந்தனர்.

வீட்டிற்குள் நுழைந்து முன்வரவேற்பு அறையில் வக்கீலும் உஷாவும் உட்கார்ந்தனர். மரகதம் உள்ளேயிருந்து வந்திருப்பவர்களை விசாரிப்பதற்காக அங்கு வந்தாள். பெரிமேஸன் தன்னை அறிமுகம் செய்துகொண்டார். மரகதம் உடனே முக மலர்ச்சியுடன் கைகூப்பி, வணக்கம் தெரிவித்து அவரைப்பற்றி நிறைய கேள்விப்

பட்டிருப்பதாகவும் அவருடைய போட்டோவைப் பத்திரிகைகளில் பார்த்திருப்பதாகவும் கூறினுள். அவர் அங்கு வந்திருப்பதற்குத் தான் மிகவும் மகிழ்ச்சி அடைவதாகவும் தெரிவித்தாள்.

பிரமிளாவைப்பற்றி விசாரிப்பதற்காகத் தான் வந்திருப்பதாக அவர் சொன்னவுடன் மரகதம் ஆச்சரியமடைந்து, "அவள் இங்குதான் தங்கியிருக்கிருள். அவளுக்குப் புத்தகக் கம்பெனி ஒன்றில் வேலே. நேற்று இரவு வெகு நேரம் கழித்து வீட்டிற்கு வந்தவள் வழியில் யாரோ ஒரு 'டிடெக்டிவ்' அவள் காரை நிறுத்தித் துப்பாக்கியை அவளுடைய மடியில் போட்டுவிட்டதாகப் பொய்க் கதை சொன்னுள். முன்பெல்லாம் அவள் பொய் சொல்லமாட்டாள். இப்பொழுது அடிக்கடி பொய் சொல்கிருள். அவள் இதைச் சொன்னவுடன் நான் நம்பவில்லே. ஆனுல், அந்தத் துப்பாக்கியையே அவள் என்னிடம் கொடுத்தாள். எனக்குத் துப்பாக்கியைப்பற்றி ஒன்றும் தெரியாது என்பதும் அவளுக்குத் தெரியும். அவள் அந்தத் துப்பாக்கியைக் காண்பித்து அதில் ஏற்கனவே ஒரு குண்டு (ரவை) சுடப்பட்டுவிட்டதாகவும் கூறினுள். நான் அதையெல்லாம் ஒன்றும் நம்பவில்லே. அவள் பேசும்பொழுது மிகவும் கவனமாக ஒவ்வொரு வார்த்தையாக அளந்து பேசியது எனக்கு வியப்பாக இருந்தது" என்று கூறினுள்.

வக்கீல்: ஒருவேளே அந்தத் துப்பாக்கியை வேறு யாராவது பிறரைச் சுடுவதற்குப் பயன்படுத்தி, பிறகு அதைத் தான் வைத்துக்கொள்வதற்கு இஷ்டப்படாமல் குற்றத்திலிருந்து தப்பிப்பதற்காகப் பிரமிளாவிடம் கொடுத்திருக்கலாமோ?

வக்கீல் இவ்வாறு சொன்னவுடன் மரகதம் சற்று நேரம் யோசனே செய்தாள். பிறகு மெல்ல, "எனக்கு அப்படித் தோன்றவில்லே. பிரமிளா ஏதோவொரு சிக்கலில் அகப்பட்டுக்கெண்டிருக்கிருள். அதை மறைப்பதற்காக இப்படியெல்லாம் பொய்க் கதை அளக்கிருள். நான் நம்பவில்லே என்பதையும் அவள் தெரிந்துகொண்டுவிட்டாள்" என்றுள்.

வக்கீல்: ஆமாம், துப்பாக்கி அவளுக்கு எப்படிக் கிடைத்தது என்பதை நீங்கள் பிறகு விசாரித்தீர்களா?

மரகதம்: அந்தத் துப்பாக்கியை அவளே எடுத்துக் கொண்டு போய்விட்டாள். இன்று காலேயிலிருந்து அவளே நான் பார்க்கவில்லே. அவள் டெலிபோனும் செய்யவில்லே. ஆனுல், சில மணி நேரங்களுக்கு முன்பு அவளே யாரோ ஒருவர் போனில் அழைத்தார்கள். நான் போனில் கூப்பிடுபவர் பெயரைக் கேட்டுக்கொள்ளவில்லே.

வக்கீல்: உங்கள் கணவர் இப்பொழுது வீட்டில் இல்லேயா?

வக்கீல் இப்படி கேட்டவுடன் மரகதம் சட்டென்று முகத்தில் ஒருவித மலர்ச்சியை வரவழைத்துக்கொண்டு, "என் புருஷர் வியாபார விஷயமாக நேற்று வெளியூர் போய் விட்டார். சில சமயங்களில் வெளியூர் போனுல் வருவதற்கு இரண்டு மூன்று வாரங்கள்கூட ஆகும்.

வக்கீல்: "ஹோ! எந்த ஊர் போய் இருக்கிருர்? ரயிலில் போய் இருக்கிருரா? காரில் போய் இருக்கிருரா? இல்லே விமானத்தில் போய் இருக்கிருரா?"

மரகதம்: அவர் காரிலும் போவார் டிரெயினிலும் போவார். ரொம்ப அவசரம் என்ருல் ஆகாய விமானத்திலும் போவார். ஆனுல், என் சிநேகிதி பிரமிளா சில சமயங்களில் என் கணவர் செல்லும் இடங்களேயெல்லாம் முன்கூட்டியே தெரிந்துகொண்டு விடுவது வழக்கம். இப்பொழுதுகூட அவர் சென்றிருக்கும் இடம் அவளுக்குத் தெரிந்திருக்கலாம். வரவர அவளுடைய போக்கே எனக்கு சந்தேகத்திற்கு இடம் கொடுக்கிறது. அத்துடன் அவள் நேற்றுக் காலேயிலிருந்தே ஒரு மாதிரியாக நடந்துகொள்கிருள். என் சிநேகிதியைப்பற்றித் திடீரென்று அதிகம் அறிமுகமில்லாத உங்களிடம் பேசுவதற்கு மன்னித்துக் கொள்ளுங்கள்......

வக்கீல்: அதனுல் பரவாயில்லே. நான் பிரமிளாவைப் பற்றி எல்லா விஷயங்களேயும் தெரிந்துகொள்வதற்காகத்

தானே இங்கு வந்தேன். நீங்களே அவள் குண தோஷங்களைச் சொல்லும்பொழுது இதில் என்ன தவறு?

அவர் அப்படிச் சொன்னவுடன் மரகதம், "ஆமாம், இரண்டு நாட்களாக அவளுடைய போக்கே எனக்குப் பிடிபடவில்லை. அவளுடைய பெட்டியில் 'ஸ்ட்ரிக்னைன்' பாஷாணம் வைத்திருந்தாள். ஒருவேளை அது எலியை ஒழிப்பதற்காக வைத்திருக்கலாம் என்று நான் நினைத்தேன். அவள் எதற்காக விஷத்தை வைத்துக்கொண்டிருக்கிறாள் என்று எனக்குத் தெரியவில்லை. அவள், வீட்டில் அரைகுறை உடையோடு இருக்கும்பொழுது என் கணவர் அந்தப்பக்கம் போனால்கூட அவள் பெண்களுக்கு இயற்கையாக ஏற்படும் நாணத்துடன் மறைத்துக்கொள்வதில்லை. ஆமாம், நீங்கள் ஏன் பிரமிளாவைப்பற்றித் திடீரெனக் கேட்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

வக்கீல்: பிரமிளா ஆபத்து ஒன்றில் சிக்கிக்கொண்டிருக்கிறாள். போலீஸ் அவளை விசாரித்துக்கொண்டிருக்கிறது. அதனால்தான் நான் அவளுடைய குணநலன்களைப் பற்றி உங்களிடம் விசாரித்துக்கொள்வதற்காக வந்தேன். ஏனென்றால் நீங்கள் அவளுடன்கூட இருப்பவர்களாயிற்றே. நெருங்கிய சிநேகிதி வேறு. அதனால் அவளைப்பற்றிய உண்மைகளையெல்லாம் சொல்லலாம் அல்லவா?

மரகதம்: நான் வேறு என்ன சொல்லமுடியும்? உண்மையைத்தான் சொல்லமுடியும். நான் எதையும் மறைக்கமுடியாது.

வக்கீல்: போலீஸ் வந்து உங்களை விசாரிக்கலாம். அவர்கள் வருவதற்குமுன்பு நான் தங்களைச் சந்திக்க வேண்டுமென்பதற்காகத்தான் இங்கு வந்தேன். நாம் பேசிக்கொண்டிருக்கும்போதே போலீஸ் வந்துவிடலாம். அவர்கள் வருவதற்குமுன் நாம் இங்கிருந்து கிளம்பிவிடுவோம். நீங்கள் இங்கிருந்து உங்களிடம் போலீஸார் விசாரித்துக்கொண்டிருந்தால் பிரமிளாவுக்கு விரோதமாகக்கூட அவர்கள் கேள்விகளைக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். அதனால், உங்களுக்கு

ஆட்சேபணையில்லையென்றால் என்னுடன் காரிலே பேசிக்கொண்டே வரலாம். பிரமிளாவைப்பற்றி மேலும் உங்களுக்குத் தெரிந்ததைச் சொன்னீர்களானால் நான் அவளைக் காப்பாற்றுவதற்கு உபயோகமாய் இருக்கும். இவள்தான் மிஸ் உஷாதேவி, என் காரியதரிசி. இவள் நம்முடன் வரமாட்டாள். வேறு காரில் வருவாள்.

மரகதம் ஒருகணம் யோசித்தாள். பிறகு, "சரி, நான் எப்படியும் பிரமிளாவுக்கு உதவித்தான் ஆகவேண்டும். நான் வருகிறேன் உங்களுடன். அவளைக் காப்பாற்றுவதற்கு பொய்கூடச் சொல்லத் தயார். நீங்கள் அவளைக் காப்பாற்றும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறீர்களா? நீங்கள் எப்படியாவது அவளைக் காப்பாற்றவேண்டும். ஒரு நிமிஷம் இருங்கள். இதோ நான் காரை ஷெட்டிலிருந்து எடுத்துக்கொண்டு புறப்பட்டு வருகிறேன்" என்று கூறிச் சென்றாள்.

மரகதம் சென்ற மறுகணம் அவள் ஷெட்டைத் திறந்து காரை எடுத்து லாவகமாகக் காரை ஓட்டுவதிலிருந்து அவள் கார் ஓட்டுவதில் மிகவும் பழக்கப்பட்டவள் என்பது புலப்பட்டது. வக்கீல் அவள் அருகே அமர்ந்தார். "நாம் சந்தடியற்ற ஓர் இடத்திற்குச் சென்று சற்றுநேரம் மனம் விட்டுப் பேசிக்கொண்டிருக்கலாம், அல்லவா?" என்றார் வக்கீல். "ஆகா, கட்டாயம். நாம் எங்கு போகலாம்? மரப்பாலம் பகுதிக்குச் சென்றுவிடுவோமா?" என்றாள் மரகதம். மரப்பாலம் கடற்கரைப் பகுதி. அங்கே ஜனநடமாட்டம் குறைவு. அழகிய சாலை. இருபுறங்களும் அடர்ந்த மரங்கள். கடற்கரை ஒட்டியே சாலை சென்றது. கார் அந்தச் சாலையில் விரைந்து சென்றது. அவளுடன் வக்கீல் மிகவும் சாமர்த்தியமாகப் பேச்சுக் கொடுத்துகொண்டு வந்தார். அவர் பேச்சுக் கொடுத்ததிலிருந்து மரகதம் கீழ்க்கண்ட விவரங்களை வக்கீலிடம் சொன்னாள்:

"என் கணவர்மீது எனக்கு மிகவும் அன்பு என்பதை நான் வெறும் வார்த்தைகளால் எப்படிச் சொல்லமுடியும்? அவர் வியாபார நிமித்தமாக வெளியூர் போகும் நாட்களில்

நான் மிகவும் வேதனையுடன்தான் வீட்டில் இருப்பேன். அவர் என்ன வேலை செய்கிறார், என்ன சம்பாதிக்கிறார் என்பதெல்லாம் எனக்குத் தெரியாது. எனக்குத் தனியாக பாங்க்கில் கணக்கு இருக்கிறது. அவருக்குத் தனியாக பாங்க்கில் கணக்கு இருக்கிறது.....'' என்று மரகதம் சொன்னபோது வக்கீல், ''உங்களுக்கு சங்கராபுரம் எஸ்டேட் சொந்தக்காரர் சங்கரலிங்கத்தை தெரியுமா?'' என்று கேட்டார்.

மரகதம்: எனக்கு அவரை நேரடியாகத் தெரியாது. ஆனால் அவரைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

வக்கீல்: உங்கள் கணவருக்கு அவரைத் தெரியுமா அல்லது அவருடன் சேர்ந்து இவர் ஏதாவது தொழில் செய்கிறாரா? அவர் கடிதங்கள் ஏதாவது உங்கள் வீட்டிற்கு எழுதும் வழக்கம் உண்டா?

மரகதம்: அதைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. என் புருஷருக்கு அவரைத் தெரியுமா, தெரியாதா என்பதும் எனக்குத் தெரியாது.

வக்கீல்: நேற்று இரவு உங்கள் சிநேகிதி பிரமிளா 'யாரையோ பார்க்கப் போய் இருந்தேன்' என்று சொன்னாளே, அவர் யார் என்று தெரியுமா உங்களுக்கு?

மரகதம்: ஓஹோ! அவரா? ஐம்புலிங்கத்தைப் பார்க்கப்போகிறாள் என்பதுதான் தெரியுமே ஒழிய ஐம்புலிங்கம் யார் என்பது எனக்குத் தெரியாது. ஆமாம்; நீங்கள் ஏன் இதைப்பற்றியெல்லாம் துருவித் துருவிக் கேட்கிறீர்கள்? பிரமிளாவுக்கு என்ன சங்கடம் ஏற்பட்டிருக்கிறது என்பது எனக்குத் தெரியவேண்டும். அதையெல்லாம் சொல்லாமல் சுற்றி வளைத்து என்னை என்னென்னமோ கேட்கிறீர்களே! என்னை மட்டும் கேள்வி கேட்கிறீர்கள். ஆனால், நீங்கள் ஒன்றும் சொல்லமாட்டேன் என்கிறீர்களே! ஒருவேளை என்னுடைய கணவர் ரத்னத்தையும் பிரமிளாவையும் எங்காவது சந்தேகமான இடத்தில் போலீஸார் பிடித்துவிட்டார்களா?

வக்கீல் சற்றுப் புன்முறுவலுடன்: உங்கள் சிநேகிதிக்கும் உங்கள் கணவருக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது என்று தெரிந்தும் நீங்கள் அவளை ஏன் வீட்டைவிட்டு வெளியேற்றவில்லை?

மரகதம் வரட்சியான சிரிப்புடன், ''அது எப்படி முடியும்? ஆணுடைய போக்கை அவ்வளவு இலேசிலே கண்டு பிடித்துவிட முடியாது. மேலும் என் கணவரை யாரும் அவ்வளவு எளிதில் என்னிடமிருந்து பிரித்துவிட முடியாது. எப்பேர்ப்பட்ட அழகியாய் இருந்தாலும் ஒரே ஒரு வேளைக்கு என் கணவருடன் பழகலாமே ஒழிய என்னிடமிருந்து நிரந்தரமாகப் பிரித்துக்கொள்ளும் சக்தி அவளுக்கு இல்லை...'' என்று சொல்லிக்கொண்டே அவள் காரிலிருந்த ரேடியோவைத் திருப்பினாள்.

பகல் செய்தியை ரேடியோ அறிவித்துக்கொண்டிருந்தது. அந்த ரேடியோ செய்தியைக் கேட்டுக்கொண்டே வந்தவள், ''என் கணவரின் குணத்தை நான் சிறிது காலமாக மிகவும் கூர்ந்து கவனித்து வருகிறேன். இப்பொழுதெல்லாம் அவருக்குச் சில பெண்களிடம் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டு வருகிறது என்பதை அறிந்துகொண்டேன். ஆனால், நான் அதைக் குறித்து அவரை விசாரிப்பதில்லை'' என்று அவள் வக்கீலிடம் சொல்லிக்கொண்டேயிருக்கும்பொழுது, ரேடியோவில் செய்தி தொடர்ந்து கேட்டது: ''சங்கராபுரம் எஸ்டேட்டின் அருகே ரத்னம் என்பவர் மார்பில் சுடப்பட்டுக் கிடந்தார். அவர் நேற்று இரவு 9 மணியிலிருந்து 12 மணிக்குள் கொலை செய்யப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. அவர் வைத்திருந்த கார் டிரைவிங் லைசென்ஸிலிருந்து அவர் பெயர் ரத்னம் என்பது கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால், அவருடைய டிரைவிங் லைசென்ஸில் உள்ள கைரேகையும் அவர் அருகே விடப்பட்டிருந்த காரும் அவரை ஐம்புலிங்கம் என்று உறுதிப்படுத்துகிறது. மேலும் சோதனை போட்டதில் ஐம்புலிங்கத்திற்கும் கார் டிரைவிங் லைசென்ஸ் இருப்பது தெரிய வருகிறது. அதிலிருந்த கைரேகையையும் ரத்னத்தின்

கைரேகையையும் ஒப்பிட்டுப் பார்த்ததில் இரண்டும் ஒன்ருக இருந்தது தெரியவருகிறது. இது பெரும் புதிராக இருக்கிறது'' இவ்வாறு செய்தி அறிவிப்பாளர் சொல்லிக்கொண்டே போனுர்.

திடீரென்று மரகதம் 'கிரீச்' என்று கூவினுள். காரை 'சடன்' பிரேக் போட்டு நிறுத்தினுள். திடீரென்று பிரேக் போட்டுவிட்டதால் வக்கீல் முன்கண்ணுடியில் முட்டிக்கொண்டார். மரகதம் 'ஹோ' என்று கூவி அழ ஆரம்பித்தாள். அவளால் மேற்கொண்டு பேசமுடியவில்லை. கார் ஸ்டியரிங்மேல் சாய்ந்துகொண்டாள். "ஐயோ! என் புருஷனை அவள்தான் கொன்றிருக்கவேண்டும். பிரமிளா, நீ இப்படிச் செய்வாய் என்று எனக்குத் தெரியாது. நீ குற்றத்திலிருந்துத் தப்பிப்பதற்காக இந்த வக்கீலை அனுப்பியிருக்கிருயா? என்மீது குற்றம் சுமத்துவதற்குத் திட்டமிடுகிருயா?'' என்று அலறி வக்கீலின் பக்கம் திரும்பி, "நீங்கள் காரிலிருந்து உடனே இறங்குங்கள். என் முன்னுல் நிற்காதீர்கள். பிரமிளா எல்லாம் முன்ஏற்பாடு செய்து என்னைச் சிக்கவைப்பதற்காகத் திட்டமிட்டிருக்கிருள்'' என்று பேய் பிடித்தவள்போல் கூவினுள்.

வக்கீல் அவளைச் சமாதானப்படுத்தும் நோக்கத்துடன், "மிகவும் ஆத்திரப்பட்டுப் பதட்டப்பட்டுப் பேசாதே. நான் சொல்வதைச் சற்றுக் கவனமாகக் கேள்'' என்று அவர் சொல்லத் தொடங்கியவுடன், மரகதம் அரக்கி போல் வக்கீலைப் பிடித்து உலுக்கினுள். பரபரவென்று எழுந்து வந்து அவர் கரத்தைப் பிடித்து நடுச்சாலையிலே இழுத்துத் தள்ளிவிட்டாள். போய்விடு, இங்கிருந்து. இன்னும் என் முன்னுல் நின்ருல் உன்னைக் கொன்று விடுவேன்'' என்று கூறிவிட்டு அவள் காரை ஓட்டிக்கொண்டு வேகமாகச் சென்றுவிட்டாள். கீழே விழுந்த வக்கீல் மண்ணைத் தட்டிக்கொண்டு தட்டுத்தடுமாறி மெல்ல எழுந்து நின்ருர்.

வக்கீல் திகைத்து நிற்கையில் அவர்கள் காரைத் தொடர்ந்து வந்த உஷாவின் கார் அவர் அருகே வந்து

நின்றது. உஷா புன்முறுவலுடன், "என்ன? பேட்டி எப்படி? ரொம்பவும் சுமுகமாகத்தானே சம்பாஷணை நடந்தது?'' என்ருள்.

வக்கீல் முகத்தை ஒருமாதிரியாக வைத்துக்கொண்டு, "மரகதம் அழகானவள்தான். ஆனுல், மிகவும் அடங்காப் பிடாரிபோல் இருக்கிறது. பெண்களின் கரங்கள் மெல்லிய கரங்கள் என்று சொல்வார்கள். அப்பப்பா, அவள் பிடித்து என்னைத் தள்ளினுளே, இன்னும் வலிக்கிறது'' என்ருர். "அந்த ரேடியோ செய்தி ஒன்று வராமல் இருந்திருந்தால் இன்னும் நான் எவ்வளவோ செய்திகளை அவளிடமிருந்து கிரகித்து இருப்பேன். ஐம்புலிங்கமும் ரத்னமும் ஒருவர்தான் என்பதை ரேடியோவில் கூறியதும் ரத்னத்தைக் கொன்றவள் பிரமிளாதான் என்பதை மரகதம் முடிவு செய்திருக்க வேண்டும். அத்துடன் பிரமிளாவைக் காப்பாற்றுவதற்காகத்தான நான் அவளை இவ்வாறெல்லாம் கேள்விகள் கேட்கிறேன் என்றும் அவள் எண்ணியிருக்கவேண்டும். ஊம்; சரி சரி, இங்கே நாம் நின்று பேசிக்கொண்டிருப்பதில் பிரயோஜனம் இல்லை. உடனே சங்கராபுரம் எஸ்டேட்டுக்குப் போகவேண்டும். அர்ஜுன்சிங் அங்கு போய் இருப்பான் அல்லவா? ஆனுல், அங்கே அர்ஜுன்சிங் ரொம்பவும் சிரமப் படுவான். போலீஸார் நிச்சயமாக அங்கே அவனை உள்ளே நுழையவிடமாட்டார்கள். நாம் போய்ப் பார்ப்போம்'' என்று கூறிக்கொண்டே உஷாவை நிமிர்ந்து நோக்கி, காரை விடுமாறு சொன்னுர்.

RBTLYB : URXV

6

கொலை நடந்த இடத்தில் மேஸன்

சங்கராபுரம் எஸ்டேட்டுக்கு பெரிமேஸன் போய்ச் சேர்ந்தார். எஸ்டேட்டின் வாயிலில் பல கார்கள் நின்றிருந்தன. அர்ஜுன்சிங் சாவகாசமாக அங்கிருந்த கைப்பிடிச் சுவர்மீது சாய்ந்துகொண்டு சிகரெட்டைப் புகைத்துக் கொண்டிருந்தார். அவர் எதிர்பார்த்ததுபோல்தான் அர்ஜுன்சிங்கை எஸ்டேட்டிற்குள் விடவில்லை. போலீஸ் அதிகாரிகள் மற்றும் போலீஸ் இலாகா சம்பந்தப்பட்டவர்கள் எல்லோரும் எஸ்டேட்டுக்குள் இருந்தார்கள். 'மற்றவர்கள் எல்லாம் எங்கே?' என்று பெரிமேஸன் கேட்டார்.

"பத்திரிகைக்காரர்களும் மற்றவர்களும் அனுமதி பெற்று உள்ளே போய் இருக்கிறார்கள். என்னை உள்ளேவிட மறுத்துவிட்டார்கள்" என்றார் அர்ஜுன்சிங்.

பெரிமேஸனும் உஷாவும் அர்ஜுன்சிங்கை அழைத்துக் கொண்டு உள்ளே நுழைய எத்தனித்தனர். வாசலில் காவலிலிருந்த போலீஸார் தடுத்துவிட்டனர். "அனுமதிச் சீட்டு இருந்தால்தான் உள்ளே அனுமதிக்கமுடியும்" என்று கண்டிப்பாக அவர்கள் கூறிவிட்டார்கள்.

"நான் வக்கீல் பெரிமேஸன்" என்றார் வக்கீல்.

"நிச்சயமாகப் 'பாஸ்' வேண்டும். போலீஸ் அதிகாரியிடமிருந்தாவது அல்லது எந்தப் பத்திரிகைக் காரியாலயத்தி

லிருந்தாவது அனுமதி வாங்கி வந்தால்தான் உள்ளே விட முடியும்" என்று கூறிவிட்டார். "அப்படிப் பத்திரிகைக் காரியாலயத்திலிருந்து பாஸ் வாங்கி வந்தாலும் தோட்டத்திற்குள் போகத்தான் அனுமதி உண்டு. பிரேதத்திடம் செல்லமுடியாது" என்று கண்டிப்பாகக் கூறிவிட்டனர். தான், வந்திருப்பதைப் பெரிய போலீஸ் அதிகாரிக்குத் தெரிவிக்குமாறு வக்கீல் கூறினார். ஒயர்லெஸ் மூலம் அதைத் தெரிவிக்கலாம் என்றும் சொன்னார் வக்கீல். அதற்கும் அவர்கள் சம்மதிக்கவில்லை.

பெரிமேஸன் அங்கிருந்து சற்று நகர்ந்துவந்து தன்னுடைய கோட்டுப் பையிலிருந்த வெள்ளி சிகரெட் பேழையை எடுத்தார். சிகரெட் ஒன்றை எடுத்துப் போலீஸாரிடம் நீட்டினார். அவர்கள் அதைப் பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்கள். வக்கீல், தான் ஒன்றும் அர்ஜுன்சிங்குக்கு ஒன்றுமாக சிகரெட்டை எடுத்துக்கொண்டு அதைப் பற்றவைத்துப் பிறகு சிகரெட்டுடன் கூடிய சிகரெட் பேழையை மூடி விளையாட்டாக ஆனால் மிகவும் நிதானத்துடன் அதை வேலியைத் தாண்டி எஸ்டேட்டுக்குள் வீசி எறிந்தார். அப்படி அவர் எறிந்ததை அங்கிருந்த ஒரு போலீஸ் அதிகாரி எதிர்த்தார். "பிறருடைய தோட்டத்தில் கண்டதையெல்லாம் எறியக்கூடாது தெரியுமா?" என்று கண்டித்தார். ஆனால், பெரிமேஸன் அவர் சொல்லிக் கொண்டிக்கும்பொழுதே தன்னிடமிருந்த சிகரெட் லைட்டரையும் வேலியைத் தாண்டி எறிந்துவிட்டார். அப்படி அவர் செய்வதைக் கண்ட போலீஸ் அதிகாரி தோட்டத்திற்குள் இருந்த பெரிய அதிகாரி நந்தகுமாரிடம் ஒயர்லெஸ் மூலம் தெரிவித்து அவரை உடனே அழைத்தார். அவர் வருவதற்குள் பெரிமேஸன் தோட்டத்திற்குள் நுழைய முற்பட்டார். அவர்கள் மீண்டும் தடுத்தனர். "சற்று முன்பு நந்தகுமார் உள்ளே இருக்கிறாரா என்று கேட்டதற்கு ஒயர்லெஸ்மூலம் அழைக்கமுடியாது என்று சொன்னீர்கள். இப்பொழுது மட்டும் எதற்காக அவரை வரவழைக்கிறீர்கள்?" என்று கோபமாக வக்கீல் கேட்டார். அதற்குள்

அதிகாரி நந்தகுமார் அங்கு வந்துவிட்டார். வாசலில் நின்று கொண்டிருந்த மற்றொரு போலீஸ் அதிகாரி, அர்ஜுன்சிங் அங்கு ஒருமணி நேரமாய் வட்டமிட்டுக்கொண்டிருப்ப தாகவும், வக்கீல் அங்கு வந்து வேலியைத் தாண்டி சில பொருள்களை எறிந்ததாகவும் தெரிவித்தார்.

பெரிமேஸன் காரணமில்லாமல் அப்படிச் செய்திருக்க மாட்டார் என்று நந்தகுமார் தெரிந்துகொண்டார். அவர் எறிந்த பொருள்களை அங்கிருந்த புதரிலிருந்து தேடி எடுக்கும் படியாக அவர் போலீஸாருக்கு உடனே கட்டளையிட்டார். இரண்டு போலீஸ்காரர்கள் அங்கிருந்த புதரைச் சோதனை செய்து சிகரெட் பெட்டி, லைட்டர் இவற்றை எடுத்ததுடன் ஒரு ரிவால்வர் இருப்பதாகச் சொல்லி அதையும் எடுத் தார்கள். நந்தகுமார் அந்த ரிவால்வரைத் திருப்பித் திருப்பிப் பார்த்து '38-ரிவால்வர் என்று தெரிந்துகொண்டு அதைச் சோதனைக்காக அனுப்பிவிட்டார். அத்துடன் வக்கீலின் சிகரெட் கேஸ், சிகரெட் லைட்டர் இரண்டையும் அனுப்பிவைத்தார்.

"என் பொருள்களை என்னிடம் கொடுத்துவிடுங்கள்" என்றார் பெரிமேஸன்.

"அது எப்படி முடியும்? துப்பாக்கியுடன் கிடைத்ததால் அதையும் ஒரு சாட்சிப் பொருளாகத்தான் நாங்கள் எடுத்துக் கொள்ளமுடியும். உங்களிடம் வேறு சிகரெட் கேஸும் லைட்டரும் இல்லாவிட்டால் தீப்பெட்டியையும் சாதாரண சிகரெட் பெட்டியையும் உபயோகிக்கலாமே" என்று குத்த லாகக் கூறினார், நந்தகுமார். பிறகு போலீஸாரிடம் "வேலி யிடம் யாரையும் அணுகாமல் சுற்றிலும் கயிற்றைக் கட்டுங்கள்" என்று உத்தரவிட்டார்.

"குதிரை கெட்டுபோன பிறகு லாயத்தைப் பூட்டுவது போல் இருக்கிறதே" என்று கூறி பெரிமேஸன் நகைத்தார்.

வக்கீலிடம் வேறு சிகெரட் கேஸும் சிகரெட் லைட்டரும் இருக்கிறதா பாருங்கள் என்று நந்தகுமார் கூறவும்,

"'துப்பாக்கியும் இருக்கிறதா?' என்று சோதனை போடச் சொல்லுங்கள்" என்று மீண்டும் குத்தலாகக் கூறினார் வக்கீல்.

"புதரில் துப்பாக்கி இருப்பது உங்களுக்கு முன்பே தெரிந் திருக்காது என்று எனக்குத் தெரியும். அந்தத் துப்பாக்கி யைச் சோதித்து அது யார் வசம் இதற்கு முன்பு இருந்தது என்பதை என்னால் கண்டுகொள்ள முடியும்" என்று நந்த குமார் கூறினார்.

வக்கீல் அலட்சியமான சிரிப்புடன், "புதருக்குள் துப் பாக்கியை வீசி எறிவது குற்றமாகாது. அத்துடன் சிகரெட் கேஸை எறிந்தவுடன் அது துப்பாக்கியாக மாறிவிடும் என்பதும் மாயாஜாலமில்லை. அதனால் எதையும் யோசித்துச் செய்யுங்கள்" என்று வக்கீல் கூறிவிட்டு தனது காரியதரிசி யையும் அர்ஜுன்சிங்கையும் அழைத்துக்கொண்டு அங் கிருந்து புறப்பட்டுவிட்டார்.

7

அர்ஜுன்சிங்கும் மேஸனும்—" நாகலிங்கம் யார் ?!"

பெரிமேஸன் அர்ஜுன்சிங்கின் வருகைக்காக காத்திருந்து பொறுமை இழந்தவராக இங்குமங்கும் அலைந்து கொண்டிருந்தார். கடைசியாக அர்ஜுன்சிங் வந்து சேர்ந்தார். அவர் வரும்பொழுதே உற்சாகமாக, " போலீஸார் ஒரு வேலையைச் செய்வதற்கு முன்பே நாம் சாமர்த்தியமாகச் செய்யவேண்டும் " என்று கூறியவாறு சில கடிதங்களை வக்கீலிடம் காட்டினார். ஆனால், வக்கீல் அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல், " இந்த வழக்கைப் பொறுத்தவரையில் போலீஸார் நம்மோடு போட்டி போட்டுக்கொண்டு சரியாகத்தான் நடந்துகொள்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் சாமர்த்தியமாகவும் நடந்துகொள்கிறார்கள் " என்றார்.

அர்ஜுன்சிங்: " அப்படியெல்லாம் இருக்கமுடியாது. இறந்தவர் பெயர் ரத்னம்தானா அல்லது வேறு பெயர்களும் இருக்கின்றனவா என்று கண்டுபிடிப்பதற்காக நான் சிலவற்றை ஆராய்ந்தேன். அதிலிருந்து ரத்னத்திற்கு ஜம்புலிங்கம் என்ற பெயரும் இருப்பது எனக்குத் தெரியவந்தது. ஜம்புலிங்கத்தின் தகப்பனார் நாகலிங்கம் ஜம்புலிங்கத்தைச் சிறுவயதிலேயே விட்டுவிட்டு எங்கோ ஓடிவிட்டார். முற்றும் விசாரித்ததிலிருந்து அந்த நாகலிங்கம் நாகமலையின்

அடிவாரத்தில் உள்ள மதகுப்பட்டியில் வசித்து வந்ததாகவும், நேற்றோ, முந்தினமோதான் அவர் இறந்துவிட்டதாகவும் அவர் பிரேதத்தை இன்னும் அடக்கம் செய்யாமல் வைத்திருப்பதாகவும் அவருக்கு யாராவது சொந்தக்காரர்கள் இருக்கிறார்களா என்று தேடிக்கொண்டிருப்பதாகவும் எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. ஜம்புலிங்கத்தின் கார் லைசென்ஸின் நகலும் அவருடைய புகைப்படங்களும் கிடைத்தன. 40 வயதான அவர் 5 அடி 3 அங்குல உயரமும் 150 பவுண்டு எடையும் உள்ள திடகாத்திரமான ஆள் என்பது தெரிந்தது. எல்லா பெட்ரோல் பங்கிலும் விசாரித்ததிலிருந்து நேற்று இரவு 9½ மணிக்கு பிரமிளாபோல் அடையாளம் கொண்ட ஒரு பெண்ணும் மற்றொரு நபரும் அங்கு வந்ததாகக் கூறினார்கள். ஆனால், காரிலிருந்து இறங்கியதும் அந்த நபர் இருளில் ஓடி மறைந்துவிட்டதாகவும் அவருக்குச் சுமார் 25 வயதிருக்கும் என்றும் கருத்த சட்டையிரும் டிப்டாப்பாக உடை அணிந்தும் அவர் இருந்தார் என்றும் பெட்ரோல் பங்கில் உள்ளவர்கள் சொன்னார்கள். இரவு 10 மணிக்கு சங்கராபுரம் எஸ்டேட்டின் வெளிக் கதவைக் காவலாளி பூட்டிவிடுவான். [illegible] விசாரித்ததிலிருந்து அந்தச் சமயம் எஸ்டேட்டுக்குள் ஒரு காரும் நிற்கவில்லை என்று தெரிந்தது. அந்தக் காவல்காரன் பெயர் முத்து. அவன் எஸ்டேட்டின் கோடியில் உள்ள குடிசையில் வசிக்கிறான். காலையில் 6 மணிக்கு எஸ்டேட் வெளிக் கதவைத் திறப்பதும் இரவு 10 மணிக்குப் பூட்டுப்போடுவதும்தான் அவனுடைய வேலை. அத்துடன் பங்களா, அதைச் சுற்றியுள்ள தோட்டம் இவற்றை அவன் கண்காணித்துக் காவல் புரிபவன். அவன் உத்திரவில்லாமல் அந்தத் தோட்டத்திற்குள்ளே யாரும் அனுமதிக்கப்படுவதில்லை. அந்தப் பங்களாவின் வேலைக்காரர்கள் காலை 8 மணிக்கு வந்து தத்தம் வேலைகளைச் செய்துவிட்டு மாலை 5 மணிக்கெல்லாம் போய்விடவேண்டுமென்பது கண்டிப்பான உத்தரவு. இரவு வேளையில் அந்தப் பங்களாவின் தோட்டத்திலே ஒருவரும் தங்குவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. சங்கரலிங்கம்

என்பவர் அந்தப் பங்களாவில் தனிமையாக வசித்து வருகிறார். ஆனால், அவர் நேற்று இல்லை. இன்று காலைதான் அவர் வந்தார். அவர் இறந்தவருடைய புகைப்படத்தைப் பார்த்து இந்தப் பிரேதத்திற்குரிய ஆளைத் தான் பார்த்ததேயில்லை என்று கூறிவிட்டார். சந்தேகமில்லாமல் தனது எஸ்டேட் பூராவையும் சோதனை போட்டுக்கொள்ளுமாறு போலீஸார் வசம் ஒப்படைத்துவிட்டார். தனக்கு அவசரமாக சிங்கப்பூர் போகவேண்டிய வேலையிருப்பதாக அவர் கூறவே போலீஸார் அவர்மீது எள்ளளவும் சந்தேகப்படவில்லை.

மேலும் அர்ஜுன்சிங் சொன்னார்:

"மரகதம் நேற்றையதினம் போலீஸாரிடம் சென்று தங்களைப்பற்றி ஒரு புகார் கொடுத்திருக்கிறாள். நீங்கள் அவளை அணுகி உடனே எங்கேயாவது ஓடிப்போய் ஒளிந்து கொள்ளுமாறும், அப்படிச் செய்யாவிட்டால் ரத்னம் கொலை வழக்கில் அவளை எப்படியாவது சம்பந்தப்படுத்திப் பத்திரிகைகளுக்குச் செய்தி கொடுத்துவிடப் போவதாகப் பயமுறுத்தியதாகவும் புகார் செய்திருக்கிறாள்." அர்ஜுன்சிங் இவ்வாறு சொன்னவுடன் பெரிமேஸன் சற்று யோசித்தார். பிறகு அவர் கேட்டார்.

"சங்கராபுரம் எஸ்டேட் மாளிகையில் உள்ளவர்களுக்கு யார் சமைத்துப் போடுகிறார்கள்?"

அர்ஜுன்சிங்: காலையில் சமையல்காரி வருவாள். அவள் சமையல் செய்துவிட்டு இரவு 8 மணிக்கு அங்கிருந்து போய்விடுவாள். இரவு அங்குத் தங்குவதில்லை. போலீஸார் இப்பொழுது பிரமிளாவைத்தான் சந்தேகிக்கிறார்கள். ரத்னமும் ஜம்புலிங்கமும் ஒரே நபர்தான் என்பதை ஜம்புலிங்கத்தின் வீட்டிலுள்ள போட்டோவைப் பார்த்து அவள் தீர்மானம் செய்துகொண்டதை அறிந்து ரத்னம், பிரமிளா இரவு காரிலே திரும்பி வரும்பொழுது அவளை மடக்கித் தானும் காரிலே ஏறிக்கொண்டிருக்கிறார். இவருக்கும் அவளுக்கும் வாக்குவாதம் முற்றியிருக்கிறது. ஆனால், துணிச்சல் மிகுந்த பிரமிளா உடனே ரத்னத்திடமிருந்த

துப்பாக்கியைச் சட்டென்று பறித்து அவனை விரட்டி சங்கராபுரம் எஸ்டேட்டுக்குள் காரை ஓட்டச் சொல்லி, அங்கே தைரியத்துடன் அவரைச் சுட்டுக் கொன்று பிரேதத்தைப் புதரில் போட்டுவிட்டு காரை அங்கேயே விட்டுவிட்டு நடந்து வந்து வெளியே நின்றுகொண்டிருந்த தன் காரில் ஏறி வந்திருக்கிறாள். இவையெல்லாம் 10 மணிக்கு முன்பாகவே எஸ்டேட்டின் கதவு மூடுவதற்கு முன்பாகவே நடந்துவிட்டிருக்கிறது. அதற்கு உறுதுணையாக இருந்தவன், எஸ்டேட்டின் காவலாளியாகத்தான் இருக்கமுடியும். அதற்குப் பிறகு அவனைப் பெட்ரோல் பங்க்கு அருகே விட்டுவிட்டு பிரமிளா சென்றிருக்கிறாள். தலைமறைவாகச் சென்றவனைக் கண்டுபிடித்தவுடன் அவனைக் கேட்டால் முழு விவரமும் கிடைக்கும். இவ்வாறு போலீஸார் திட்டமிட்டிருக்கிறார்கள். அதையும் நான் தெரிந்துகொண்டேன்.

இதைக் கேட்ட வக்கீல் மிகவும் சாவதானமாக, "'ஓஹோ! இது என்ன அநியாயம்! அவமானமாகவும் இருக்கிறதே! என்னுடைய தூரத்து உறவினர்தான் நாகலிங்கம். அவனா இப்படி அனாதையாக நாகமலை அடிவாரத்தில் இறந்துவிட்டான்? அவனுடைய கடைசி காரியங்களை நான் எப்படியும் செய்துதான் ஆகவேண்டும். அதைச் செய்யாமல் நான் உட்கார்ந்துகொண்டிருக்கிறேனே" என்று வேதனையுடன் கூறவும், அர்ஜுன்சிங்குக்குத் தூக்கிவாரிப் போட்டது.

"நாகலிங்கம் யார்? நீங்கள் யார்? இது என்ன திடீரென்று நாகலிங்கத்தை உறவு கொண்டாடுகிறீர்கள்! நீங்கள் ஏதாவது பொய்யாக அவரை உங்கள் சொந்தக்காரர் என்று சொல்லி வீண் வம்பிலே மாட்டிக்கொள்ளாதீர்கள். சொந்தக்காரர் என்று சொல்லி பிரேதத்தைக் கைப்பற்றுவது பிறகு சட்டவிரோதமாகவும் ஆகலாம் அல்லவா?" என்றார்.

வக்கீல்: பிரேதத்தை வைத்துக்கொண்டு நான் என்ன செய்யப்போகிறேன்? இறந்துபோன என் சொந்தக்காரரைப்

போய்ப் பார்த்துவிட்டு வந்தால் ஒன்றும் குடிமுழுகிப் போய் விடாது. தன் மனைவி மரகதத்திடம் வியாபார நிமித்தமாக வெளியூர் சென்று வருவதாகக் கூறிய ரத்னம் ஜம்புலிங்கமாக நடித்து வந்திருக்கிறார். இரவு இறந்திருக்கிறார். அன்றே அவருடைய தகப்பனார் இப்படி அனாதையாக இறந்து போவானேன்? இதில் ஏதோ மர்மம் இருக்கிறது. நான் உடனே நாகமலைக்குப் போகவேண்டும். என்னை இன்று இரவு போலீஸார் சந்தித்து குறுக்குக் கேள்விகளைக் கேட்பதற்கு முன்பாக நான் போய்விட்டு வந்துவிடவேண்டும். நீயும் வருகிறாயா?" என்று கேட்டார்.

அவருடன் வருவதற்கு அர்ஜுன்சிங் சம்மதிக்கவில்லை. உடனே உஷாவை நோக்கி, "உன்னுடைய லிப்ஸ்டிக்கையும் உடனே எடுத்துக்கொண்டு புறப்படு" என்று வக்கீல் கட்டளையிட்டார்.

அர்ஜுன்சிங்: அந்தக் கொலையுண்ட ஜம்புலிங்கத்தின் தகப்பனார் நாகலிங்கம் என்பதையும் அவர் இறந்துபோனதையும் கண்டுபிடிப்பதில் நமக்கு என்ன லாபம்?

வக்கீல்: அங்குதான் மர்மம் இருக்கிறது. ஒரே குடும்பத்தில் தகப்பனாரும் மகனும் 24 மணி நேரத்திற்குள் செத்துக் கிடக்கிறார்கள் என்றால் அதில் நிச்சயமாக சந்தேகப்படக்கூடிய மர்மம் அடங்கியிருக்கிறது என்றுதான் அர்த்தம்.

அதற்குள் உஷா லிப்ஸ்டிக்குடன் வரவும் அவளுடன் காரில் நாகமலை நோக்கிப் புறப்பட்டுவிட்டார் பெரிமேஸன்.

8

மதகுப்பட்டியில் கிடைத்த மர்மத் தகவல்கள்

மதகுப்பட்டி என்ற ஊர் நாகமலையின் அடிவாரத்தில் உள்ள சிறிய நகரம். மலை அடிவாரத்தில் இருந்ததால் அந்த ஊருக்குச் செல்லும் பாதை மேடான இடங்களில் ஏறி இறங்கிச் செல்லவேண்டியிருந்தது. [illegible] வளைந்து செல்லும் ரஸ்தா. கார் போகும்பொழுது பல இடங்களில் சங்கடமான திருப்பங்களும் இருந்தன.

பெரிமேஸனும் உஷாவும் காரில் போகும்பொழுது நன்றாக இருட்டிவிட்டது. சாலையின் இருபுறமும் மரங்கள் ஓங்கி வளர்ந்திருப்பதும் தொலைவில் அஸ்தமன சூரியனின் செங்கோடுகளும் அழகிய காட்சியாகத் திகழ்ந்தன. ஊருக்குள்ளே நுழையும் வழியில் சிறிய மாதாகோயில் ஒன்று இருந்தது. அதற்கு அருகே கல்லறையும் இருந்தது. அந்த ஊரில் கிறிஸ்தவர்கள் அதிகம்பேர் இருக்கவேண்டும் என்பது தெரிந்தது. வக்கீல் நேராக அந்த ஊரின் கிராம முன்சீப்பைப் போய்ச் சந்தித்தார். அவரிடம் நாகலிங்கத்தின் உருவ அடையாளங்களை வர்ணித்து, '60 வயதைத் தாண்டிய கிழவர், நரைத்த முடி, கண்ணுக்கு ஒரு கண்ணாடி' என அடையாளத்தைச் சொல்லி அவர் தன்னுடைய உறவினர்

என்றும், அவர் இறந்துவிட்டதாகச் செய்தி கிடைத்ததால் உடனே புறப்பட்டு வந்ததாகவும், அவருடைய நெருங்கிய சொந்தக்காரர்கள் வேறு யாரும் வராவிட்டால் பிரேதத்தை அடக்கம் செய்வதற்கான செலவிற்குத் தானே பணம் தருவ தாகவும் சொன்னார். பிறகு அவர் அருகே இருந்த தன் செயலாளரை அறிமுகப்படுத்தினார். கிராம முன்சீப் வக்கீலை ஏற இறங்கப் பார்த்துவிட்டு பிரேதம் பதப்படுத்தி வைக்கப்பட்டிருந்த இடத்திற்கு அவரை அழைத்துச் சென்றார். வக்கீல் பிரேதத்தைப் பார்த்துத் தன்னால் அதை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை என்றும், என்ரு லும் ஏழைமை நிலைமையில் இறந்துபோன யாராய் இருந் தாலும் அன்னாருடைய அந்திமக் கிரியைகளுக்குப் பணம் தர வேண்டியது தன்னுடைய கடமை என்று கூறி நூறு ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து கிராம முன்சீப்பிடம் நீட்டி, "இன்னும் என்ன செலவாகும் என்று சொல்லுங்கள்?" என்று கேட்டார்.

கிராம முன்சீப்புக்கு மிகவும் சந்தோஷமாகிவிட்டது. இந்த ஊரில் இப்படி முழு நோட்டை அவர் பார்த்து ரொம்ப நாளாகிவிட்டது. அவர் தன் பொக்கைப் பல் தெரிய மலர்ந்த முகத்துடன் மகிழ்ச்சியுடன் சொன்னார்: "இறந்துபோன கிழவர் இந்த உலகத்தின்மீது பற்றே இல்லாமல் நீண்ட நாட்களாக வசித்து வந்தார். அவரிடம் வேட்டையாடும் துப்பாக்கி லைசென்ஸ் உண்டு. இப்படிக் காட்டு மலைப்பக்கம் சென்று வேட்டையாடி ஜீவனம் நடத்தி வந்தார் தனக்குத் தெரிந்தவரையில் அவருக்கு வேறு வேலை இல்லை என்றும், ஆனால், எப்பொழுதாவது அவருக்கு வெளி ஊரிலிருந்து பணம் வந்துகொண்டிருந்தது என்றும் சொன்னார். பிறகு சட்டென்று வக்கீல் கிராம முன்சீப்பைப் பார்த்து, "நான் முக்கியமானதை மறந்துவிட்டேன். என் னுடைய காரியதரிசி—இப்பொழுது அறிமுகப்படுத்தினேனே அவள்—அதோ அந்த மரத்தடியில் இருக்கும் காரிலேயே உட்கார்ந்திருக்கிறாள். அவளிடம் சென்று என் கைப்பையி லிருந்து மேலும் நூறு ரூபாய் பணம் கேட்டு வாங்கிக்

கொண்டு கிரியைகள் செய்யும்பொழுது உங்கள் கைச்செல வுக்கு அதை வைத்துக்கொள்ளுங்களேன்" என்று கூறினார். கிராம முன்சீப்பும் காரை நோக்கி நடந்தார். அவரை அனுப்பியவுடன் தம் கையிலிருந்த லிப்ஸ்டிக்கை எடுத்துப் பிரேதத்தின் இரு கை கட்டை விரல்களிலும் தடவி மிகவும் ஜாக்கிரதையாக ஒரு காகிதத்தில் அவற்றின் ரேகையைப் பதிவு எடுத்துக்கொண்டார். பிறகு பிரேதத்தின் கை விரல் களில் தடவப்பட்ட லிப்ஸ்டிக்கின் நிறத்தை அழுத்தித் துடைத்துவிட்டார்.

உஷாதேவியும் வேண்டுமென்றே அவகாசம் கொடுக்கும் வகையில் தன் பையை மெதுவாகத் திறந்து ரூபாயை எடுத்து இரண்டு மூன்று முறை பணத்தை எண்ணியவாறு கிராம முன்சீப்பிடம் பேச்சுக் கொடுத்துத் தாமதப்படுத்திக்கொண் டிருந்தாள். கிராம முன்சீப் பணத்தை வாங்கிக்கொண்டு வக்கீலிடம் வந்து, "இப்படி யார் என்று தெரியாத ஓர் அனாதைக்கு இவ்வளவுதூரம் நீங்கள் செலவு செய்வது பெரிய மனசுடையவர்களால்தான் முடியும். இப்படிப்பட்ட தர்மவான்கள் உலகத்தில் இருப்பதால்தான் உலகத்தில் சத்தியம் அழியாமல் இருக்கிறது" என்று அவர் மிகவும் புகழ்ந்தார். உஷாவும் வக்கீலும் கிராம முன்சீப்பையும் அழைத்துக்கொண்டு செல்லும் வழியிலேயே ஒதுக்குப்புற மாக இருந்த நாகலிங்கம் வசித்துவந்த வீட்டை அடைந் தார்கள். நாகலிங்கம் வசித்த வீட்டைப் பார்த்தால்தான் பல விஷயங்களைத் தெரிந்துகொள்ளலாம் என்பது வக்கீலின் எண்ணம். அந்த வீட்டிற்குள் நுழைவதற்கு முன்பாக அவர் கிராம முன்சீப்பிடம் பேச்சுக் கொடுத்தார். அந்த சம்பா ஷணையிலிருந்து சில முக்கியமான செய்திகளைத் தெரிந்து கொண்டார் வக்கீல். நாகலிங்கத்திடம், வேட்டையாடிய மான், முயல், பன்றி போன்றவைகளை எடுத்துச் செல்வதற் காகப் பெருமாள் என்பவன் அடிக்கடி வருவான். அவன்தான் நாகலிங்கம் இறந்துவிட்ட செய்தியைக் கிராம முன்சீப்பிடம் வந்து தெரிவித்தவன். "நான் உள்ளூரிலுள்ள டாக்டரை அழைத்துக்கொண்டு இங்கு வந்து பார்த்தேன். டாக்டரும்

நாகலிங்கம் இயற்கையாகத்தான் இறந்திருக்கவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டார். பஞ்சாயத்து கூடி இறந்த காரணத்தைப்பற்றிச் சந்தேகப்படாமல் பிரேதத்தைப் புதைப்பதற்காக இங்குக் கொண்டுவந்துவிட்டோம். நாகலிங்கத்திற்கு எனக்குத் தெரிந்தவரையில் அதிக நண்பர்கள் கிடையாது. எப்பொழுதாவது அவருடன் இரண்டு அல்லது மூன்று பேர் வேட்டையாடச் செல்வார்கள். சென்ற சில வருஷங்களாக எப்பொழுதாவது ஒருமுறை பட்டணத்திலிருந்து காரில் நல்ல தோற்றம் உடைய ஒருவர் வந்து போவார். அவர் இங்கே இரவு தங்கமாட்டார். அவர் பெட்ரோல் பங்கில் பணம் கொடுத்துப் பெட்ரோல் போட்டுக்கொண்டு ரசீதுகூட வேண்டாம் என்று சொல்லிச் சென்று விடுவார். அதனால் அந்தக் கார் நம்பர்கூட அந்தப் பெட்ரோல் பங்கிற்குத் தெரியாது. நாகலிங்கம் இறந்துவிட்டவுடன் அவருக்கு நெருங்கிய உறவினர்கள் யாராவது இருக்கிறார்களா என்று விசாரித்துப் பார்த்தும் கிடைக்கவில்லை. பட்டணத்திலிருந்து வரும் அவருக்குச் சொல்லி அனுப்பலாம் என்றால் அவர் விலாஸம் தெரியவில்லை." இவற்றையெல்லாம் கிராம முன்சீப் சொல்லும்பொழுது வக்கீல் மிகவும் ஊன்றிக் கவனமாகக் கேட்டுக்கொண்டார். பிறகு நாகலிங்கத்தினுடைய சிறு வீட்டிற்குள் அனைவரும் நுழைந்தார்கள். உள்ளுக்குள்ளே இருட்டாகத்தான் இருந்தது. அங்கிருந்த அரிக்கேன் விளக்கை ஏற்றிச் சற்று வெளிச்சம் வரும்படியாகச் செய்தார்கள். அங்கே மேஜைமீது பழைய பத்திரிகைகளும், புத்தகங்களும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவை அனைத்தும் துப்பறியும் கதைப் புத்தகங்களாகவும், கொலை, கொள்ளை சம்பந்தப்பட்ட செய்திகள் வெளிவந்த தினப் பத்திரிகைகளாகவும் இருந்தன. அதில் ஒரு பத்திரிகை இரண்டரை ஆண்டுகளுக்கு முந்திய தேதியிட்ட செய்திப் பத்திரிகையாக இருந்தது. அதைப் பிரித்துப் பார்த்த வக்கீல் சட்டென்று தம்முடைய கைப்பையிலிருந்த ஜம்புலிங்கத்தின் போட்டோவை எடுத்து கிராம முன்சீப்பிடம் காட்டி, "இவர்தான் அடிக்கடி பட்டணத்திலிருந்து காரில்

வந்து போகிறவரா?" என்று கேட்டார். கிராம முன்சீப்பால் சட்டென்று அடையாளம் சொல்ல முடியவில்லை. ஆனால் கிராம முன்சீப் சொன்னார்: "நாகலிங்கத்தின் நண்பன் பெருமாளுக்குப் பட்டணத்திலிருந்து வருபவரை அடையாளம் தெரியும். அவனிடம் சென்றால் அவன் அடையாளம் கண்டு கொள்வான்" என்றார். மூவரும் காரில் ஏறிக்கொண்டு பெருமாள் தங்கியிருக்கும் வீட்டைநோக்கிச் சென்றார்கள். அது பெருமாள் படுத்துத் தூங்கப்போகும் நேரம். தூக்கக் கலக்கம் அரைகுறையாக அவன் கண்களில் தெரிந்தது. கிராம முன்சீப்பைப் பார்த்தவுடன் அவன் மிகவும் மரியாதையுடன் அவர்களையெல்லாம் வரவேற்றான். பெருமாளிடம் ஜம்புலிங்கத்தின் போட்டோவை வக்கீல் காட்டியவுடன் அவன்தான் காரில் பட்டணத்திலிருந்து வந்து போகும் நபர் என்பதை ஊர்ஜிதப்படுத்தினான். பிறகு சாலையிலிருந்த பெட்ரோல் பங்குக்குச் சென்று பெட்ரோல் பங்க் சிப்பந்திகளிடம் அந்தப் போட்டோவைக் காட்டியதும் அவர்தான் அவ்வப்பொழுது வந்து பெட்ரோல் போட்டுக்கொள்ளும் நபர் என்பதையும் அவர்கள் ஊர்ஜிதப்படுத்தினர். பிறகு வக்கீல் கிராம முன்சீப்பை நோக்கி, "இந்தப் போட்டோவில் உள்ளவர்தான் நாகலிங்கத்தினுடைய மகன் பட்டணத்திலிருந்து வந்து போகிறார் என்று சொன்னீர்களே; தன் தகப்பனாரைப் பார்க்கத்தான் பட்டணத்திலிருந்து அவர் வருவது வழக்கம்" என்று கூறியவுடன் கிராம முன்சீப் ஆச்சரியத்தில் மூழ்கினார்.

இரவு நெடு நேரமாகிவிட்டபடியால் கிராம முன்சீப்பிடம் விடைபெற்றுக்கொண்டு கிளம்பினர். உஷாதான் காரை ஓட்டிக்கொண்டு வந்தாள்.

வரும் வழியில் உஷா வக்கீலை மிகவும் கோபித்துக்கொண்டாள். இந்தச் சிறு பட்டிக்காட்டில் வந்து 200 ரூபாய் வரையில் வீணாக வக்கீல் செலவு செய்ததை அவள் கண்டித்து இப்படியெல்லாம் ஊதாரித்தனமாகச் செலவு செய்வது நியாயமில்லை என்று கூறினார். வக்கீல் மெல்லச் சிரித்துக்

கொண்டு, " உன்னை லிப்ஸ்டிக்கு எடுத்துவரச் சொன்னேனே! நினைவு இருக்கிறதா?" என்று கேட்டார்.

"ஆமாம்! அதை எதற்காக கொண்டுவரச் சொன்னீர்கள்?" என்று உஷா கேட்டவுடன், இறந்த பிணத்தினுடைய கை ரேகையைப் பதிவு செய்வதற்காகத்தான் அதைக் கொண்டுவந்ததாகக் கூறி, கை ரேகையைத் தான் பதிவு செய்த விதத்தையும் சொன்னார். பிறகு நாகலிங்கம் வசித்த வீட்டிற்குச் சென்று இரண்டரை வருஷத்திற்கு முந்திய 'தினப் புளுகன்' என்ற பேப்பரைத் தான் ரகசியமாக எடுத்து மறைத்துக்கொண்டதையும் உஷாவிடம் சொல்லி ஆச்சரியத்தில் மூழ்கடித்தார். "எதற்காக அந்தப் பத்திரிகையை நான் எடுத்துக்கொண்டு வந்திருக்கிறேன் தெரியுமா? அந்தப் பத்திரிகையில் சங்கரலிங்கம் என்பவர் பழைய வீடுகளை வாங்கி அதை நன்றாக ரிப்பேர் செய்து புது மெருகுடன் நல்ல லாபத்திற்கு விற்பவர் என்றும், அவர் லட்சக்கணக்கில் பணம் சேர்த்துவிட்ட தகவலும் இதோ இருக்கிறது பார்த்தாயா? அவர் போட்டோவைப் போட்டு இந்தப் பத்திரிகையில் அவரைப்பற்றிய சிறு குறிப்பு எழுதியிருக்கிறார்கள்" என்று சொன்னார்.

உஷா அந்தப் பத்திரிகையை வாங்கிப் பார்த்து மீண்டும் வக்கீலிடமே கொடுத்து, "இது என்ன பெரிய செய்தி? இதை எதற்காக நீங்கள் எடுத்து மறைத்துவைத்துக்கொண்டிருக்கிறீர்கள்? நாகலிங்கம் வீட்டில் ஏதாவது பழைய பேப்பர் பொட்டலம் கட்டி வந்திருக்கலாம். அதைப் பெறுவதற்காக இருநூறு ரூபாய் செலவு செய்தீர்கள் இல்லையா?" என்று கிண்டலாகக் கேட்டாள். வக்கீல் மீண்டும் சிரித்துக் கொண்டே, "எல்லாம் போகப் போகத் தெரியும். இந்த ஒரு லிப்ஸ்டிக் செய்த காரியமும் அந்த பழைய பேப்பர் செய்த புகார் காரியமும் மிகவும் முக்கியமானது என்று பிறகு உனக்கே தெரியும். அத்துடன் நான் நேற்று புதரில் வீசி எறிந்த வெள்ளி சிகரெட் கேஸும் லைட்டரும் என்னிடமே திரும்பிவந்துவிடும்" என்று கூறினார்.

9

போலீஸ் அதிகாரியின் கெடுபிடி—மேஸனை அர்ஜுன்சிங் சந்திக்கிறார்

மறுநாள் காலை ஆபீஸிற்கு வந்தவுடன் துப்பறியும் அர்ஜுன்சிங் தனக்காகக் காத்திருப்பதை வக்கீல் கண்டார்.

அர்ஜுன்சிங்: நான் நேற்றெல்லாம் மிகவும் சிரமப்பட்டுப் பல செய்திகளைக் கண்டுபிடித்திருக்கிறேன். ஆமாம், நீங்கள் நேற்று நாகமலை அடிவாரத்திலுள்ள மதகுப்பட்டிக்குச் சென்று, என்ன பெரிய கலவரமே செய்துவிட்டு வந்துவிட்டீர்கள்? நீங்கள் அங்குப் போய்வந்த செய்தியைக் கேள்விப்பட்ட நந்தகுமார் தமது உதவியாளர்களுடன் அங்கே விரைந்திருக்கிறார். நீங்கள் அங்கிருந்து என்ன துப்பு கண்டுபிடித்தீர்கள் என்பதை அறிந்துகொள்வது அவருடைய நோக்கமாம்.

வக்கீல்: அலையட்டும், அலையட்டும்! என்னைத் தொடர்ந்து அலைந்து அலைந்து அவஸ்தைப்படட்டும். அது சரி, நான் இரவு கொடுத்த கை ரேகையை என்ன செய்தாய்?

அர்ஜுன்சிங்: கைரேகைப் பதிவு ஸ்தாபனத்திற்குக் கொடுத்திருக்கிறேன். அவர்களுடைய பதிலை எதிர்பார்த்துக்

கொண்டிருக்கிறேன். புதரில் கண்டெடுக்கப்பட்ட ரிவால்வர் சங்கரலிங்கத்தினுடையது என்பது தெரிந்துவிட்டது. அதை அவர் இரண்டு வாரங்களுக்கு முன்பு வீட்டில் வேலை செய்துவரும் தாமு என்பவரிடம் கொடுத்ததாகவும், தாமு அதை ஒரு வாரத்திற்கு முன்பு தனது பையிலிருந்து நழுவ விட்டு எங்கோ தொலைத்துவிட்டதாகவும் சங்கரலிங்கத்திடம் சொல்வதற்குப் பயந்து சொல்லவில்லை என்றும், ஜம்புலிங்கம் கொலை செய்யப்பட்ட அன்று தாமு அந்த ஊரில் இல்லை என்றும் நான் தெரிந்துகொண்டேன். ஆனால் அந்த ரிவால்வர்தான் ஜம்புலிங்கத்தைக் கொலை செய்வதற்கு உபயோகப்படுத்தப்பட்டதா இல்லையா என்பதை போலீஸார் வெகு ரகசியமாக வைத்திருக்கிறார்கள். ஆனால் நான் மிகவும் சாமர்த்தியமாக சங்கரலிங்கத்திற்கு ஒரே ஒரு ரிவால்வருக்குத்தான் லைசென்ஸ் உண்டு என்பதைத் தெரிந்து கொண்டுவிட்டேன். அவர் அதைத் தாமுவிடம் துடைத்துச் சுத்தப்படுத்துவதற்காகக் கொடுத்ததாகவும் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

வக்கீல்: அப்படியா! இப்பொழுதே நான் அவரை டிபன்ஸ் சாட்சியாக ஆஜராக வேண்டுமென்ற கோர்ட் சம்மனை அவருக்குப் பிறப்பிக்கச் செய்து உடனே அதை அவரிடம் 'ஸர்வ்' (கொடுத்துவிட) செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.

அர்ஜுன்சிங்: ஐயோ! அது முடியாத காரியம். சங்கரலிங்கத்திடம் நாம் விளையாடக்கூடாது. அவர் லட்சாதிபதி. அவருக்கு இந்தத் தேசம் முழுவதும் பறந்து சென்று கவனிக்கவேண்டிய வேலைகள் ஏராளமாக இருக்கின்றன. அவர் சிங்கப்பூருக்கு அவசரமாகக் கிளம்பிக் கொண்டிருக்கிறார். அவரை நாம் இப்படி சம்மன் 'ஸர்வ்' செய்துத் தடுத்துவிட்டால் பிறகு அவர் நம்மீது மானநஷ்ட வழக்கு தொடர்ந்துவிடுவார்.

வக்கீல்: அதைப் பார்த்துக்கொள்ளலாம். உடனே அவரைப் பின்பற்றிச் சென்று செய்திகளை அறிவதற்கு ஒரு

நபரைப் போடு. அவரைப் பின்தொடர்வது அவருக்குத் தெரியக்கூடாது. தாமுவுக்கும் சம்மன் 'ஸர்வ்' செய்துவிட வேண்டும். இப்பொழுது போலீஸார் வழக்கு விஷயமாக என்னதான் முடிவு செய்திருக்கிறார்கள்?

அர்ஜுன்சிங்: கடவுளுக்குத்தான் தெரியும். ஜம்புலிங்கமும் பிரமிளாவும் ஒருவரையொருவர் சந்தித்துத் தகராறு செய்துகொண்டு, ஏதோ காரணத்தினால் சங்கராபுரம் எஸ்டேட்டுக்குள் வந்து தகராறு முற்றினதால் பிரமிளா ஜம்புலிங்கத்தைச் சுட்டுக் கொன்றுவிட்டதாக அவர்கள் முடிவு செய்திருக்கிறார்களாம். பிரமிளாவுக்கு உதவியாக ஒரு நபர் இருந்திருக்கவேண்டும் என்றும் இன்னும் நினைக்கிறார்கள். பிரமிளாவை எவ்வளவோ வற்புறுத்தி அவர்கள் செய்தி அறிய முயல்கிறார்களாம். அவள் ஒன்றுமே பேசாததுதான் அவளை இதுவரையில் காப்பாற்றி வருகிறது. அவள் கூறுவதுபோல் வழியிலே சந்தித்த போலி டிடக்டிவ் ரிவால்வரை அவளிடம் கொடுத்திருக்கிறான் என்பதை நான் நம்புகிறேன். ஆனால் ஜூரர்கள் நம்பவேண்டுமே?

இப்படி அர்ஜுன்சிங் வக்கீலிடம் பேசிக்கொண்டிருக்கும்பொழுது டெலிபோன் மணி அடித்தது. நேற்று கொடுத்த நாகலிங்கம் என்பவனுடைய கைரேகையைக் கொண்டு பார்த்ததில் அவன் பயங்கரமான ஆயுதங்களுடன் கொள்ளை அடித்ததற்காக ஏழு வருடம் சிறை தண்டனை விதிக்கப்பட்டவன். இருபது வருடங்களுக்கு முன்பு இது நடந்தது. பிறகு அவன் சிறையிலிருந்து தப்பிவிட்டான். அவனுடன்கூட காளிமுத்து என்ற நபரும் தப்பிவிட்டான். பிறகு இருவரையும் தேடித் தேடி அலைந்து கண்டுபிடிக்க முடியவில்லை. இதுதான் கைரேகை தகவல் இலாகாவிலிருந்து வந்த செய்தி. அந்த இருவரையும் போலீஸார் கடந்த பல ஆண்டுகளாகத் தேடிக்கொண்டிருக்கிறார்களாம்.

வக்கீல்: ஆஹா! போய் நாகலிங்கத்தின் கல்லறைக்கு போலீஸ்காரர்களை மாலை போடச் சொல்லு. அர்ஜுன்சிங், நீ உடனே சங்கரலிங்கத்தைக் கட்டாயம் கண்காணிக்க வேண்டும்.

உடனே அர்ஜுன்சிங் ஏதோ கேட்டார். "ஆமாம், நான் சங்கரலிங்கத்தை அவர் லட்சாதிபதியானாலும்கூட சந்தேகிக்கக்கூடிய நிலையில்தான் இருக்கிறேன். அவர்தான் காளிமுத்துவாய் ஏன் இருக்கக்கூடாது? சிறையிலிருந்து தப்பியபிறகு திருந்தியிருக்கலாம் அல்லவா? புதிதாக நல் வாழ்வை நாடிப் பிறர் தன்னைச் சந்தேகிக்கவே முடியாதபடி வாழ்ந்திருக்கலாம் அல்லவா? ஒரு முறை போலீஸ் ரிக்கார்டில் கைரேகை பதிவாகிவிட்டால் பிறகு அந்த நபரை இவ்வாறு சிறு சந்தேகம் ஏற்பட்டுவிட்டால்கூட போலீஸார் கைது செய்துவிடலாம். சங்கரலிங்கம் அத்தகைய பெரும் அந்தஸ்து அடையாமல் இருந்து ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் அவன் கைரேகை போலீஸாருக்குக் கிடைத்து ஒத்திட்டுப் பார்க்கக்கூடிய நிலைமையில் அவன் இருந்திருந்தால் நிச்சயம் கைது செய்திருப்பார்கள். சிறையிலிருந்துத் தப்பிய பிறகு நாகலிங்கம் எங்கெல்லாமோ சுத்திவிட்டு நாகமலைக்கு வந்து சேர்ந்திருக்கிறான். அவன் சங்கரலிங்கம் என்னும் காளிமுத்துவைச் சந்தேகிக்கவேயில்லை. ஒரு சமயம் 'தினப்புளுகன்' பத்திரிகையை அவன் எதேச்சையாகப் பார்த்திருக்கிறான். அதிலே சங்கரலிங்கத்தைப்பற்றி செய்தி வந்தவுடன் அந்தப் போட்டோவை அவன் அடையாளம் கண்டுகொண்டு காளிமுத்துதான் என்பதை அறிந்து சங்கரலிங்கத்துடன் தொடர்புகொண்டு இருக்கிறான். அவனுக்கு வேண்டியது என்ன? சுகமான வாழ்வு. வயிற்றுக்குச் சாப்பாடு. சங்கரலிங்கம் தன்னுடைய பூர்வகதை வெளியே தெரியாமல் இருப்பதற்காக நாகலிங்கத்தை தாஜா செய்திருக்கிறான். அவ்வப்பொழுது வேண்டிய பணத்தைக் கொடுப்பதாகவும் அவன் உறுதி செய்து ஓர் ஒப்பந்தமும் செய்துகொண்டிருக்கிறான். பிறகு சிறிது நாள் கழித்து ஜம்புலிங்கம் தன் தந்தை நாகலிங்கத்தை அடையாளம் கண்டுகொண்டிருக்கிறான். ஆனால் தன் தகப்பனாரைப் பற்றி அவனுக்கு உயர்ந்த எண்ணம் ஏற்படவில்லை. ஆனால் தன் தகப்பனார் மிகவும் சௌகரியமாக சங்கரலிங்கத்தின் உதவியுடன் வாழ்கிறார் என்பதை மட்டும்

கண்டுகொண்டிருக்கிறான். தனக்கும் அதன்மூலம் சௌகரியத்தை உண்டுபண்ணிக்கொள்ள முடிவு செய்து இரட்டை வேடம் போட ஆரம்பித்து இருக்கிறான். ரத்னமாக அவன் உடனே உருவெடுத்தான். இரண்டு மனைவிகளையும் மணந்துகொள்கிறான். மிகவும் வசதியாக ஜீவனம் நடத்திக்கொண்டு வந்திருக்கிறான். இருபத்திநான்கு மணி நேரத்திற்குள் ஜம்புலிங்கமும் அவனுடைய தகப்பனார் நாகலிங்கமும் இறந்துவிட்டார்கள். அதனால்தான் சந்தேகம் ஏற்படுகிறது. சங்கரலிங்கத்தின் கைரேகையைப் போலீஸார் நிச்சயமாக பிரதி எடுப்பார்கள். ஏனெனில் அவருடைய தோட்டத்தில்தானே ஜம்புலிங்கம் இறந்திருக்கிறான். தம்முடைய கைரேகையை எடுத்தால் பழைய குட்டு வெளிப்பட்டுவிடுமே என்ற பயத்தால் சங்கரலிங்கம் உடனடியாக சிங்கப்பூர் செல்வதற்குத் திட்டமிட்டிருக்கிறார். அதனால்தான் போலீஸாரால் முடியாத ஒரு காரியத்தை, அதாவது சங்கரலிங்கத்தின் கை ரேகையை எடுக்கும் ஒரு காரியத்தை நாம் செய்தாகவேண்டும். அவர் கைரேகையைச் சம்மனில் வாங்கவேண்டும்" என்றார் மேஸன்.

அர்ஜுன்சிங்: நாம் சங்கரலிங்கத்தின் கை ரேகையை எப்படிச் சம்மனில் பதிவு செய்யமுடியும்? அது இயலாத காரியமாயிற்றே! கையெழுத்துப் போடக்கூடியவரிடம் ரேகை பெறமுடியுமா?

வக்கீல்: "அர்ஜுன்சிங், நீ உடனே மிகவும் பளபளப்பான பாலிஷ் செய்யப்பட்ட இரண்டு வெள்ளி சிகரெட் கேஸையும் லெட்டரையும் வாங்கி ஒருவருடைய கையும் அதில் படாமல் என் மேஜைமீது ஒன்றும், ரிஸப்ஷன் அறையில் ஒன்றும் வைத்துவிடு. சங்கரலிங்கத்தைச் சந்தித்து நீ சம்மன் 'ஸர்வ்' செய்ததும் சங்கரலிங்கம் நிச்சயமாக என்னைத் தேடிக்கொண்டு இங்கு வருவார். அவர் வரும் ஆத்திரத்தில் முதலில் வரவேற்பு அறையில் சற்று நேரம் உட்கார்ந்தவுடன் எதிரேயுள்ள பளபளப்பான சிகரெட் கேஸ்மீது தம்முடைய ஆத்திரத்தைக் காண்பிக்கத் தவறமாட்டார்.

அதைத் தொடுவதும் கீழே வைப்பதுமாக இருப்பார்'' என்று கூறி உஷாவை நோக்கி, ''அத்துடன் கை ரேகை நன்ருகப் படியக்கூடிய பொருள்களே வாங்கி மான் தோல் கொண்டு பளபளப்பாகத் தேய்த்து மேஜைமீது வைத்துவிடு'' என்று உத்தரவிட்டார்.

உஷாவும் ''இது என்ன வேடிக்கையாக இருக்கிறது. இது எப்படி முடியப்போகிறதோ?'' என்று முணு முணுத்தாள்.

10

சங்கரலிங்கத்தின் திடீர் விஜயம்

பெரிமேஸன் எதிர்பார்த்தபடி சங்கரலிங்கம் பெரி மேஸனுடைய காரியாலயத்திற்கு மாலே 3-25-க்கு வந்து விட்டார். அவர் வந்திருப்பதை வரவேற்பு அறையிலிருக் கும் 'ரிஸப்ஷனிஸ்ட்' டெலிபோனில் சொன்னுள். 'பறவை கூண்டில் சிக்கிவிட்டது' என்று சிரித்துக்கொண்டே பெரி மேஸன் உஷாவிடம் கூறிவிட்டு, ''நான் அவசர வேலேயாக இருப்பதாகக் கூறி அவரைச் சற்றுத் தாமதப்படுத்து'' என்று தெரிவித்தார். மீண்டும் உஷாவைக் கூப்பிட்டு, ''அவரை சிகரெட் கேஸ் இருக்கும் மேஜைக்கு அருகே கூட்கார வைத்துவிடு. அவர் எப்படியும் சிகரெட் கேஸைத் தொடு வார். அப்படி அவர் தொட்டவுடன் எனக்கு இரண்டு முறை மணி அடிப்பதன்மூலம் அறிவித்துவிடு'' என்ருர்.

உஷா வரவேற்பு அறைக்குப் போய்விட்டு வந்து, ''அவர் மிகவும் பைத்தியம் பிடித்தவர் மாதிரி, உட்காராமல் அங்குமிங்கும் உலவிக்கொண்டிருக்கிருர். அவருக்கு இருக்கும் கோபத்திலும் ஆத்திரத்திலும் யாரையும் கேட்காமலேயே தாங்கள் இருக்கும் அறைக்கதவைத் தள்ளிக்கொண்டு வந்து விடுவாரோ என்று நினைக்கிறேன். ஆனல், அவர் சட்டென்று நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு பதட்டப்பட்டவர்போல் தோற்றம் அளிக்கிருர்'' என்ருள்.

வக்கீல்: அப்படியானால் அவர் நிச்சயம் சிகரெட் கேஸைத் தொடுவார்.

அவர் சொல்லி வாய் மூடும் முன்பாக 'காலிங் பெல்' இரண்டு முறை அடித்தது. அவர் நினைத்தது நடந்துவிட்டது என்பதை அறிவித்தது அந்த மணி. வக்கீல் உஷாவிடம், "சரி, அவரை உள்ளே வரச்சொல். அவர் இங்கு வந்தவுடன் வரவேற்பு அறை மேஜைமீது உள்ள பொருள்களில் அவர் எதெதைத் தொட்டிருக்கிறாரோ அவற்றை உன் கைப்படாமல் ஓர் அட்டையைக் கொண்டு எடுத்து அர்ஜுன்சிங்கிடம் அனுப்பி சோதிக்கச் சொல்!" என்று உத்திரவிட்டார்.

சங்கரலிங்கம் மிகவும் கோபாவேசத்தோடு வக்கீல் அறைக்குள்ளே நுழைந்து, "நான்தான் சங்கரலிங்கம்; இந்த கோர்ட் ஸம்மனை எனக்கு 'ஸர்வ்' செய்தது எந்த நோக்கத்தின் பேரில்" என்று தம் பையிலிருந்த காகிதமொன்றை எடுத்து மேஜைமீது வீசியெறிந்தார்.

"என்னதான் நினைத்திருக்கிறீர்கள்?" என்று உறுமினார்.

வக்கீல் மெல்ல புன்சிரிப்புடன், "நான்தான் பெரி மேஸன். நீங்கள் என்னதான் நினைத்துக்கொண்டு என் காரியாலயத்திற்கு வந்து இப்படிக் கத்தி ஆர்ப்பாட்டம் செய்கிறீர்கள்?" என்று கேட்டார்.

சங்கரலிங்கம்: எனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது.

வக்கீல்: பைத்தியத்துடன் பேசுவது எனக்கு வழக்கமில்லை. பைத்தியமாய் இருந்தால் வெளியே சென்றுவிடலாம். பேசுவதாய் இருந்தால் இப்படி உட்காருங்கள், பேசலாம்.

சங்கரலிங்கம்: நான் சொல்லவேண்டியதை இப்படி நின்றுகொண்டே சொல்லிவிடுகிறேன்.

வக்கீல்: அப்படியானால் நானும் எழுந்து நின்றுகொண்டே பேசுகிறேன். என் கட்சிக்காரர் தரப்பில் சாட்சி சொல்வதற்காக உங்களுக்கு கோர்ட் ஸம்மன் பிறப்பிக்கச் செய்தேன்.

சங்கரலிங்கம்: எனக்கு இந்த வழக்குபற்றி ஒன்றும் தெரியாதே.

உட்கார்ந்துகொண்டு அவர் சொல்வதைக் கவனிக்காதவர்போல் வக்கீல் தம் வேலையைக் கவனிக்க ஆரம்பித்தார். சங்கரலிங்கம் அப்படியே அயர்ந்துபோய் நின்று, "நீர் இத்துடன் தப்பித்துக்கொள்ளமுடியாது. நான் சொல்வதைக் கவனித்துக்கொள்ளுங்கள்" என்று படபடத்தார். அதையும் வக்கீல் கவனித்ததாகத் தெரியவில்லை. மேலும் சங்கரலிங்கம் அதிர்ச்சி அடைந்து வக்கீலினுடைய மேஜைமீது வைக்கப்பட்டிருந்த பளபளப்பான வெள்ளி சிகரெட் கேஸை எடுத்துத் தமக்குத் தடுப்பு ஆயுதம்போல் கையில் எடுத்துக்கொண்டார். அதை வக்கீல் கவனிக்காதவர் மாதிரி தம்முடைய காகிதங்களைப் புரட்டிக்கொண்டிருந்தார். சிகரெட் கேஸை அழுத்திப் பிடித்துக்கொண்ட சங்கரலிங்கம், "நான் இன்று இரவே சிங்கப்பூருக்குப் போகத்தான் போகிறேன்" என்றார்.

வக்கீல்: ஆஹா! தாராளமாகச் செல்லலாம். ஆனால் விசாரணை ஆரம்ப தினத்தில் கட்டாயம் வந்துவிடுங்கள்.

சங்கரலிங்கம்: இதோ பாருங்கள், உங்கள் கைவரிசையை என்னிடம் காட்டவேண்டாம். இந்த வழக்கு விஷயமாக எனக்கு ஒன்றும் தெரியாது. கொலை செய்யப்பட்ட மனிதனை யாவது உங்களுடைய கட்சிக்காரி பிரமிளாவையாவது எனக்கு முன்பின் தெரியாது. நான் கொலை நடந்த நேரத்தில் இந்த ஊரிலேயே இல்லை. என்னுடைய தோட்டத்திற்குள் பிணம் கிடந்தது என்று யாரோ சொல்லித்தான் எனக்குத் தெரியும்.

வக்கீல்: அது சரி; ரிவால்வர் விஷயம் என்ன என்பதைத் தங்களுக்கு நான் நினைவுபடுத்தலாமா?

சங்கரலிங்கம்: புதரில் கண்டு எடுக்கப்பட்ட ரிவால்வர் என்னுடையதுதான். அதற்காக நான் கோர்ட்டில் நேராக சாட்சியம் சொல்லத் தேவையில்லை. நான் இங்கு வந்தது

என்னுடைய சிங்கப்பூர் பயணத்தைத் யாராலும் நிறுத்த முடியாது என்று சொல்வதற்காகத்தான்.

வக்கீல்: நான் இன்று உங்களை நிச்சயமாக நிறுத்த முடியாது. விசாரணை தினத்தன்று கட்டாயம் திரும்பி வந்து விடுங்கள்.

சங்கரலிங்கம்: அது முடியாது.

வக்கீல்: அப்படியானால் போகாமல் இங்கேயே தங்கி விடுங்கள்.

சங்கரலிங்கம்: நான் உங்களிடம் சிநேக பாவமாக இருக்க நினைத்தேன். அதனால் உங்களுக்கும் பலன் ஏற்படும் என்று நினைத்தேன். ஆனால், எனக்குக் கஷ்டம் உண்டு பண்ணுவதுதான் உங்களுடைய எண்ணமாய் இருந்தால் நானும் உங்களுக்குச் சங்கடம் கொடுப்பேன். எனக்கும் பெரிய பெரிய வக்கீல்கள் துணை இருக்கிறார்கள். அவர்களுக்கும் சட்டம் தெரியும். உம்மைவிட அவர்களுக்கு அதிகமாகத் தெரியும். என்னிடமிருந்து ஏதாவது விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகவும் எனக்குத் தொந்தரவு கொடுக்க வேண்டுமென்பதற்காகவும் இந்த ஸம்மனை பிறப்பிக்கச் செய்திருக்கிறீர். இது ஒருவிதமான சட்டப்படி செய்யும் பலவந்தமும் பயமுறுத்தலும் ஆகும் தெரியுமா? அதனால்தான் என் வக்கீல் உங்களைச் சந்தித்து விஷயங்களை விளக்கி நான் கோர்ட்டுக்கு வராமல் இருக்க ஏற்பாடு செய்யச்சொன்னார். அவர் சொன்னபடி நான் இங்கே வந்து உங்களிடம் சொல்லிவிட்டேன்.

வக்கீல்: சரி, நீங்கள் விஷயங்களைத் தெளிவாகச்சொல்லி விட்டீர்கள். நானும் தெளிவாகச் சொல்கிறேன். உங்களை கோர்ட்டுக்கு வராமல் தடுக்க என்னால் முடியாது.

சங்கரலிங்கம், "என் வக்கீல்களும் நீங்கள் இப்படிச் சொல்வீர்கள் என்று எதிர்பார்த்தார்கள். அவர்களுக்கும் வருமானம் வேண்டுமல்லவா? சரி, நான் பார்த்துக்கொள்கிறேன்" என்று முடிவாகச் சொல்லிவிட்டு சங்கரலிங்கம் வேகமாக அங்கிருந்து சென்றுவிட்டார்.

அவர் சென்ற உடனேயே அர்ஜுன்சிங்கை உடனே வக்கீல் வரவழைத்து, சிகரெட் லைட்டர், சிகரெட் கேஸ் இவற்றில் சங்கரலிங்கம் தற்செயலாய் நிதானமில்லாமல் தம் கைரேகையைப் பதியவைத்ததை எடுத்துக் காட்டி கைரேகை நிபுணர்களுக்கு அனுப்பி காளிமுத்துவின் கைரேகையுடன் அதை ஒப்பிட்டுப் பார்த்துச் சொல்லுமாறு ஏற்பாடு செய்தார். சங்கரலிங்கம் மிகவும் ஜாக்கிரதையாக நடந்துகொள்பவர்தான். இருந்தாலும் அவர் அவசரத்தில் நிதானம் இழந்து அங்குள்ள பொருள்களில் எல்லாம் தம்முடைய கைரேகையைப் பதியவைத்துவிட்டுச் சென்றுவிட்டார்; சங்கரலிங்கம் எதையும் ஆறப்போடுகிறவர் அல்லர். அவர் மிக வேகமாக, சிறிதும் தாமதமின்றிக் காரியங்களைச் செய்யக்கூடியவர். அப்படி அவர் செய்வதற்கு முன்பாக இங்கு கைரேகைப் பரிசோதனையை விரைவாக நடத்துமாறு வக்கீல் கட்டளையிட்டார். "நீங்கள் நினைக்கிறபடி இல்லாவிட்டால்" என்று உஷா கேட்டதற்கு "இது ஒரு நோட்டம்போல், ஏதோ அனுமானத்தில் இவைகளையெல்லாம் செய்யுமாறு நான் சொல்கிறேன். பிற்பாடு தக்க சூழ்நிலை ஏற்பட்டால் பெரிய சாட்சியங்களாகக்கூட இது உதவும்" என்றார் வக்கீல்.

பெரிமேஸன் எதிர்பார்த்ததுபோலவே சங்கரலிங்கம் வெகு துரிதமாக நடவடிக்கை எடுத்து பெரிமேஸன்மீது ஒரு லட்ச ரூபாய் மானநஷ்ட வழக்குத் தொடர்ந்துவிட்டார். வேண்டுமென்றே தம் வியாபாரத்துக்கு இடையூறும் துன்பங்களும் ஏற்படுத்துவதற்காகக் கோர்ட்டிலிருந்து ஸம்மன் அனுப்பும்படி செய்ததற்கும் அந்த ஸம்மனை உடனே வாபஸ் பெறுவதற்குக் கோர்ட்டார் உத்தரவிடுவதற்காகவும் பெரிமேஸன்மீது கோர்ட் பிராசஸ் ஸர்வர் மூலமே உடனே நோட்டீஸைக் கொண்டு கொடுக்கச்செய்தார்.

வக்கீல் பிராசஸ் ஸர்வரைப் பார்த்து, "சங்கரலிங்கம் செய்வதை மிகவும் திறம்படச் செய்பவர். திட்டமிட்டு முன்கூட்டியே உன்னைத் தயாராக அழைத்துவந்து வெளியில்

காத்திருக்கச் செய்து உடனே இதைக் கொடுத்துவிட்டிருக்கிறார்போல் இருக்கிறது இல்லையா?" என்று கேட்டவுடன் பிராசஸ் ஸர்வர், "ஆமாம்" என்று தலையாட்டினான். வக்கீல் அதைப் பெற்றுக்கொண்டு பிராசஸ் சர்வரை அனுப்பியவுடன் அர்ஜுன்சிங் டெலிபோனில் கூப்பிட்டார்.

அர்ஜுன்சிங் வருத்தம் தோய்ந்த குரலில் "சங்கரலிங்கத்தின் கைரேகையைப் பெரிதாகப் போட்டோ எடுத்து சோதிக்கத் தொடங்கிய உடனேயே, சங்கரலிங்கத்தின் கைரேகையும் காளி முத்துவின் கைரேகையும் ஒன்றாக இல்லை, ஒற்றுமையில்லை என்பது தெரிந்துவிட்டது. அதனால் சங்கரலிங்கமும் காளிமுத்துவும் ஒரே நபரல்லர். நாம் தவறான ஏதோ ஒரு பாதையில் செல்கிறோம்" என்று சொன்னார்.

ஆனால், வக்கீல் நிதானமாகச் சிரித்து, "அப்படியானால் அது யாருடைய கைரேகையாக இருக்கும் என்று பாருங்கள்" என்று கூறி டெலிபோனில் பேச்சை உடனே முடித்துவிட்டார்.

அருகிலிருந்த உஷா அவரைப் பரிதாபமாகப் பார்க்கவும் வக்கீல், "அது தொலையட்டும். நான் தப்பாகத் தீர்மானித்து இருக்கவே முடியாது. ஆனாலும் இப்பொழுது தப்புமாதிரி தெரிகிறது. இருக்கட்டும். அவர் நம் வலையில் தன்னாலேயே சிக்கிவிட்டார். நமக்குச் சௌகரியமான காரியத்தைத்தான் அவர் செய்து வருகிறார், அவர் நம்மீது அழகான வழக்கு ஒன்றை ஜோடித்து இருக்கிறார். கொஞ்சம் பொறுத்துத் தான் பார்ப்போம்" என்றார்.

11

மேலும் பல மர்மமான தகவல்கள்

இரவு சாப்பிட்டபிறகு வக்கீல் உஷாவுடன் அர்ஜுன்சிங் இருக்கும் இடத்திற்கு வந்தார். அவர் அறைக்குள் நுழைந்த உடனே அர்ஜுன்சிங்கை நோக்கி மெல்ல சிரித்துக்கொண்டே "மேலும் என்னென்ன கெட்ட செய்திகளை வைத்து இருக்கிறாய்?" என்று கேட்டவுடனே அர்ஜுன்சிங், "கைரேகை காரியாலயத்திலிருந்து உண்மையான தகவல்கள் கிடைத்துவிட்டன. சங்கரலிங்கத்தினுடைய கைரேகை இதற்குமுன்பு அவர்களுடைய பதிவேட்டிலேயே கிடையாது. அதனால் அவர் மிகவும் நேர்மையான மனிதர் என்று தெரிகிறது" என்றார். வக்கீல் மௌனமாக அவற்றைக் கேட்டுக்கொண்டார்.

அர்ஜுன்சிங்: பத்திரிகைகளைப் பார்த்தீர்களா? பத்திரிகைகளில் உங்கள்மீது சங்கரலிங்கம் தொடர்ந்திருக்கும் நஷ்டஈடு வழக்கைப்பற்றித்தான் மிகவும் கொட்டை எழுத்துக்களில் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்திருக்கிறார்கள். சங்கரலிங்கத்தைப் பத்திரிகை நிருபர்கள் சந்தித்துக் கேட்டபொழுது தமக்கு இந்த வழக்கைப்பற்றி ஒருவிதத் தகவலும் தெரியாமல் இருந்தும் வேண்டுமென்றே வியாபாரத்தில் நஷ்டத்தை ஏற்படுத்துவதற்காகவும் அவமரியாதை

செய்வதற்காகவும்தான் கோர்ட் ஸம்மனைத் தமக்கு அனுப்புமாறு தாங்கள் செய்ததால் மானநஷ்ட வழக்கு தொடர்ந்திருப்பதாகக் கூறியிருக்கிறார். ஏராளமாகப் பொருள் செலவானாலும் ஒருகை பார்த்துவிடப் போகிறாராம். ஆமாம்! அவர் தங்கள்மீது வக்கீல் என்ற முறையில் இல்லாமல் தனிப்பட்ட முறையில் இவ்வாறு வழக்குத் தொடர முடியுமா?'' என்று கேட்டார்.

வக்கீல்: அது அநேக விஷயங்களைப் பொறுத்தது. எது எப்படியிருந்தாலும் நிச்சயமாகப் பிரமிளாமீது வழக்கு கிடையாது.

அர்ஜுன்சிங்: இப்பொழுது நான் இன்னொரு வெடிகுண்டை உங்கள்மீது தூக்கிப் போடப்போகிறேன் புதரில் கண்டெடுக்கப்பட்ட ரிவால்வரால்தான் ஜம்புலிங்கம் கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்பதை இப்பொழுது கண்டுபிடித்துவிட்டிருக்கிறார்கள். உங்களுடைய அழகான கட்சிக்காரி இருக்கிறாளே பிரமிளா, அவள் அழுதுகொண்டே போலீஸாரிடம் முழுக் கதையையும் சொல்லி இருக்கிறாள். அவளுக்கு ரிமாண்டில் தங்கியிருக்கப் பிடிக்கவில்லை. போலீஸாரும் வழக்கப்படி தங்களுடைய பசப்பு வார்த்தைகளினால் உண்மையைச் சொன்னால் விடுதலை செய்துவிடுவதாகக் கூறி அவளை ஏமாற்றியிருக்கிறார்கள். மேலும் போலீஸார் கார் டயர் சுவடுகளையும் கால் அடிச்சுவட்டையும் பிரேதம் கிடந்த இடத்திலிருந்து குறித்தெடுத்திருக்கிறார்கள். கால் சுவடுகள் பிரமிளாவினுடையது என்பதையும் கார் டயர் சுவடுகள் அவளுடைய காரினுடையது என்றும் அடையாளம் கண்டு கொண்டிருக்கிறார்களாம். அத்துடன் அவளுக்கு ரிவால்வரைக் கொடுத்தவனையும் அவர்கள் கண்டுபிடித்துவிட்டார்கள். மேலும் அந்த ரிவால்வர் ஜம்புலிங்கத்திடமிருந்தது என்று அவனுடைய மனைவி வாக்குமூலம் கொடுத்திருக்கிறாள். எப்படி என்றால் ஒரு மாதத்திற்கு முன்பு அவள் அந்த ரிவால்வரைத் தன் கணவனுடைய பெட்டியில் பார்த்திருக்கிறாள். அதைப்பற்றி அவள் மிகவும் கவலைப்பட்டுத் தன் கணவரைக் கேட்டாளாம். தான் வெளியில் செல்லும் பொழுது தன் வீட்டிற்கு அருகே அதைக் கண்டெடுத்த தாயும் அதைத் தான் எடுத்துக்கொண்டு வந்தாகவும் ரிவால்வர் ஒன்று கைவசம் இருப்பது நல்லதுதான் என்று அவர் தெரிவித்ததாகவும் சொல்லியிருக்கிறாள். அவளும் அந்த ரிவால்வருடைய நம்பரை ஒரு டயரியில் குறித்து வைத்திருக்கிறாள். புதரில் கண்டெடுக்கப்பட்ட ரிவால்வர் தான் அது என்று அடையாளமும் காட்டியிருக்கிறாள். ஆனால் வீட்டைவிட்டு வெளியே போகும்பொழுது ஜம்புலிங்கம் அதைத் தம்முடன் எடுத்துச் சென்றிருக்கிறார். அங்கிருந்து ஜம்புலிங்கம் கிளம்பிய நேரமும் மரகதத்தின் வீட்டிற்கு ரத்னம் வந்த நேரத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் சரியாக இருக்கிறது. அதனால் ஜம்புலிங்கமாகிய ரத்னத்திடம் அந்த ரிவால்வர் இருந்திருக்கிறது. மரகதத்திற்கு ரத்னத்திடம் ரிவால்வர் இருந்த விஷயம் தெரியாது. இரவு பிரமிளா பொய்யான கதையைச் சொல்லி ரிவால்வரைக் காண்பித்தபொழுதுதான் ரிவால்வரைப்பற்றியே தெரியும். அத்துடன் போலீஸார் பெட்ரோல் பங்கிற்கும் சென்று பிரமிளாவுடன் சென்ற நபரைப்பற்றித் துப்பு கண்டுபிடிக்கவேயில்லை. விசாரிக்கவும் இல்லை.

வக்கீல்: நீ நினைக்கிறபடி போலீஸார் அவள் கதையை நம்பாமல் இல்லை. அவர்கள் அந்த நபரைக் கண்டுபிடித்துவிட்டபடியால் கவலையில்லாமல் இருக்கிறார்கள். ஆனால் அவன் கூண்டிலேறி பொய் சாட்சியம் சொன்னால் அதை மடக்கி அது பொய் என்று நிரூபிக்க என்னால் முடியும். அதனால் உடனே நீ அவனை யார் என்று தெரிந்து வர வேண்டும்.

''பிரமிளாவுடன் ஒரு நபர் சென்றதாகத் தெரியவில்லை. அப்படி ஒருவரும் செல்லவில்லை என்பதை நிரூபிக்கப் போலீஸார் தயாராய் இருக்கிறார்களாம். அவள் வாக்குமூலம் தவிர வேறு ஒன்றுமே கிடையாது. எப்படியும்

அவளுக்கு மரண தண்டனைதான் கிடைத்துவிடுமோ என்று நான் அஞ்சுகிறேன். சங்கராபுரம் எஸ்டேட்டின் வெளி கேட்டு இரவு பத்து மணிக்குப் பூட்டப்பட்டுவிடுகிறது. ஆனால் அதற்கு முன்பாகவே ரத்னத்துடைய காரை எஸ்டேட்டுக்குள் கொண்டுபோய் இருக்கமுடியும். பிரமிளாவும் மரகதத்தின் வீட்டைவிட்டு இரவு 9½ மணிக்கே புறப்பட்டுவிட்டாள். அதனால் கேட் மூடுவதற்குள் இந்தக் கொலை அதாவது 45 நிமிஷத்தில் நடந்திருக்கவேண்டும். அதற்குள்ளாக ஜம்புலிங்கமாகிய ரத்னம் வைத்திருந்த ரிவால்வர் பிரமிளாவிடம் கிடைத்திருக்கவேண்டும். இந்த 45 நிமிஷத்தில் தான் செய்தது என்ன என்று அவளாலேயே சொல்லமுடியவில்லை. அதை மறைப்பதற்காக அவள், யாரோ ஒரு மாய மனிதன் துப்பறியும் ஆபீஸர்-தன்னுடைய மடியில் ரிவால்வரை வீசியெறிந்ததாகவும் அவளைக் காரிலேயே ஏற்றிச் சென்று பெட்ரோல் பங்க்கு அருகில் இறக்கிவிட்டதாகவும் இட்டுக் கட்டிக் கதை சொல்லியிருக்கிறாள். மரகதத்தின் வீட்டை விட்டுப் பிரமிளா புறப்பட்டவுடனேயே சற்றுத் தொலைவில் ரத்னம் அவளுக்காகக் காத்திருக்கவேண்டும். பிரமிளா, தனது இரட்டை வாழ்க்கையை, தனக்கு மற்றொரு மனைவி இருக்கிறாள் என்னும் செய்தியைக் கண்டுபிடித்துவிட்டபடியால் அவளை எப்படியாவது ஒழித்துக்கட்டிவிடவேண்டுமென்று அவன் நினைத்திருக்கவேண்டும். ஆனால், பிரமிளா 9½ மணிக்கு நம்மிடம் டெலிபோனில் பேசியிருக்கிறாள். பிறகு ரத்னத்துடன் காரில் சென்று அவனிடம் பேசிக்கொண்டிருந்தபொழுது பேச்சு முற்றி அவனிடமிருந்த ரிவால்வரைப் பறித்து அவனைக் கொன்று பிரேதத்தை சங்கராபுரம் எஸ்டேட் புதரில் மறைத்திருக்கலாம். மாய துப்பறியும் நிபுணர் என்ற கதையெல்லாம் பிறகு அவள் கற்பனை செய்திருக்கலாம்'' என்று அர்ஜுன்சிங் தனக்குத் தெரிந்தவைகளையும் தன்னுடைய சுய அபிப்பிராயங்களையும் வக்கீலிடம் மளமளவென்று கூறினார்.

ஆனால், வக்கீல் சிறிது நேரம் மௌனமாக இருந்தார். பிறகு, ''பிரமிளா, நம்பக்கூடியவாறு வேறுவிதமாகப் பொய்

சொல்லியிருக்கலாமே. அவள் ஏன் நம்மிடம் ரிவால்வரைக் காண்பித்திருக்கவேண்டும்? ஆரம்பத்திலேயே ரிவால்வரைப் புதரில் எறிந்திருக்கலாம். ஏன் அப்படிச் செய்யவில்லை?'' என்றார்.

அர்ஜுன்சிங்: அவள் என்ன செய்யத் தீர்மானித்தாளோ? அதற்குள் ஏதோ நடந்திருக்கிறது! அவளிடம் ரிவால்வரும் இருந்துவிட்டது. அதை மறைக்க முடியவில்லை. அதனால் ஒரு மர்மமான துப்பறியும் ஆபீஸர் ரிவால்வரைத் தன்னிடம் கொடுத்தார் என்று பொய் சொல்லியிருக்கலாம்.

வக்கீல்: சர்க்கார் தரப்பு வக்கீல் ஒரு சிறிய பாயிண்டைக்கூட கவனிக்காமல் விடமாட்டார். அந்தக் கொலையைச் செய்ததாகக் கூறும் ரிவால்வர் பிரமிளாவிடம் இருந்தது என்று ருசு செய்தாகவேண்டும் முதலில். அது ஒரு ·38 ரிவால்வர். ஸ்மித் அண்டு வெல்ஸன் கம்பெனியார் தயாரித்தது. அதேபோல் ஸ்மித் அண்டு வெல்ஸன் கம்பெனியாருடைய ரிவால்வர்கள் அநேகம் இருக்கின்றன.

அர்ஜுன்சிங்: அது சரி, நீங்கள் உங்கள் சிகரெட் கேஸையும் லைட்டரையும் வீணே ஏன் அந்தப் புதரில் எறிந்தீர்கள்?

வக்கீல்: போலீஸார் எல்லா இடங்களையும் சோதித்து என்னென்ன சாமான்கள் இருக்கின்றன என்று கண்டுபிடிக்கவேண்டுமென்ற எண்ணத்துடன்தான் நான் அப்படிச் செய்தேன். கொலையாளி தான் உபயோகித்த ரிவால்வரை அங்கேயே விட்டுப்போய் இருப்பான் என்பதுதான் என் அபிப்பிராயம். என்றாலும் போலீஸார் எல்லா இடங்களையும் ஒன்றுவிடாமல் நன்றாகத் தேடினார்கள். அதற்கு அவர்கள் எனக்கு நன்றி தெரிவிக்கவேண்டியவர்கள். நீயும் சர்க்கார் வக்கீலும் நினைப்பதுமாதிரி இந்த வழக்கு ஒரே பக்கமாகப் போகாது. கொலை நடந்த அன்று சங்கரலிங்கம் இங்கே இருந்தார் என்பதை முதலில் நீ கண்டுபிடி பார்க்கலாம்.

அர்ஜுன்சிங்: அவர் 6½ மணியிலிருந்து ஒரு பெரிய ஹோட்டலில் தங்கிச் சாப்பிட்டுவிட்டு அங்கேயே தூங்கி விட்டாராம்.

வக்கீல்: அது சரி, அவருக்கு ஹோட்டலில் யாரும் காவல் போட்டு கண்காணிப்பதில்லையே. அவர் ஏன் இரவு ஏழு மணிக்கு ஹோட்டலிலிருந்து ஒருவருக்கும் தெரியாமல் புறப்பட்டு காரிலே வேகமாக வந்து ஜம்புலிங்கத்தை கொலை செய்துவிட்டுத் திரும்பவும் ஹோட்டலுக்குப் போய் இருக்கக்கூடாது?

அர்ஜுன்சிங்: அவர் எதற்காக ஜம்புலிங்கத்தை அவ்வாறு கொலை செய்தார் என்று ருசுப்படுத்த சாட்சியம் எங்கே இருக்கிறது?

வக்கீல்: கொலை செய்யவில்லை என்பதற்கு என்ன சாட்சியம் இருக்கிறது?

12

ரத்தினம்—ஜம்புலிங்கம் மர்மக் கொலை வழக்கு விசாரணை—உருசிகரமான தகவல்கள்

இந்த வழக்கு உயர் நீதிமன்றத்தில் பூர்வாங்க விசாரணைக்காக வந்தது. அரசாங்கத் தரப்பில் பெரிய வக்கீல் ஜெயராஜ் தாமே இந்தக் வழக்கை நடத்தப்போவதாகச் சொன்னார்.

"மிகவும் சந்தோஷம். முதலில் சாட்சியைக் கூப்பிடுங்கள்" என்று கட்டளையிட்டார் நீதிபதி.

அரசாங்க வக்கீல் எழுந்து, "கனம் கோர்ட்டார் இந்த வழக்கை விசாரிப்பதற்கு முன்பாக சங்கரலிங்கம் என்னும் மதிப்புவாய்ந்த நகரவாசிக்குப் பிறப்பிக்கப்பட்ட ஸம்மனை ரத்து செய்யவேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்" என்று கோரிக்கையைப் பிறப்பித்தார்.

"எந்த அடிப்படையில்?" என்று நீதிபதி வினவினார்.

"எதிர்தரப்பு வக்கீல் பெரிமேஸன் அவர்கள் சங்கரலிங்கத்திற்கு இடைஞ்சலும் அசௌகரியமும் உண்டுபண்ணும் கெட்ட எண்ணத்துடன் இந்த ஸம்மனை அவருக்குப் பிறப்பித்திருக்கிறார்."

நீதிபதி, எதிர் தரப்பில் ஆஜரான வக்கீல் பெரிமேஸனை நோக்கி, "சாட்சி சங்கரலிங்கம் அவர்கள் இந்த வழக்கிற்கு அவசியம் தேவைதானா?" என்று கேட்டார்.

வக்கீல் மேஸன்: மிகவும் அவசியமாகத்தான் எனக்குத் தோன்றுகிறது. சங்கரலிங்கத்தின் சாட்சியம் அவசியம் என்னும் சந்தர்ப்பங்கள் நிச்சயம் ஏற்படும் என்று நான் நம்புகிறேன்.

அரசாங்க வக்கீல்: இந்த வழக்கு சிக்கல் ஏதும் இல்லாத தெளிவான வழக்கு. எதிர்தரப்பில் சாட்சிகள் போடுவதற்குச் சந்தர்ப்பமே கிடையாது. அப்படி சங்கரலிங்கம் முக்கியமான சாட்சியாய் இருந்தால் இப்பொழுதே எதிர் தரப்பு வக்கீல் அதை இந்தக் கோர்ட்டில் வெளிப்படுத்திக் காரணங்களைப் புலப்படுத்தலாம்.

வக்கீல் மேஸன்: நான் எந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல வேண்டுமோ அப்பொழுதுதான் வெளிப்படுத்துவேன். அவருடைய சாட்சியம் அவசியம் வேண்டும். முன்கூட்டிய காரணங்களைக் கேட்பது, நான் எந்தவிதமாக வழக்கை முறியடிக்கப்போகிறேன் என்று தெரிந்துகொள்ளும் நோக்கத்துடன்தான். ஸம்மன் பிறப்பித்ததற்காக சங்கரலிங்கம் என்மேல் ஒரு லட்ச ரூபாய்க்கு மான நஷ்ட வழக்கு தொடர்ந்து இருக்கிறார்.

நீதிபதி அப்படி சங்கரலிங்கம் வழக்குத் தொடர்ந்து இருப்பது உண்மைதானு என்பதைத் தெரிந்துகொண்டதும், "சங்கரலிங்கம்தான் தனக்குச் சம்மன் பிறப்பிக்கப்பட்டதற்குப் பரிகாரத்தைத் தேடிக்கொண்டு விட்டிருக்கிறாரே, இது என்ன? ஒருமுறை சாப்பிட்டுவிட்டு மறுபடியும் சாப்பாடு கேட்பதுபோல் இருக்கிறது! ஏற்கனவே ஒரு நீதி ஸ்தலத்தில் நீதி கேட்கப்பட்டு மீண்டும் அதையே இங்கும் கேட்பது நியாயமில்லை. பரிகாரம் வேண்டுமெனில் அந்தக் கோர்ட்டிலேயே கேட்கவேண்டும். அல்லது இந்தக் கோர்ட்டை மட்டும் நாடவேண்டும். சங்கரலிங்கம் எதைச் செய்ய முடிவு செய்திருக்கிறார்?" என்று வினவினார்.

சங்கரலிங்கம்: நான் நஷ்ட ஈடு வழக்கைக் கைவிட மாட்டேன். இங்கும் நான் சாட்சியாக ஆஜராகாமல் மன்னிப்புத் தரவேண்டும்.

நீதிபதி இதைக்கேட்டு, 'ஸம்மனை ரத்து செய்யமுடியாது' என்று கூறி வழக்கு விசாரணையைத் தொடங்கினார்.

முதல் சாட்சி குற்றம் நடந்த சங்கராபுரம் எஸ்டேட்டின் பிளானைத் தாக்கல் செய்தார்.

அவரை வக்கீல் மேஸன் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

இரண்டாவது சாட்சியாகப் போலீஸ் அதிகாரி நந்தகுமார் விசாரிக்கப்பட்டார்.

நந்தகுமார்: "வக்கீல் பெரிமேஸன் இந்தக் கொலையைப் பற்றி எனக்கு டெலிபோன் செய்தார். அந்தச் செய்தியைக் கேட்டவுடனேயே அவருக்குச் செய்தி கொடுத்தவரைக் கண்டுபிடிக்கப் பெரிமேஸனுடைய காரியாலயத்திலிருந்து வெளியேறும் நபர்களையும் கார்களையும் மறித்துக் கண்காணித்தோம். வக்கீல் மேஸனுக்கு இந்தக் கொலையைப்பற்றி முதலில் தகவல் கொடுத்த பிரமிளாவை ஒருமணி நேரத்திற்குள் கண்டுபிடித்தோம்" என்று கூறி மேலும் அவர் தொடர்ந்து 25 ரூபாய் செக்கைப் போட்டோ காப்பி எடுத்து வைத்திருப்பதாகவும், மேஸன் சொல்லிக் கொடுத்ததுபோல் பிரமிளா எதுவும் பதில் பேசாது வாக்குமூலம் தர மறுத்ததாகவும், மேஸனும் அந்தச் செக்கைப் பாங்கில் மாற்றிவிட்டதாகவும் தெரிவித்தார். சங்கராபுரம் எஸ்டேட்டுக்குத் தானே நேரடியாகச் சென்று கொலை நடந்த இடத்தையெல்லாம் குறித்துக் கொண்டதாகவும் அங்கும் பெரிமேஸன் தகராறு செய்ததாகவும் தான் அந்த இடங்களையெல்லாம் சோதனை செய்து ஸ்மித் அண்டு வெல்ஸன் கம்பெனியாரின் '38-ரிவால்வரை அங்குள்ள புதரிலிருந்து கைப்பற்றியதாகவும் சாட்சியம் சொன்னார்.

வக்கீல் மேஸன் நந்தகுமாரைக் குறுக்கு விசாரணை செய்தார்.

வக்கீல்: நான் குற்றம் நடந்த இடத்தில் என்ன தகராறு செய்தேன்?

111603

நந்தகுமார்: எனக்கு நேரிடையாகத் தெரியாது; கேள்விப்பட்டதுதான்.

வக்கீல்: பரவாயில்லை. ரொம்ப சட்ட நுணுக்கத்துடன் பேசவேண்டாம். நான் செய்ததைத் தாராளமாகச் சொல்லலாம்.

நந்தகுமாரர்: கேட்டிலிருந்த பாதுகாவலர்கள் டங்களை உள்ளேவிட மறுத்ததும், நீங்கள் சிகரெட் கேஸை வேலிக்கு மறுபுறத்திலிருந்து தூக்கியெறிந்தீர்கள். அது ரிவால்வர் இருந்த இடத்திற்குச் சமீபம் விழுந்தது. பிறகு சிகரெட் லைட்டரைத் தூக்கி எறிந்துவிட்டீர்கள். நான் அவற்றையெல்லாம் கைப்பற்றியிருக்கிறேன்.

வக்கீல் பெரிமேஸன் அவற்றையும் சாட்சியங்களாக எடுத்துக் கொள்ளுமாறும் கோர்ட்டில் ஆஜர் செய்யவும் சொன்னார். அவைகளும் அடையாளங்களாக எடுத்துக்கொள்ளப்பட்டன.

அடுத்ததாகப் பிரேதத்தைப் போட்டோ எடுத்தவரும் பரிசோதனை செய்தவரும் விசாரிக்கப்பட்டார்கள்.

பிரேதத்தைப் பரிசோதனை செய்தவர், தான் ரிவால்வரவையை உடலிலிருந்து எடுத்ததையும், கொல்லப்பட்டவர் இறந்தது இரவு 9 மணியிலிருந்து 12 மணிக்குள்ளாக இருக்கலாம் என்று நிர்ணயித்ததாகவும் தெரிவித்தார்.

அதற்கு அடுத்தபடியாக ஜம்புலிங்கத்தின் மனைவி பிரேதம் ஜம்புலிங்கத்தினுடையதுதான் என்று நிரூபிப்பதற்காக விசாரிக்கப்பட்டாள்.

அவள் சோகம் நிறைந்த குரலில், தான் ஜம்புலிங்கத்தை எட்டு ஆண்டுகளுக்குமுன் கல்யாணம் செய்துகொண்டதாகவும் இறந்துபோனவர் தன்னுடைய கணவர் ஜம்புலிங்கம்தான் என்றும் சாட்சியம் சொன்னாள்.

மேஸன் அவளைக் குறுக்குக் கேள்விகள் கேட்டார்.

குறுக்கு விசாரணையின்பொழுது, "என்னைக் கல்யாணம் செய்து கொள்ளும்பொழுது ஜம்புலிங்கம் மிகவும் சொற்ப

வருமானத்தில் ஏதோ ஒரு சிறு உத்தியோகத்தில் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார். சுமார் 3 ஆண்டுகள் இவ்வாறு கஷ்டப்பட்டு வேலை செய்தபிறகு சிறிது நாள் வேலையில்லாமல் மிகவும் சிரமப்பட்டார். அதற்குப் பிறகு இன்னும் குறைவான ஊதியத்திற்கு ஓர் இடத்தில் வேலை செய்தார். அதையும் ராஜிநாமா செய்துவிட்டு அவர் ஒரு தொழிலில் இறங்கினார். அதில் அதிகம் சம்பாதித்து வந்தார். தான் சொந்தத்தொழில் செய்வதாக என்னிடம் சொன்னார். அவர் என்ன தொழில் செய்தார் என எனக்குத் தெரியாது. நானும் அவரை அதைப்பற்றிக் கேட்பதில்லை. குடும்பத்தை வசதியாக நடத்துவதற்கானப் பணத்தை அவர் கொடுத்துவந்ததால் நானும் சரிவரக் குடும்பத்தை நடத்திவருவது என் கடமை என்று ஏதும் அவரைக் கேட்காமல் இருந்தேன். இப்பொழுதுகூட அவர் என்ன தொழில் செய்தார் என்று எனக்குத் தெரியாது. அவரிடம் ஒருவிதமான கணக்குப் புத்தகங்களும் கிடையாது. அவர் எப்படிச் சம்பாதித்தார் என்று தெரிந்துகொள்ளவும் ஆதாரம் ஒன்றுமில்லை. வருமானத்திலிருந்து தவணை முறையில் ஒரு வீடு வாங்கினோம். அதில் பாதிக்குமேல் செலுத்திவிட்டோம். எங்கள் குடும்பத்திற்கு இரண்டு கார்கள் இருக்கின்றன. ஒன்று என் உபயோகத்திற்காக அவர் கொடுத்திருந்தார். ஒன்றை அவர் பயன்படுத்திக்கொண்டிருந்தார். கடைசியாக என் புருஷன் வியாபார விஷயமாய் சென்று திரும்பி வந்தபொழுது அவருடைய கைப் பெட்டியில் '38 ஸ்மித் அண்டு வெஸ்ஸன் கம்பெனியாருடைய சி. 232721 நம்பர் உள்ள ரிவால்வரைப் பார்த்தேன். 'அது ஏது' என்று என் கணவரைக் கேட்டேன்...அவர் என்ன சொன்னார் என்பதை நான் சொல்லவேண்டுமா?" என்று கேட்டாள்.

"உம், சொல்லுங்கள்."

"வழியில் மூன்று வீடுகள் தள்ளி அந்த ரிவால்வர் கிடந்ததாகவும் அதைப் போலீஸாரிடம் கொடுத்தால் அனாவசியமான கேள்விகளை அவர்கள் கேட்கக்கூடுமாதலால் போலீஸில் தெரிவிக்கவில்லை என்றும் என் கணவர் கூறினார்.

அந்த ரிவால்வரை அவர் வைத்துக்கொண்டிருக்க நான் அனுமதிக்கமாட்டேன் என்று கூறினேன். ஆனுல், அவர் அதை யாருக்கும் தெரியாமல் தன் கைப்பெட்டியிலேயே வைத்துக்கொள்வதாகச் சொன்னுர். பிறகு கடைசியாக அவர் வீட்டைவிட்டு வெளியே போகும்பொழுது அதை எடுத்துச் சென்றுவிட்டார்.''

அவருடைய சாட்சியம் முடிவடைந்தது.

அடுத்தபடியாக ரத்னம் மனைவி மரகதம் விசாரணைக்கு அழைக்கப்பட்டாள். அவள் கூண்டில் ஏறி சத்தியப் பிரமாணம் எடுத்துக்கொண்டாள்.

'' நீங்கள் எங்கே வசிக்கிறீர்கள் ?''

'' 37-ஆம் நம்பர், 2-வது குறுக்குத் தெரு, சத்திய நகர்.''

'' அந்தப் பகுதியில் உங்களை மரகதம் என்று சொன்னுல் எல்லோருக்கும் தெரியும் அல்லவா ?''

'' இல்லை; என்னை அந்தப் பகுதியில் உள்ளவர்களுக்கு மிஸஸ் ரத்னம் என்று சொன்னுல்தான் தெரியும்.''

'' ரத்னம் உங்களுடைய கணவர்தானே ?''

'' ஆமாம் ''

'' அவரை நீங்கள் கல்யாணம் செய்துகொண்டீர்கள் அல்லவா ?''

'' ஆமாம், 18 மாதங்களுக்கு முன்பு அவரை நான் கல்யாணம் செய்துகொண்டேன்.''

'' நீங்கள் இறந்துபோன ஐம்புலிங்கத்தின் பிரேதத்தைப் பார்த்தீர்கள் அல்லவா ?''

'' ஆமாம்.''

'' கொலையுண்டவர்தான் நீங்கள் 18 மாதங்களுக்கு முன்பு திருமணம் செய்துகொண்ட ரத்னம் என்பதைத் தெரிந்துகொண்டீர்களா ?''

'' ஆமாம்.''

'' இந்த வழக்கில் எதிரியாக உள்ள பிரமிளாவை உங்களுக்குத் தெரியும் அல்லவா ?''

'' ஆமாம். அவள் பல ஆண்டுகளாக என்னுடைய நெருங்கிய சிநேகிதி.

'' அவள் எங்கே வசித்து வந்தாள் ?''

'' என்னுடன்தான்.''

'' உங்களால் கொலை நடந்த அன்றைய மாலையிலிருந்து நடைபெற்ற சம்பவங்களை நினைவுபடுத்திச் சொல்ல முடியுமா ?''

மரகதம் மெல்ல தொண்டையைக் கனைத்துக்கொண்டு, '' குற்றம் நடந்த அன்று மாலையில் பிரமிளா வெளியே போய் விட்டு இரவு திரும்பி வந்ததாகவும், ஒரு துப்பறியும் ஆபீஸர் ரிவால்வர் ஒன்றை அவளிடம் கொடுத்ததாகவும் கதை ஒன்று சொன்னுள். என் கணவர் அந்தச் சமயம் வியாபார விஷயமாக வெளியூர் செல்வதாகச் சொல்லிவிட்டுப் போய்விட்டார் '' என்ருள்.

'' சரி, உங்களுடைய தோழி பிரமிளா எந்தெந்த இடங்களுக்குத் தொழில் நிமித்தமாகச் செல்கிருள் என்பது உங்களுக்குத் தெரியுமா ?''

'' உங்கள் கேள்வி எனக்குப் புரியவில்லை.

'' யார் யாரைப் புத்தக விற்பனைக்காகப் பார்க்கப் போகிருள் என்பது உங்களுக்குத் தெரியுமா என்று கேட்டேன்.''

'' ஓ தெரியுமே! நான் அந்த விஷயங்களில் அவளுக்குப் பல முறை உதவி இருக்கிறேன். சொல்லப்போனுல் அவளுக்கு அந்த விஷயங்களில் ஓர் உதவியாளராகக்கூட இருந்திருக்கிறேன்.''

'' உதவியாளராக என்ருல்? எப்படி என்று தயைசெய்து விளக்கிச் சொல்லமுடியுமா ?''

'' அவளுடைய காரியாலயத்திலிருந்து யார் யாரை அவள் பார்க்கவேண்டுமென்று பட்டியல் வரும். சில சமயம்

டெலிபோனில் செய்தி வரும். அவள் இல்லாதபொழுது நான் அந்தப் பட்டியலைப் பார்த்து டெலிபோனில் கேட்டு அவள் வந்தவுடன் அவளுக்கு அதைப்பற்றிக் கூறி அவள் செல்லவேண்டிய இடங்கள் எங்கிருக்கின்றன என்பதையும் வழிகாட்டுவேன்.''

''ஜம்புலிங்கம் என்பவரைப் போய்ப் பார்க்குமாறு அவளுக்கு உத்தரவு எப்பொழுது வந்தது என்று உங்களுக்குத் தெரியுமா?''

''தபாலில்தான் வந்தது. அதுவும் அவள் கைது ஆன பிறகு, அதை அவளுடைய அறையிலுள்ள பட்டியலிலிருந்து நான் பார்த்தேன். இதோ பாருங்கள். அந்தப் பட்டியலிலுள்ள ஜம்புலிங்கம் என்பவருடைய பெயரை. இந்தப் பட்டியலில் மொத்தம் 11 நபர்களுடைய பெயர்கள் இருக்கின்றன. அந்தப் பெயர் கடைசியில் இருக்கிறது.''

''அந்தப் பட்டியலை உங்களுடைய கணவர் பார்க்க வேண்டுமென்று நீங்கள் வைத்திருந்தீர்களா?''

''நான் கடைசியாகப் பார்க்கும்பொழுது பிரமிளாவின் அறையில்தான் அது இருந்தது. ஒருவேளை பிரமிளாவே அதை என் கணவர் கண்ணில் படும்படி வைத்திருக்கலாம்.''

''கொலை நடந்த மறுநாள் அன்று வக்கீல் மேஸனும் அவருடைய காரியதரிசியும் உங்களை வந்து பார்த்தார்கள் அல்லவா?''

''ஆமாம்.''

''அவர்கள் இருவரும் உங்களை எங்கு செல்லுமாறு அந்தச் சமயம் சொன்னார்கள்?''

சர்க்கார் தரப்பு வக்கீல் இப்படிக் கேட்டவுடன் மேஸன் எழுந்து, ''இது என்னைப்பற்றிய சொந்த விஷயம் ஆதலாலும், மேலும் இந்தச் சம்பவம் எதிரிக்குத் தெரிந்து நடக்காத விஷயமாதலாலும் இந்தக் கேள்வியை நான் ஆட்சேபிக்கிறேன்'' என்று கூறியதன்பேரில் நீதிபதியும் அந்தக் கேள்வியை அனுமதிக்கவில்லை.

''சரி; நீங்கள் இந்தச் சாட்சியை இனி குறுக்கு விசாரணை செய்யலாம்.'' என்று சர்க்கார் தரப்பு வக்கீல் கூறிவிட்டு அமர்ந்தார்.

''ரத்னத்தின் மனைவி மரகதத்தை நான் குறுக்கு விசாரணை செய்யப்போவதில்லை'' என்று மேஸன் கூறியவுடன் எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள்.

அதற்கு அடுத்தபடியாக ரிவால்வர்கள் விற்கும் கம்பெனியான ஸ்மித் அண்டு வெல்ஸன் உரிமையாளர் சாட்சியாக அழைக்கப்பட்டார்.

சங்கரலிங்கம் தன்னுடைய கம்பெனியின் வாடிக்கையாளர் என்பதை அந்தக் கம்பெனி சொந்தக்காரர் ஊர்ஜிதம் செய்தார்.

சர்க்கார் தரப்பு வக்கீல்: ''உங்களிடம் ரிவால்வர் ஒன்றை கொடுக்கப்போகிறேன். அந்த ரிவால்வரை நீங்கள் உங்கள் கம்பெனியினுடையதா என்று சரிபார்த்து அடையாளம் சொல்லமுடியுமா?''

''நான் அதை நேரிடையே வாங்கி அதனுடைய நம்பரைச் சரி பார்த்தால்தான் சொல்லமுடியும்'' என்று கூறி அதேபோல் அதை வாங்கிப் பார்த்து அடையாளம் கண்டுகொண்டார்.

''இதை விற்றது யார்?''

''நான்தான்.''

''நீங்களே நேரிடையாக விற்றீர்களா?''

''ஆமாம்.''

''யாரிடம் விற்றீர்கள்?''

''சங்கரலிங்கத்திற்கு. ஒருமுறை சங்கரலிங்கம் என் கடைக்கு வந்து தற்காப்புக்காக அவசரமாக ஒரு ரிவால்வர் வேண்டுமென்றும் அதிக கனம் இல்லாமலும் ஆனால் தரமுள்ளதாகவும் இருக்கவேண்டும் என்றும் கேட்டார். நான் இதை அவருக்கு எடுத்துக் காட்டி அதனுடைய குண

விசேஷங்களை விளக்கினேன். சங்கரலிங்கத்திற்கு அது பிடித்துவிட்டது.''

''நீங்கள் என்ன செய்தீர்கள்?''

''நாங்கள் உடனே ரிவால்வரை விற்றுவிடுவதில்லை. இரண்டு நாள் வரையில் தாமதித்தபிறகுதான் அதைக் கொடுப்பது வழக்கம். ஆனால், சங்கரலிங்கம் உடனே வேண்டுமென்று வற்புறுத்தியதால் மூன்று நாட்கள் முன்னதாக அவருக்கு விற்றதாகக் கணக்கு எழுதியபிறகே அவருக்குக் கொடுத்துவிட்டேன்.''

''நீங்கள்தானே அதை நேரே விற்றீர்கள்?''

''ஆமாம்; நானேதான் விற்றேன்.''

''சரி,...பெரிமேஸன் அவர்களே! நீங்கள் இவரைக் குறுக்கு விசாரணை செய்யலாம்'' என்றார் அரசாங்க வக்கீல்.

''நான் அவரை விசாரணை செய்யப்போவதில்லை'' என்று மேஸன் சொல்லிவிட்டார்.

பிறகு சங்கராபுரம் எஸ்டேட்டைப் பாதுகாக்கும் தாமு என்பவன் சாட்சியாக அழைக்கப்பட்டான்.

அரசாங்க வக்கீல்: கொலை நடந்த அன்று மாலையில் அங்கு என்ன நடந்தது என்று உன்னால் சொல்லமுடியுமா?

''நான் வழக்கப்படி என்னுடைய வேலையை எட்டரை மணிக்கே முடித்துவிட்டேன். மறுநாள் எனக்கு விடுமுறை நாள். அதனால் அன்று இரவு நான் தங்கவேண்டிய அவசியம் இல்லை. ஆதலால் நான் இரவு 9 மணிக்கே எஸ்டேட்டிலிருந்து புறப்பட்டுவிட்டேன். மறுநாளுக்கு மறுநாள் நான் அதிகாலையிலேயே வந்துவிட வேண்டுமென்ற எண்ணத்துடன் நான் சீக்கிரம் புறப்பட்டுவிட்டேன். ஆனால் போலீஸார் என்னைச் சந்தித்து விசாரணைக்கு அழைத்து வந்துவிட்டார்கள்.''

''உன்னைப் போலீஸார் எப்பொழுது சந்தித்தார்கள்?''

''11-ஆம் தேதி அன்று பகல் இரண்டு மணி இருக்கும்.''

''நான் இப்பொழுது உனக்கு ஒரு ரிவால்வரைக் காட்டப்போகிறேன். அதை உன்னால் அடையாளம் கண்டு கொள்ளமுடியுமா?''

தாமு அந்த ரிவால்வரை வாங்கிப் பார்த்துவிட்டு தலையை அசைத்தான்.

''இதை நீ எப்பொழுதாவது உன்னிடம் வைத்திருக்கிறாயா?''

''ஆமாம்.''

''இதை உன்னிடம் யார் கொடுத்தது?''

''என் எஜமான் சங்கரலிங்கம் அவர்கள்.''

''இதற்கு என்ன நேர்ந்தது?''

''நான் அதை என்னிடம் வைத்திருந்தேன். இரவு தோட்டத்தைச் சுற்றி வரும்பொழுதோ அல்லது எப்பொழுதோ அது நழுவி விழுந்துத் தொலைந்துவிட்டது. பிறகு அதைத் தேடியும் கிடைக்கவில்லை.''

''எதற்காக சங்கரலிங்கம் உன்னிடம் இதைக் கொடுத்தார்?''

உடனே மேஸன், ''இந்தக் கேள்வியைக் கேட்கக் கூடாது. இது வழக்குக்குச் சம்பந்தம் இல்லாதது'' என்று கூறி ஆட்சேபித்தார்.

நீதிபதி அவர்களும் இந்தக்கேள்வியை அனுமதிக்கவில்லை.

அரசாங்க வக்கீல்: போகட்டும், பிறகு நீ இதைப் பார்க்கவே இல்லை அல்லவா?

''ஆமாம்; போலீஸார் என்னிடம் காட்டும்வரையில் நான் பார்க்கவில்லை.''

சாட்சியை மேஸன் குறுக்கு விசாரணை செய்தார்.

வக்கீல் மேஸன்: இந்த ரிவால்வர்தான் சங்கரலிங்கம் உன்னிடம் கொடுத்தது என்று உனக்கு எப்படித் தெரியும்?

''அதுவா...அதுவா...அதேதான். ஜம்புலிங்கம் கண்டெடுத்த அதேதான். நான் தொலைத்த இடத்திலிருந்து அவர் கண்டெடுத்ததுதான்.''

வக்கீல் மேஸன்: நீ எங்கே தொலைத்தாய் என்று நிச்சயமான இடத்தைச் சொல்லமுடியுமா?

"நிச்சயமான இடத்தைச் சொல்லமுடியாது. நான் நடக்கும்பொழுது அது விழுந்திருக்கிறது. அதை ஜம்புலிங்கம் எடுத்திருக்கிறார்."

"நீ எப்பொழுது இதை நழுவவிட்டாய் என்று சொல்ல முடியுமா?"

"நான் தோட்டத்திற்கு வெளியே நடந்துகொண்டிருக்கும்பொழுது. இந்த மாதம் 3-ஆம் தேதி என்று நினைக்கிறேன்."

"நன்றாக யோசனை செய்து சொல். நீ வேலி ஓரமாக அதாவது புதரிலிருந்து போலீஸார் கண்டெடுத்தார்களே அந்த வேலி ஓரமாகச் சென்றபொழுது இது நழுவிவிட்டிருக்கலாம் அல்லவா?"

"இல்லை. இல்லை. நான் சாலையில்தான் நடந்தேன். வேலி ஓரமாக நடக்கவில்லை. எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. கேட்டைத் தாண்டி நூறு கெஜ தூரம் போனபிறகு என்னுடைய மேல்கோட்டைக் கழற்றி மடித்து வைத்துக்கொண்டு நடந்தேன். அப்பொழுதுதான் அது நழுவி இருக்க வேண்டும்."

"நீ எப்பொழுதாவது அந்த ரிவால்வரின் நம்பரைக் குறித்துக்கொண்டிருக்கிறாயா?"

"இல்லை?"

"அது புது ரிவால்வரா?"

"ஆமாம்! என் எஜமான் வாங்கிய அன்றே என்னிடம் கொடுத்தார்."

"அதன்மீது எந்தவிதமான கோடுகளோ அல்லது சிராய்ப்புகளோ இல்லை அல்லவா?"

"நிச்சயமாக இல்லை. அது புத்தம் புதியது."

"இப்பொழுது அதன்மீது சில கீறல்கள் இருக்கின்றன தெரியுமா?"

"அதிகாரி நந்தகுமார் காட்டியபொழுதுதான் தெரிந்தது."

"சரி உனக்குச் சங்கரலிங்கம் கொடுத்த ரிவால்வர் எது என்பது நிச்சயமாக நினைவில் இருக்கிறது அல்லவா!"

"ஆமாம்."

"ஸ்மித் அண்டு வெல்சன் கம்பெனியில் விற்கும் ஏராளமான ரிவால்வர்களில் ஒன்றாகக்கூட இருக்கலாம் அல்லவா?"

"நீங்கள் இப்படியெல்லாம் கேட்பதாக இருந்தால் சங்கரலிங்கம் என்னிடம் கொடுத்த ரிவால்வரைப்போல் தான் இது இருக்கிறது என்றுதான் சொல்லுவேன்" என்றான் சாட்சி.

அடுத்தபடியாக துப்பாக்கி நிபுணர் விசாரிக்கப்பட்டார்.

அவர் தான் அந்த உடலில் பாய்ந்திருந்த குண்டை சோதனை செய்ததாகவும் அது ரிவால்வரிலிருந்து சுடப்பட்ட குண்டுதான் என்று நிச்சயமாகப் புலப்படுவதாகவும் கைப்பற்றியுள்ள ரிவால்வர் நெம்பர் கொண்ட ஒரு ரிவால்வரிலிருந்துதான் சுடப்பட்டு இருக்கிறது என்று நம்புவதாகவும் அவர் சாட்சியம் சொன்னார்.

கைப்பற்றப்பட்ட ரிவால்வரை அந்தச் சாட்சிக்குக் காண்பிக்கவேண்டும் என்பதை வக்கீல் மேஸன் எதிர்பார்த்தார். ஏனென்றால் சங்கரலிங்கம் அதைத் தான் வாங்கி வந்ததும் உடனே தன் வீட்டு வேலைக்காரனிடம் கொடுத்ததாகவும் இதுவரை சாட்சியம் சொல்லவில்லை.

அரசாங்க வக்கீல்: அவர் சாட்சியம் சொல்லவேண்டிய அவசியமில்லை.

தோட்டத்தில் கண்டெடுக்கப்பட்ட ரிவால்வர்தான் சங்கரலிங்கம் வாங்கி தாமுவிடம் கொடுத்து அவனால் காணாமல் அடிக்கப்பட்டது என்பது ஒன்றே போதும். முக்கியமாகத் தோட்டத்தில் கைப்பற்றிய ரிவால்வர்தான் கொலை செய்ய உபயோகப்பட்டது. என்பதுதான்

இப்பொழுது முக்கியம். பாக்கி விவரங்கள் இந்த ரிவால்வரின் முந்தைய கதையைத் தெரியப்படுத்தும்.

நீதிபதி: அரசாங்க வக்கீல் சொல்வதை ஆமோதிக்கிறேன். ஆனால், இந்த ரிவால்வரைத்தான் தான் வாங்கியவுடனே வேலைக்காரனிடம் கொடுத்தேன் என்று ஏன் சங்கரலிங்கம் சாட்சியம் சொல்லக்கூடாது?

அரசாங்க வக்கீல்: அது அவசியமில்லை.

உடனே மேஸன், "எதிர்தரப்பு சாட்சியாகச் சங்கரலிங்கத்தை நான் அழைத்துள்ளபடியால் என்மீது சங்கரலிங்கம் லட்ச ரூபாய்க்கு மான நஷ்ட வழக்குப் போட்டிருக்கிறார். அரசாங்கத் தரப்பிலே அவரும் சாட்சியாக விசாரிக்க அழைக்கப்பட்டிருந்தால் அவர் சாட்சியம் மிகவும் அவசியம் என்பது நிரூபிக்கப்பட்டிருக்கும். நானும் வேண்டுமென்றே சாட்சியம் சொல்ல அவரை அழைத்ததாகவும் ஆகாது. சங்கரலிங்கத்தின் சாட்சியம் தேவை இல்லை என்பதை நிரூபிப்பதற்காகத்தான் இந்த ஆரம்ப விசாரணைக்கே பெரிய அரசாங்க வக்கீல் ஆஜராயிருக்கிறார்.

நீதிபதி, புன்சிரிப்புடன் ஆனால் கோபத்துடன், "இருக்கலாம். நிச்சயமாக ரிவால்வரைச் சாட்சியத்தில் நிரூபிக்க வேண்டியதுதான். ஆனால், இந்த வழக்கில் அரசாங்க வக்கீல் சொல்லுகிறபடி கைப்பற்றப்பட்ட ரிவால்வர்தான் கொலை செய்ய உபயோகிக்கப்பட்டது என்பதை நிரூபித்தால் போதும். அதற்குமேல் கதையை வளர்த்திக்கொண்டு போனால் எதிரியை இந்த ரிவால்வருடன் சேர்க்கப் பிணைப்பு ஏற்படாது" என்று கூறினார்.

அரசாங்க வக்கீல்: பிணைப்பு ஏற்படும்படி நான் பார்த்துக்கொள்கிறேன். இதைச் சம்பந்தப்படுத்த ஒரு சாட்சியம் தனிப்பட இருக்கிறது.

நீதிபதி: அரசாங்க வக்கீல் சொல்வது சரிதான். அந்த ஆயுதத்தைச் சாட்சியமாக ஏற்றுக்கொள்கிறேன். அதற்குத் தக்க சாட்சியம் இன்னும் கொடுக்கலாம்.

அதற்கு அடுத்தபடியாகத் தோட்டக்காரன் முத்து சாட்சியாக விசாரிக்கப்பட்டான்.

அவன் தன்னை சங்கராபுரம் எஸ்டேட்டின் தோட்டக்காரன் என்றும், நாள்தோறும் இரவு பத்து மணி வரையில் தாமு இருப்பது வழக்கம் என்றும், அதன் பிறகுதான் கதவுகளை மூடுவதும் வெளிக்கேட்டை மூடுவதும் தன் வேலை என்றும் தெரிவித்தான். மேலும் தாமு அன்று இரவு சீக்கிரமாக வெளியே போனது தனக்குத் தெரியாது என்றும் தான் கொலை நடந்த இரவு பத்து மணிக்கு இரண்டு அல்லது மூன்று நிமிஷங்கள் முன்னதாகவே வெளிக்கேட்டைப் பூட்டிவிட்டதாகவும் அங்கு அப்பொழுது ஒரு காரையும் தான் பார்க்கவில்லை என்றும் பிறகு தன்னுடைய குடிசைக்குப் போய்ப் படுத்துத் தூங்கிவிட்டதாகவும் தெரிவித்தான்.

அவரையும் வக்கீல் மேஸன் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

பிறகு கார் டயர் நிபுணர் விசாரிக்கப்பட்டார்.

தான் போலீஸ் அதிகாரி நந்தகுமாரின் உத்தரவின் பேரில் எதிரியின் டயர் சுவடிகளை வார்ப்பு எடுத்ததாகவும் பிரேதம் கிடந்த இடத்தில் காணப்பட்ட கார் டயர் சுவடுகளையும் எடுத்ததாகவும் அவை இரண்டும் ஒற்றுமையாக இருந்ததாகவும் அவர் சாட்சியம் சொன்னார். அவற்றைச் சாட்சியப் பொருளாகவும் அவர் கோர்ட்டில் ஆஜர் செய்தார்.

வக்கீல் மேஸன் அவரையும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

அந்தச் சமயம் நீதிபதி அரசாங்கத் தரப்பு வக்கீலைப் பார்த்து இன்னும் எவ்வளவு சாட்சியங்கள் இருக்கிறார்கள் என்று கேட்டார்.

"இன்னும் ஒன்று அல்லது இரண்டுபேர்கள்தாம் இருப்பார்கள்" என்று அரசாங்க வக்கீல் கூறினார்.

பிறகு கோர்ட்டு இடைவேளைக்காகக் கலைந்தது.

அந்தச் சமயம் அர்ஜுன்சிங் மேஸனிடம் விரைந்துவந்து ஒரு சாட்சியை வெகு ஜாக்கிரதையாக சாட்சிகள் தங்கி இருக்கும் காவல் அறையில் போலீஸார் வைத்திருப்பதாகத் தெரிவித்தார்.

"அந்தச் சாட்சி ஆணா பெண்ணா?" என்று கேட்டார் வக்கீல்.

"ஆண்தான்."

"நிச்சயமாகவா?"

"நான் அவரை அசப்பில் பார்த்ததிலிருந்து அடையாளத்தைச் சொல்கிறேன். அந்த சாட்சியின் தலைமயிர் கருத்து சுருட்டையாக உள்ளது. நடுத்தர உயரம், கட்டுமஸ்தான திரேகம்..."

"சற்று இரு, இரு" என்று மேஸன் கூறினார்.

"எதற்கு, எதற்கு?" என்று வியப்புடன் கேட்டாள் உஷா.

பெரிமேஸன்: அவன்தான் பிரமிளாவுக்கு ரிவால்வரைக் கொடுத்தவன். அதனால்தான் போலீஸார் பெட்ரோல் பங்க்குகளிலெல்லாம் பிரமிளாவின் காரைப்பற்றியும், அவளுடைய காரிலிருந்த ஆளைப்பற்றியும் விசாரிக்கவே இல்லை. அவர்கள் முன்பாகவே அவனைக் கண்டுபிடித்து விட்டார்கள்."

அர்ஜுன்சிங்: அது சரியில்லை. காரே இருந்திருக்க நியாயமில்லை. உங்கள் வழக்கும் புஸ்வாணமாகத்தான் போகப் போகிறது. போலீஸ் தரப்பில் அவர்கள் மிகவும் சந்தோஷமாகக் காணப்படுகிறார்கள். இந்த வழக்கு பெரி மேஸனுக்குப் பெரும் தோல்வியாகப் போகிறது என்றும் அவர்கள் பேசிக்கொள்கிறார்கள்.

இதைக் கேட்ட மேஸன் சாவதானமாக, "எல்லாம் போகப்போகப் பார்ப்போம் அவசரப்படாதே. நடக்கிறபடி நடக்கட்டுமே" என்று சமாதானப்படுத்துபவர்போல் சொன்னார்.

13

கணவனைக் கொன்ற மனைவி
மரகதம் — பிரமிளா விடுதலை

இடைவேளைக்குப் பிறகு திரும்பவும் கோர்ட் தன் நடவடிக்கையைத் தொடங்கியது. அரசாங்கத் தரப்பு வக்கீல் மிகவும் உற்சாகத்துடன் மந்திரவாதி மாங்கொட்டையிலிருந்து மாங்கன்றை வரவழைப்பதுபோல், "நான் இப்பொழுது குமார் என்பவரைச் சாட்சியாக அழைக்க விரும்புகிறேன்" என்று கூறினார்.

சாட்சிகள் இருக்கும் அறைக்குள் போலீஸ் அதிகாரி ஒருவர் சென்று கதவைத் திறந்து அவரை அழைத்து வந்தார்.

மேஸன் பிரமிளாவை உற்று நோக்கி, "மிகவும் ஜாக்கிரதையாக இரு. அதிர்ச்சி ஏற்பட்டாலும் அதிர்ச்சி அடைந்துவிடாதே" என்று மெல்லிய குரலில் எச்சரித்தார்.

25 வயதுதான் ஆகியிருந்த ஓர் இளம் யுவன் சாட்சிக் கூண்டிற்குள் நடந்துவந்தான். பிரமிளாவின் கரங்கள் நடுங்கின; கால்களும் தள்ளாடின. மேஸன் அவளைத் தைரியப்படுத்தினார். "இந்த ஆள்தான்...இந்த ஆள்தான் எனக்கு ரிவால்வரைக் கொடுத்தது" என்று அவள் முணுமுணுத்தாள். "உஷ்! சப்தம் போடாதே. வாயை மூடு"

என்றார் மேஸன். அரசாங்க வக்கீலுக்கு இவை காதில் விழாமல் இல்லை. அவர் சாட்சிக் கூண்டிற்கு அருகே வந்து "குமார், சத்தியப் பிரமாணத்தை முதலில் செய்யுங்கள். உங்களுடைய விலாஸத்தையும் உங்கள் வேலையையும் தெரிவியுங்கள்" என்றார்.

பிறகு அரசாங்க வக்கீல் கேட்டார்: "மிஸ்டர் குமார், உங்களுடைய தொழில் என்ன!"

"நான் ஒரு லைசென்ஸ் பெற்ற தனிப்பட்ட துப்பறியும் நிபுணர்."

"உங்களுக்கு இம்மாதம் 9-ஆம் தேதியும் 10-ஆம் தேதியும் நடந்தவை தெரியுமா?"

"தெரியும்."

"அன்று உங்களுக்கு ஏதாவது வேலை இருந்ததா?"

"ஆமாம்."

"தங்களை வேலைக்கு அமர்த்திக்கொண்டவர் யார்?"

"ரத்னம் என்று தம்மைச் சொல்லிக்கொண்டவர். 37, 2-வது குறுக்குத் தெரு, சத்தியநகர் என்ற விலாஸத்தில் உள்ளவர் என்னை வேலைக்கு வைத்துக்கொண்டார்."

"அவர் உங்களுக்குத் தம்முடைய நம்பரைக் கொடுத்தாரா?"

"ஆமாம்."

அரசாங்கத் தரப்பு வக்கீல் மேஸன் பக்கம் திரும்பி சற்று வணக்கத்துடன் "கோர்ட்டார் அனுமதித்தால் நான் இந்த வழக்கைப்பற்றிய சில குழப்பமான எண்ணங்களைத் தவிர்ப்பதற்காக இந்தச் சாட்சியைச் சில கேள்விகள் கேட்க விரும்புகிறேன். இன்னும் சொல்லப்போனால் கொலை செய்யப்பட்ட ரிவால்வருக்கும் குற்றம் சாட்டப்பட்டிருப்பவருக்கும் உள்ள தொடர்பைப்பற்றிய சில செய்திகளை வெளிப்படுத்துவதற்காக உபயோகமாக இருக்கும் சில கேள்விகளைக் கேட்க விரும்புகிறேன். என்னுடைய இந்தக்

கோரிக்கையை மேஸன் அவர்களும் நீதிபதியும் அனுமதிப்பார்கள் என்று நம்புகிறேன்" என்றார்.

மேஸன் உடனே, "ஓ! கட்டாயமாக சில விஷயங்களைத் தெளிவுபடுத்துவதற்காக அரசாங்க வக்கீல் தாராளமாகக் கேள்விகள் கேட்கலாம்" என்றார்.

அரசாங்கத் தரப்பு வக்கீலுக்கு அது அதிர்ச்சியாக இருந்தது. தான் எழுப்பிய கோரிக்கையை மேஸன் மறுப்பார் என்றும் தான் மிகவும் சாமர்த்தியமாக அப்போது விவாதிக்கலாம் என்றும் எண்ணிக்கொண்டிருந்தவருக்குச் சேற்றிலே குதித்ததுபோல் ஆகிவிட்டது. அவர் சாட்சிப் பக்கம் திரும்பினார்.

"ரத்னம் உங்களை வேலைக்காக அமர்த்தினார் அல்லவா?"

"ஆமாம்."

"என்று ஆரம்பமாகியது தங்களுடைய வேலை?"

"10-ஆம் தேதி மாலை."

"ரத்னம் தங்களை என்ன செய்யுமாறு சொன்னார்."

உடனே மேஸன் குறுக்கிட்டு, "கோர்ட்டார் அனுமதித்தால் நான் அரசாங்க வக்கீலுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். காதிலே விழுந்த வெறும் சமாசாரங்களையெல்லாம் இந்தப் பூர்வாங்க விசாரணையில் ஏன் விசாரிக்கவேண்டும்?" என்று கேட்டார்.

"இல்லை இல்லை. இக்கேள்வி இந்த வழக்கிற்கு மிகவும் முக்கியமானது" என்றார் அரசாங்க வக்கீல்.

ஆனால் நீதிபதி தலையை அசைத்து, "இந்த வழக்கிற்கு இக்கேள்விகள் தேவையானவை என்பதை நீங்கள் நிரூபிக்காவிட்டால் நான் மேஸன் சொல்வதை ஆமோதிக்கிறேன்" என்றார்.

அரசாங்கத் தரப்பு வக்கீல்: "சரி ஐயா." (குமார் பக்கம் திரும்பி), "பிறகு நீங்கள் என்ன செய்தீர்கள்?"

குமார்: நான் ரத்னத்தினிடமிருந்து உத்தரவு வந்தவுடன் நேரே ஜம்புலிங்கம் வசித்து வரும் வீட்டிற்குச் சென்றேன்.

"அப்பொழுது உங்களுக்கு ஜம்புலிங்கமும் ரத்னமும் ஒருவரே என்பது தெரியுமா?"

"தெரியாது."

"பிறகு எப்பொழுது கண்டுபிடித்தீர்கள்?"

"சங்கராபுரம் எஸ்டேட்டில் கிடந்த பிணத்தை அடையாளம் கண்டுகொள்வதற்கு என்னைப் போலீஸார் அழைத்துப் போனபோதுதான் ரத்னமும் ஜம்புலிங்கமும் ஒருவரே என்பதை அறிந்துகொண்டேன்."

"சரி: நீங்கள் ஜம்புலிங்கம் வீட்டிற்குச் சென்று என்ன செய்தீர்கள்?"

"நான் ஜம்புலிங்கம் வீட்டிற்குச் சென்றேன். எனது காரை ஒரு மறைவான இடத்தில் நிறுத்திவிட்டுக் காத்திருந்தேன்."

"நீங்கள் எதை எதிர்பார்த்து அங்குக் காத்திருந்தீர்கள்?"

"நான் ஜம்புலிங்கம் வீட்டிற்கு வருபவர்களைக் கண்காணிக்க வேண்டியது. வருகிற காரின் நம்பர்களையும் வீட்டின் உள்ளே நுழையும் பெண்களின் அடையாளங்களையும் கண்டுபிடித்து உடனே அவைகளை ரத்னத்திற்கு டெலிபோன் செய்யவேண்டுமென்றும் நான் அங்கு நின்றிருந்தேன்"

"தங்களுக்கு முன்கூட்டியே எந்தக் காரைப்பற்றி யாவது, எந்த ஒரு குறிப்பிட்ட நபரைப்பற்றியாவது அடையாளம் தரப்பட்டிருந்ததா?"

"இல்லை."

"முதன்முதலில் நீங்கள் எப்பொழுது ரத்னத்திற்கு டெலிபோன் செய்தீர்கள்?"

"10-ஆம் தேதி அன்று மாலை."

"எந்தக் காரைப்பற்றி நீங்கள் அந்தச் சமயம் அடையாளம் தெரிவித்தீர்கள்?"

"குற்றம் சாட்டப்பட்டிருக்கும் பிரமிளாவினுடைய காரைப்பற்றி. அந்தக் காரினுடைய நம்பரையும் அவருடைய

அங்க அடையாளங்களைப்பற்றியும் விஸ்தாரமாக வருணித்துப் போன் செய்தேன்."

"அந்தப் போனை எங்கிருந்து செய்தீர்கள்?"

"என்னுடைய காரில் டெலிபோன் செய்யும் வசதி இருக்கிறது. என் காரிலிருந்து செய்தியை எனது காரியாலயத்திற்கு ஒலிபரப்ப முடியும். பிறகு அவர்கள் ரத்னத்திற்கு அதை டெலிபோன் மூலம் சொல்லிவிடுவார்கள். அதேபோல்தான் ரத்னம் சொல்லும் விஷயங்களையும் என் காரியாலயத்திலிருந்து எனக்கு ஒலிபரப்பி விடுவார்கள். பிரமிளா அந்த மாளிகைக்குள் சென்ற சில நிமிஷங்களில் நான் எனது செய்தியை ஒலிபரப்புவதை முடித்துக் கொண்டவுடன் ரத்னமே காரில் அங்கு வந்துவிட்டார். என்னையும் அவர் பின்தொடரச் செய்து சங்கராபுரம் எஸ்டேட் கேட் அருகே அழைத்துச் சென்றார். அந்த வழியாகத்தான் பிரமிளாவும் திரும்பி வரவேண்டுமென்றும் அவள் திரும்பி வந்தவுடன் அவள் அங்கிருந்து யாருக்கு டெலிபோன் செய்கிறாள் என்பதைக் கண்டு தனக்குச் சொல்லவேண்டுமென்றும் என்னிடம் ரத்னம் கேட்டுக் கொண்டார். எப்படியாவது அவளை அறிமுகப்படுத்திக் கொண்டு அவளுடன் நெருங்கிய சிநேகப்படுத்திக்கொண்டு காரியத்தைச் சாதிக்கவேண்டுமென்றும் என்னை அவர் கேட்டுக்கொண்டார். தற்காப்புக்காகக்கூட ரிவால்வர் என்னிடம் இல்லை என்று நான் சொன்னபொழுது அவர் தம் கையிலிருந்த ரிவால்வரை என்னிடம் கொடுத்து காரை நிறுத்தாமல் அவள் சென்றால், அவசியம் ஏற்பட்டால், அவள் காரிலிருக்கும் பின் டயரைச் சுட்டுவிட வேண்டுமென்றும் தன்னுடைய கார் டயர் வெடித்துவிட்டது என்றுதான் அவள் எண்ணிக்கொள்வாள் என்றும் கூறி என்னை வற்புறுத்தி என் கையில் ரிவால்வரைக் கொடுத்தார். அவர் அந்தச் சமயம் பார்க்கப் பரிதாபமாக இருந்தார். அதனால் அவரிடம் நான் எதுவும் வாதாடவில்லை. நான் பிரமிளாவைச் சந்தித்து அவளுடன் காரில் ஏறியபிறகு அவர்

என்னைப் பின்தொடர்ந்து வருவதாகவும் என்னிடம் சொன்னார். அவர் கொடுத்த ரிவால்வர் ஸ்மித் அண்டு வெல்ஸன் கம்பெனியாரின் 38 ரிவால்வர்.''

இப்பொழுது அரசாங்க வக்கீல் அவரை நோக்கி, '' நான் அந்த ரிவால்வரைக் காட்டுகிறேன். அதைத் தங்களால் அடையாளம் கண்டுகொள்ளமுடியுமா என்று சொல் லுங்கள் '' என்றார்.

அந்தச் சமயம் மேஸன் '' சற்று இருங்கள். சாட்சியை ஒரு முடிவுக்கு வரும்படியான கேள்வியைக் கேட்கக்கூடாது'' என்றார்.

உடனே நீதிபதி, '' அப்படியானால் நீங்கள் கேள்வி கேளுங்கள், நீங்கள் கேட்கவேண்டியதைக் கேளுங்கள்.'' என்றார்.

'' ரத்னம் ரிவால்வரைக் கொடுத்தபொழுது அதனுடைய நம்பரை நீங்கள் குறித்துக்கொண்டீர்களா?'' என்று மேஸன் கேட்டார்.

'' இல்லை ஐயா.''

'' நீங்கள் ரிவால்வரை மிகவும் கவனமாகவும் ஜாக்கிரதையாகவும் கவனித்தீர்களா?''

'' ஆமாம், நான் மிகவும் ஜாக்கிரதையாகக் கவனித்து எடுத்துக்கொண்டேன்.''

'' நீங்கள் அதைக் கவனித்தபொழுது அதில் குறிப்பிடத்தக்க ஏதாவது குறி இருந்ததா, இப்பொழுது அதை அடையாளம் கண்டு தெரிவிப்பதற்கு?''

'' இல்லை ஐயா. நான் எந்த அடையளத்தையும் கவனிக்கவில்லை.''

'' அப்படியென்றால் நான் இப்பொழுது அதைக் காட்டுகிறேன்: அதே ரிவால்வர்தான் இப்பொழுது நீங்கள் பார்க்கும் ரிவால்வர் என்று உறுதியாகச் சொல்லமுடியுமா?''

'' ஆமாம். பொதுத் தோற்றத்திலிருந்துதான் சொல்லலாம்.''

'' தனிப்பட்ட துப்பறியும் நிபுணரான நீங்கள் ரிவால்வர் விஷயத்தில் தெரிந்தவர்களாக இருப்பீர்கள் அல்லவா?''

'' பொதுவாக அப்படித்தான்.''

'' ஸ்மித் அண்டு வெல்ஸன் கம்பெனியார் ஆயிரக்கணக்கான ரிவால்வர்களை, ஒரே மாதிரியான அடையாளமுள்ள ரிவால்வர்களை விற்பனை செய்கிறார்கள் என்று உங்களுக்குத் தெரியுமல்லவா?''

'' ஆமாம் தெரியும்.''

'' நீங்கள் அந்தக் கடையிலே இதுபோன்ற ரிவால்வர்கள் வைக்கப்பட்டிருப்பதைப் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா?''

'' ஆமாம்.''

'' கொலை நடந்த அன்று நீங்கள் ரிவால்வரை எடுத்துச் சென்றீர்களா?''

'' இல்லை; எனக்கு ரத்னம்தான் கொடுத்தார்.''

'' நீங்கள் நிச்சயமாக இப்பொழுது சொல்லமுடியுமா? இங்கு சாட்சிப் பொருளாக இருக்கும் ரிவால்வர்தான் ரத்னம் அவர்கள் உங்களிடம் கொடுத்தது என்று?''

'' இரண்டும் ஒரேமாதிரியாகத்தான் இருக்கின்றன என்றுதான் என்னால் சொல்லமுடியும்.''

கோர்ட்டார் பக்கம் மேஸன் திரும்பி, '' என்னுடைய குறுக்கு விசாரணை முடிவடைந்துவிட்டது.''

உடனே நீதிபதி அரசாங்கத் தரப்பு வக்கீல்பக்கம் திரும்பி '' நீங்கள் கேள்விகள் கேட்கலாம் '' என்று கூறி மேஜைமீது கரங்களை ஊன்றிக்கொண்டு சுவாரசியமாகக் கவனிக்கலானார்.

அரசாங்கத் தரப்பு வக்கீல் குமாரை நோக்கி, '' கைப்பற்றப்பட்ட ரிவால்வருக்கும் உங்களிடம் கொடுக்கப்பட்ட ரிவால்வருக்கும் ஏதாவது வித்தியாசம் தெரிகிறதா?'' என்று கேட்டார்.

குமார், "இல்லை" என்று கூறினார்.

"பிறகு என்ன நடந்தது என்று சொல்லுங்கள்" என்றார் அரசாங்க வக்கீல்.

குமார் தொடர்ந்து சொன்னார்: "நன்றாக இருட்டி விட்டது. சாலையில் தொலைவில் கார் வரும் வெளிச்சம் தெரிந்ததும் நான் டார்ச் லைட்டை அடித்து காரின் முன்னால் சென்று அந்தக் காரை வழிமறித்து நிறுத்தினேன். அதை எதிரி ஓட்டி வந்தார். நான் என்னுடைய அடையாளக் கார்டை—துப்பறிபவர் என்னும் அடையாளத்தை—காட்டி, என்னுடைய கார் டயரில் காற்று இல்லாமல் போய் விட்டது என்றும் அவளுடைய காரில் ஏற்றிக்கொண்டு செல்லுமாறும் அவளைக் கேட்டுக்கொண்டேன். அவள் என்னை நம்பி தைரியமடைவதற்காக ரத்னம் கொடுத்த அந்த ரிவால்வரை நான் அவளிடம் கொடுத்தேன். வழியில் ஒரு பெட்ரோல் ஸ்டேஷனில் அவள் இறங்கினாள். அங்கிருந்து அவள் டெலிபோன் செய்து திரும்பி வருவதற்குள் டெலிபோன் பூத்துக்குப் பின்பக்கம் ஒளிந்துகொண்டேன். அவள் அர்ஜுன்சிங் என்னும் துப்பறியும் நபருக்கு டெலிபோன் செய்ததையும் கவனித்தேன். பிறகு பெரிமேஸனிடம் டெலிபோனில் அவள் பேசினாள். 'ரத்னம் ஒரு மிருகம் அவனை யாராகிலும் கொன்றுதான் ஆகவேண்டும்' என்று சொல்லி, மறுநாள் காலை பத்து மணிக்கு வக்கீலைச் சந்திப்பதாகவும் போனில் சொன்னாள். பிறகு அவள் டெலிபோன் பூத்திலிருந்து திரும்பி வருவதற்குள் நான் பின்தொடர்ந்து வந்து கொண்டிருந்த ரத்னத்தின் காரில் ஏறிக்கொண்டு எல்லா விஷயங்களையும் அவரிடம் தெரிவித்தேன். தன்னுடைய வேலை முடிந்துவிட்டதாகவும் ரிவால்வரைத் திருப்பித் தருமாறும் அவர் என்னைக் கேட்டார். நான் அந்த ரிவால்வரைப் பிரமிளாவிடம் கொடுத்துவிட்ட விஷயத்தைக் கூறி அவள் போனில் பேசியதையும் தெரிவித்தேன். அவளிடம் ரிவால்வர் இருப்பதால் அவள் தன்னைக் கொன்றுவிடுவாள் என்று ரத்னம் பயந்தார். ரிவால்வரை அவளிடம் கொடுக்க நேர்ந்த சூழ்நிலையை விளக்கி நான் அவளிடம்

ரிவால்வரைக் கொடுத்ததற்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டேன். பிறகு என் வேலை முடிந்துவிட்டபடியால் நான் என்னுடைய காரில் திரும்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்தேன்."

அரசாங்கத் தரப்பு வக்கீல்: அப்பொழுது உம்முடைய கட்சிக்காரர் ரத்னம் என்ன செய்துகொண்டிருந்தார்?

"அவர் தன்னுடைய கார் அருகே பெய்யும் மழையில் நின்றுகொண்டு இருந்தார்."

"அவர் கார் எங்கு இருந்தது?"

"சங்கராபுரம் எஸ்டேட்டு வெளிவாசல் கேட் அருகே இருந்தது"

"அந்தச் சமயம் கதவுகள் திறந்திருந்தனவா, மூடியிருந்தனவா?"

"கதவுகள் திறந்திருந்தன."

"அப்பொழுது என்ன மணி என்று உங்களுக்குத் தெரியுமா?"

"பத்து அடிப்பதற்கு 10 நிமிஷங்கள் இருக்கும்."

"அவ்வளவு கரெக்டாக மணி எப்படித் தெரியும் உங்களுக்கு?"

"நான் என்னுடைய கைக்கெடிகாரத்தைப் பார்த்தேன்."

"நீங்கள் பிரமிளாவிடம் ரிவால்வரைக் கொடுத்தீர்கள் அல்லவா?"

"ஆமாம்."

"சரி. நான் ஒரே ஒரு கேள்வியை மட்டும் உங்களை கேட்கிறேன். நீங்கள் ரிவால்வரைக் கொடுத்தபொழுது அதைப் பரிசோதனை செய்தீர்கள் அல்லவா?"

"ஆமாம் ஐயா."

"நீங்கள் என்ன செய்தீர்கள்?"

"நான் ரத்னத்திடம் கேட்டேன், ரிவால்வரில் அவர் ரவைகள் போட்டிருக்கிறரா என்று. அதில் பூராவும் நிரப்பப் பட்டிருந்தது. ஆறு குண்டுகள் அதில் இருந்தன."

'ஆறு குண்டுகளில் ஒன்றுகூட அந்தச் சமயம் வெடிக்கப் படவில்லை அல்லவா?"

"ஆமாம். அந்தச் சமயம் ஒன்றுகூட வெடிக்கப்பட வில்லை."

பிறகு அரசாங்கத் தரப்பு வக்கீல் மேஸன் பக்கம் திரும்பி " நீங்கள் இவரைக் குறுக்கு விசாரணை செய்யலாம்" என்றார்.

மேஸன் சாட்சியை ஒருமுறை மிகவும் நிதானமாகக் கவனித்துவிட்டு சாட்சிப் பொருளாக வைக்கப்பட்டிருக்கும் இடத்திலிருந்து 'ஜி' என்று மார்க் செய்யப்பட்ட ரிவால்வரை எடுத்துக் கொண்டுவந்து அவரிடம் காண்பித்து, "இதற்கும் இதேபோல் செய்யப்பட்டிருக்கும் மற்றொரு ரிவால்வருக்கும் ஒற்றுமை வேற்றுமை என்னென்ன?" என்று கேட்டார்.

"சொல்ல முடியவில்லை."

மேஸன் மறுபடியும் குமாரை நோக்கி, "இதுதான் உங்களிடம் ரத்னம் கொடுத்த ரிவால்வர் என்று நிச்சயமாக உறுதி கூறமுடியுமா?"

"இல்லை. என்னால் நிச்சயமாகச் சொல்லமுடியாது. ரத்னம் கொடுத்தது இதுபோன்று இருந்தது என்றுதான் என்னால் சொல்லமுடியும்."

"உம்மைப் பிரமிளாவின் நம்பிக்கைக்குப் பாத்திரராகும் படியாகத்தானே ரத்னம் நியமித்தார்?"

"ஆம். அவள் யார் யாருக்குப் போன் செய்கிறாள், அவள் போனில் என்ன பேசுகிறாள் என்பதை அறிவதற் காகத்தான் அமர்த்தப்பட்டேன்."

வக்கீல்: நீர் அவளிடம் உம்மை நம்பும்படி இனிமையாகக் குழைந்து பேசினீர்கள் அல்லவா?

குமார்: ஆமாம். நான் மிகவும் குழைந்து குழைந்து அவளிடம் பேசினேன்.

வக்கீல்: அந்த நம்பிக்கைக்குத் துரோகம் செய்யலாமா?

குமார்: நான் அவளுடன் பேசியதெல்லாம் என்னு டைய கட்சிக்காரருக்கு அவளிடமிருந்து விஷயத்தை அறிந்து சொல்வதற்காகத்தான்.

வக்கீல்: அதற்காக நீர் அவளுக்குப் போதை ஏற் படுத்திப் பொய் சொல்லத் தயாராய் இருந்திருக்கிறீர்கள்?

குமார்: எனக்கு ஒரு வேலை கொடுத்தார்கள். நான் எடுத்துக்கொண்ட வேலையை எந்தவிதத்திலாவது முடிப் பதற்குப் பலவித முறைகளைக் கையாள வேண்டித்தான் இருக்கிறது.

வக்கீல்: அவளிடம் காதல் புரியக்கூடத் தயாராய் இருந் தீர்களல்லவா?

குமார்: ஆமாம்.

வக்கீல்: பொய் சொல்வதற்கு?

குமார்: ஆமாம்.

வக்கீல்: உம் தொழிலில் அடிக்கடி பொய் சொல்ல வேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறீர்களா?

குமார்: ஆமாம்.

வக்கீல்: அதனால்தான் பணத்திற்காகவும் பொய் சொல்லத் தயாராய் இருக்கிறீர் அல்லவா?

குமார்: பணத்திற்காக அல்ல.

வக்கீல்: பின் எதற்காக?

"அவளைப்பற்றி அறிவதற்காக."

"பொய் சொல்லிப் பிழைப்பதுதான் உம் தொழிலா?"

"இல்லை, எனக்கு வேறு தொழில் இருக்கிறது."

"அந்தத்தொழில் மூலம்தான் பணம் சம்பாதிக்கிறீரா?"

"ஆமாம். அதுதான் என் பிழைப்பு."

"கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லும் அதிலிருந்துதான் நீர் பணம் சம்பாதிக்கிறீரா?"

"ஆமாம்."

"பணம் சம்பாதிக்கவும் நீர் பொய் சொல்லத் தயாரா?"

"நீங்கள் அப்படி வைத்துக்கொண்டால் அப்படியே இருக்கலாமே."

மேஸன் அத்துடன் சாட்சி விசாரணையை முடித்துக் கொண்டார்.

அரசாங்கத் தரப்பில் வக்கீல் வழக்கின் சாரத்தை இப் பொழுது எடுத்துச் சொன்னார்: "இந்த சாட்சி கொலை செய்யப்பட்ட அன்று இரவு 10 அடிக்கப் பத்து நிமிஷங்கள் முன்பு ரத்னத்தைப் பார்த்துப் பேசிவிட்டு வந்திருக்கிறார். அதற்குப் பிறகு எதிரி வசம் ரிவால்வர் இருந்திருக்கிறது. ரத்னம் இரவு 10 மணிக்குக் கொலை செய்யப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் சங்கராபுரம் எஸ்டேட் வெளிக் கதவு 10 மணிக்கு மூடப்பட்டுவிட்டதாகச் சாட்சியங்களிலிருந்து நன்ருகப் புலப்படுகிறது. எதிரியிடம் கொலை நடந்த மறுநாள் காலையில்கூட ரிவால்வர் இருந்திருக்கிறது. மரகதம் என்ற ரத்னத்தின் மனைவியுடன் இரவு அவள் வீட்டிலேயே எதிரி இருந்திருக்கிருள். மறுநாள் காலை எதிரி மரகதத்திடம் ரிவால்வரைக் காட்டும்பொழுது அதில் ஒரு தோட்டா சுடப் பட்டிருப்பது தெரிந்தது. அதனுல் இந்த முக்கியமான சூழ்நிலையிலிருந்து இது அனுமானிக்கப்பட்ட சாட்சியமா கிறது. சந்தர்ப்ப சூழ்நிலை சாட்சியமாக இவை அமைகிறது. இந்த சந்தர்ப்பத்தினுல் எதிரி, ரத்னம் தன்னைப் பின் தொடர்ந்து வருவதைக் கண்டுகொண்டிருக்கிருர். அதனுல் அவள் ரத்னத்தைப் பின்தொடர்ந்து சங்கராபுரம் எஸ்டேட் டுக்குள் வந்திருக்கவேண்டும். துப்பறியும் நிபுணர் குமார் ரத்னத்தைச் சங்கராபுரம் எஸ்டேட் அருகே விட்டுச் சென்றதும் எதிரி ரத்னத்தை இந்த எஸ்டேட்டுக்குள் பின்தொடர்ந்து கொலை செய்த உடனேயே அங்கிருந்து காரில் திரும்பியிருக்கவேண்டும். இவை யாவும் இரவு

10 மணிக்குள், எஸ்டேட் கதவு பூட்டப்படுவதற்கு முன்பு, நடந்திருக்கவேண்டும். அந்த நேரத்தில் ரிவால்வர் எதிரி வசம்தான் இருந்திருக்கிறது. இவற்றை மறுக்கமுடியாது. மறுத்தும் அவர் கூறமுடியாது இவை யாவும் நிச்சயமாக நடைபெற்ற உண்மை. அதிலிருந்து எதிரிதான் கொலையாளி என்பதை இவை பறை சாற்றுகின்றன." இவ்வாறு சொல்லி விட்டு மிகவும் கம்பீரமாக அரசாங்கத் தரப்பு வக்கீல் தம் இடத்தில் வந்தமர்ந்தார்.

மேஸன் எழுந்து, "இந்த விசாரணையில் எதிரி இதில் சம்பந்தப்பட்டவளா, அதற்குச் சாட்சியம் இருக்கிறதா என் பதைத்தான் ஆராயவேண்டும். ஆனுல் அரசாங்க வக்கீல் கடைசி சாட்சியான குமாரை விசாரிக்காமல் இருந்திருந்தால் இந்த வழக்கை மேல் கோர்ட் விசாரணைக்கு அனுப்பவேண் டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கும். அந்தக் கடைசி சாட்சியை விசாரித்து இந்த வழக்கில் எதிரி குற்றவாளியல்ல என்பதை நிச்சயமாக முடிவு செய்துவிட வேண்டிய நிலையை ஏற்படுத்தி விட்டார் அரசாங்க வக்கீல். மற்ற சாட்சிகள் எதிரியை வழக்கில் சம்பந்தப்படுத்தி சாட்சியம் சொல்லியிருந்தாலும் இந்தக் கடைசி சாட்சி வழக்கின் போக்கையே மாற்றிவிட் டார்" என்ருர்.

இதைக் கேட்ட அரசாங்கத் தரப்பு வக்கீல், "இதுதான் உங்களுடைய முடிவான வாதமா?"

மேஸன்: ஆமாம்.

அரசாங்க வக்கீல்: அதெப்படி கடைசி சாட்சி வழக்கை மாற்றிவிட்டார் என்று சொல்லமுடியும்? அதற்கு ஆதாரமானவற்றை நான் கேட்கத் தயாராய் இருக் கிறேன்.

மேஸன்: "வாதம் மிகவும் சுலபமானது. குமார்—கடைசி சாட்சி—கொலை செய்ய உபயோகப்படுத்தப்பட்ட ரிவால்வரை தன் வசத்தில் வைத்து இருந்திருக்கிருர். அவர் தான் கடைசியாகக் கொலை செய்யப்பட்டவரை உயிரோடு

பார்த்திருக்கிறார். அவருடன்கூட கொலை செய்யப்படுவதற்குச் சில நிமிஷங்கள் முன் வரையிலும் அவர் இருந்திருக்கிறார். இந்தக் காரணங்களால் குமார்தான் குற்றவாளியாக இருக்கமுடியும் என்பதை நிச்சயமாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவரே கொலை செய்யப்பட்டவரை கடைசியில் தான் பார்த்ததாகவும் பிரமிளா வசம் ரிவால்வரைத் தான் கொடுத்ததாகவும் ஒப்புக்கொள்கிறார். அரசாங்க வக்கீல் கேள்விகளைக் கேட்டு சாட்சியை விசாரித்த விதமும் ரிவால்வரைப்பற்றியே அதிகமாகக் கேள்விகளைக் கேட்டதிலிருந்தும் நேரடியாக தைரியமாக அந்தச் சாட்சியை 'நீ தான் இந்தக் கொலையைச் செய்தாயா? அல்லது இந்தக் கொலையில் உனக்கும் சம்பந்தம் உண்டா?' என்று கேட்காததிலிருந்தும் கோர்ட்டார் அனுமானித்து முடிவு செய்ய வேண்டிய நிலை ஏற்படுகிறது'' என்று கூறி மேஸன் உட்கார்ந்துவிட்டார்.

அரசாங்க வக்கீல் முகத்தில் ரத்தம் கொதிக்கத் துள்ளி எழுந்து, "இந்தமாதிரி அபத்தமான வாதத்தை நான் இதற்குமுன் கேட்டதேயில்லை. இது ஒரு விளையாட்டுத்தனமான சவால். அதனால் கோர்ட்டார் அனுமதித்தால் கடைசி சாட்சியை நான் கேட்க விட்டுப்போன அதே கேள்வியைக் கேட்டுவிடுகிறேன் நான் பயந்துபோய் கேட்காமல் விடவில்லை. என்னுடைய வழக்கு மிகத் தெளிவானது என்பதை நிருபித்துவிடுகிறேன்'' என்றார்.

மேஸன் மீண்டும் அந்தச் சாட்சியை விசாரிப்பதற்குச் சம்பதம் தெரிவித்ததால் குமார் மீண்டும் சாட்சிக் கூண்டில் ஏற்றப்பட்டார்.

அரசாங்க வக்கீல்: நீர் ரத்னம் எனப்படும் ஜம்புலிங்கத்தைக் கொலை செய்தீரா?

குமார்: இல்லை.

அரசாங்க வக்கீல் இந்தக் கேள்வியை முடித்துக்கொண்டதும் மேஸன் சாட்சியை நோக்கி, "உம்மை ரத்னம் முதலில் எப்பொழுது அமர்த்திக்கொண்டார்?'' என்று கேட்டார்.

அரசாங்க வக்கீல் இந்தக் கேள்வியை எதிர்த்தார். "இது ஏற்கனவே கேட்கப்பட்டு பதில் சொல்லப்பட்ட கேள்வி."

நீதிபதியும், "ஆமாம்; நான் அது சரியல்ல என்று நினைக்கிறேன். மேஸன் அவர்களே! சாட்சியங்களிலிருந்து ரத்னம் அவரை 9-ஆம் தேதி அன்று வேலைக்கு அமர்த்தியதாகத் தெரிகிறதே'' என்று கூறினார்.

மேஸன்: இந்தக் கேள்வி ரத்னம் முதன்முதலில் எப்பொழுது குமாரை வேலைக்கு அமர்த்தினார் என்பதாகும்.

"இந்தக் கேள்விதான் ஏற்கனவே கேட்கப்பட்டு பதில் சொல்லப்பட்டுவிட்டதே'' என்று உரத்த குரலில் அரசாங்க வக்கீல் சொன்னார். மீண்டும் "அதுதான் சரி'' என்றார் நீதிபதி

சாட்சியின் முகத்தைக் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்த வக்கீல் மேஸன், "சரி நான் இந்தக் கேள்வியை வேறுவிதமாகக் கேட்கிறேன். 9-ஆம் தேதிக்கு முன்பு எப்போதாவது ரத்னம் தங்களை வேலைக்கு அமர்த்திக்கொண்டாரா?'' என்று கேட்டார்.

அதற்கு அரசாங்க வக்கீல் எழுந்து, "நான் இதை ஆட்சேபிக்கிறேன். இந்த வழக்கிற்குச் சம்பந்தம் இல்லாத கேள்வி இது'' என்றார்.

மேஸன்: இந்தக் கேள்வி, சாட்சி இந்தக் கொலை சம்பந்தமாக அதிக அக்கரைகொண்டு ஒருதரப்பாகச் சாட்சியம் சொன்னதால் அதை ருசுப்படுத்தக் கேட்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

நீதிபதியும் அந்தக் கேள்வியை அனுமதித்தார்.

"சாட்சி ஒருதரப்பு அக்கரையுடன் ஒருதரப்பாகச் சாட்சியம் சொன்னார் என்பதை நிர்ணயிக்கவேண்டி இருக்கிறது. ஒரு விஷயமும் இல்லாமல் தெளிவாகச் சொன்னால் ரத்னம் இந்தத் தனிப்பட்ட துப்பறியும் நிபுணரை எப்படி நியமித்தார் என்பதைப்பற்றி கோர்ட்டார் கேட்க ஆவலாய் இருப்பதால் இந்தக் கேள்வியை அனுமதிக்க நேருகிறது''

என்ருர் மேஸன். "பதில் சொல்லுங்கள்" என்று கோர்ட்டாரும் கட்டளை இட்டனர்.

குமார் சொன்ஞர்: இரண்டரை அல்லது மூன்று வருஷங்களுக்கு முன்பு ரத்னம் என்னை முதலில் வேலைக்கு நியமித்தார்.

அரசாங்க வக்கில் ஆச்சரியத்துடனும் வியப்புடனும் "என்ன?" என்று கூவினர்.

குமார்: என்னிடம் சரியான தேதி இல்லை. ஆனல் சுமார் 2½ அல்லது மூன்று வருஷங்களுக்கு முன்பு இருக்கலாம்.

"சில கைரேகை ஆராய்ச்சிகள் சம்பந்தமாக ரத்னத்தால் நீர் நியமிக்கப்பட்டீர்கள் அல்லவா?" என்று மேஸன் கேட்டார்.

"ஆமாம்: ரத்னம் என்னிடம் சில கைரேகைகளையும் மற்றும் ஒரு பத்துவிதக் கைரேகைகளையும் கொடுத்து என்னை ஒப்பிட்டுச் சரிபார்க்கச் சொன்ஞர். அவை ஒற்றுமையாகவும் சரியாகவும் இருந்தன. ஆனல், அது யாருடைய கைரேகைகள் என்பது எனக்குத் தெரியாது. அவை எங்கிருந்து வந்தன என்பதும் எனக்குத் தெரியாது. அவை போலீஸாரால் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கப் பிரசுரம் செய்யப்பட்ட தாள்களிலிருந்து அடையாளம் தெரியாமல் வெளிப்பட்டவை. நான் அவைகளைப்பற்றிச் சந்தேகப்படாமல் அவை யாருடையவை என்று கண்டுகொள்ளப் பிரயத்தனம் செய்யவில்லை நான் அவற்றைத் திரும்பவும் ரத்னத்திடம் கொடுத்துவிட்டேன்."

மேஸன்: அதிலிருந்து போலீஸாரால் தேடப்பட்ட ஒரு நபரை ரத்னம் கண்டுபிடித்துவிட்டார் என்று நீர் நிர்ணயித்துக் கொண்டீரோ?

குமார்: அப்படித்தான் நான் சந்தேகப்பட்டேன்.

மேஸன்: அந்த ஆளை ரத்னம் போலீஸாரிடம் பிடித்துக் கொடுக்கவில்லையே?

"கொடுக்கவில்லை."

"இதிலிருந்து அது மிரட்டிப் பணம் பறிக்கச் செய்த ஒரு வேலை என்பது உமக்குத் தெரிந்ததா?"

"நான் அதுமாதிரி நினைக்கவில்லை. ஆனல், ஒருவேளை அப்படியும் இருந்திருக்கலாம் என்று சந்தேகப்பட்டேன்."

"அவை காளிமுத்துவின் கைரேகை என்பதை நீர் அறிந்துகொண்டீரோ?"

"ஆமாம்."

"காளிமுத்து போலீஸாரால் நீண்ட நாட்களாகத் தேடப்பட்டவர் என்பது உமக்குத் தெரியுமா?"

"ஆமாம்."

"அதனல் நீர் அடிக்கடி ரத்னத்தைப் பயமுறுத்திப் பணம் பறித்து வந்தீரா?"

"இல்லை, இல்லை. இது சுத்தமான பொய்யாகும்; நான் வேலை செய்வதற்கு மட்டுமே பணம் வாங்கினேனேயொழிய வேறு அதிகமாக வாங்கவில்லை"

"எவ்வளவு பணம் வாங்கியிருப்பீர்கள்? ஐந்தாயிரமா? அல்லது பத்தாயிரமா? அல்லது இருபதினயிரமா? அல்லது ஐம்பதாயிரமா? எவ்வளவு பணம் வாங்கியிருப்பீர்கள்?"

குமார், "ஞாபகம் இல்லை, ஞாபகம் இல்லை" என்று தொடர்ந்து பதில் சொன்ஞர்.

மேஸன், "உம்முடைய சாட்சியத்திலிருந்து நீர் பொய் சொல்லக்கூடியவர் என்றும், பயமுறுத்திப் பணம் பறிக்கக் கூடியவர் என்றும், உம் கையில் கொலை ஆயுதம் இருந்ததிலிருந்து கோர்ட் உம்மைப்பற்றி ஒருவிதமான முடிவுக்கு வர நேரிடும்" என்றும் கூறி குறுக்கு விசாரணையை முடித்துக் கொண்டார்.

உடனே நீதிபதி மேஸனை உற்றுநோக்கி, "நீங்கள் கைரேகைகளைப்பற்றி இவ்வளவு கேள்விகள் கேட்டதிலிருந்து

ஏதோ இந்த வழக்கு சம்பந்தமாக ஒருவருக்கும் தெரியாத சில ரகசியங்களை நீங்கள் சேகரித்து வைத்திருக்கிறீர்கள் என்பது தெரிகிறது. உங்கள் மனத்தில் உள்ளதைக் கோர்ட்டுக்கும் தெரிவித்தால் கோர்ட்டாருக்கும் சிரத்தை உண்டாகும்'' என்று கூறினர்.

அரசாங்க வக்கீல்: இது வெறும் வெத்துவேட்டு. கல்லை அடித்துப் பார்ப்போம். மாங்காய் விழுந்தால் விழுகிறது என்ற முறையில் தொடுக்கப்பட்ட கேள்வியாகும்.

நீதிபதி: வெத்துவேட்டும் வெடித்துவிடும்போல் இருக்கிறது.

மேஸன்: இதைத் தெளிவுபடுத்த ஒரே ஒரு சாட்சியைத் திரும்பவும் குறுக்கு விசாரணை செய்தால் போதும் என்று நான் நம்புகிறேன்.

அரசாங்க வக்கீல்: நான் அதை ஆட்சேபிக்கிறேன். வழக்கு முடிவடைந்துவிட்டது. அந்த சாட்சியை எதிர் தரப்பில் விசாரிக்கலாம்.

நீதிபதி: ஏன்? அரசாங்கத் தரப்பு வக்கீலாகிய நீங்கள் குமாரைக் வழக்கு முடிவடைந்தபிறகும் திரும்ப விசாரிக்கவில்லையா? நீதி ஸ்தலம் என்பது வக்கீல்கள் புத்திசாலித்தனமாக வாதாடும் இடம் மட்டுமில்லை; உண்மையைக் கண்டு பிடிக்கவும் பொய்யாகக் குற்றம் சாட்டப்படுவதை ஆராய்ந்துத் தடுக்கும் இடமுமாகும்.

மேஸன்: சாட்சியாகக் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் பிரமிளாவுக்கு அவளுடைய புத்தகக் கம்பெனியிலிருந்து அனுப்பப்பட்டிருந்த 'யார் யாரை அவள் பார்க்க வேண்டுமென்ற' பட்டியலில் ஜம்புலிங்கத்தின் பெயர் கடைசியில் டைப் செய்யப்பட்டிருக்கிறது. அந்த பட்டியலைப் பார்த்தால் கோர்ட்டார் நினைக்கிறபடி சில ரகசியங்களை என்னால் வெளிப்படுத்தமுடியும் என்று எண்ணுகிறேன்.

கோர்ட்டார் அப்படியே அனுமதிக்க அர்ஜுன்சிங்கையும், உஷாதேவியையும் மேஸன் அழைத்து அந்த டைப் அடித்த பட்டியலைக் கவனமாகப் பார்க்கும்படி சொன்னர். அந்த பட்டியலில் கடைசியில் டைப் அடிக்கப்பட்ட பெயர் பாக்கிப் பெயர்கள் மாதிரி அதே டைப்ரைட்டரால் அடிக்கப்பட்டிருக்கிறதா என்று கவனித்துத் தனக்கு சமிக்ஞை செய்யும்படியும் தெரிவித்தார். பிறகு நீதிபதியை நோக்கி, ''இந்த வழக்கில் சில அம்சங்களைக் கோர்ட்டார் கவனிக்கவேண்டும். அதனுல் ஒரு சாட்சியை மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கவேண்டும்'' என்ருர்.

அரசாங்க வக்கீல் அதற்கு ஆட்சேபணை தெரிவித்தார். ''இந்த வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சியங்களைப் பார்த்தால் எதிரி பிரமிளாதான் குற்றவாளி என்பது நன்ருகப் புலனுகிவிட்டது'' என்று கூறினர்.

மேஸன், ''இந்த வழக்கில் முடிவு செய்யவேண்டிய அம்சங்கள் பல இருக்கின்றன. குமாரே கொலை செய்து விட்டு ரிவால்வரை எதிரியிடம் கொடுத்திருக்கலாமே'' என்ருர்.

அந்தச் சமயம் தொலைவிலிருந்து உஷா சமிக்ஞை ஒன்று செய்ததை மேஸன் கவனித்துக்கொண்டார்.

அரசாங்க வக்கீல்: எதிர்தரப்பு வக்கீல் என்ன செய்ய எத்தனிக்கிருர் என்பது எனக்கு விளங்கிவிட்டது. வழக்கின் முதல் விசாரணையில் எதிர்தரப்பு சாட்சியத்தை விசாரிக்க எனக்கு இஷ்டமில்லை. மேலும் சங்கரலிங்கத்தைப் பயமுறுத்தி அவருக்கு மானநஷ்டம் விளைவிக்க வேண்டுமென்பது எதிர்தரப்பு வக்கீலின் எண்ணம். இது சங்கரலிங்கம் அவர்மீது போடப்பட்டிருக்கும் வழக்கு விசாரணைக்கு வரும்பொழுது தெரியும்.

நீதிபதி: இருக்கலாம். இம்மாதிரி இக்கட்டான சந்தர்ப்பங்களில் கோர்ட் சில விஷயங்களை ஏற்றுக்கொள்ளும். பிராஸிக்யூஷன் வாதம் சரியாக இருக்கலாம். ஆனல் எதிர்

தரப்பில் சங்கரலிங்கத்தைச் சாட்சியாக சில கேள்விகளைக் கேட்க ஊக்கமும் ஆசையும் இருக்கிறது என்பது புலப் படுகிறது.

மேஸன்: நான் சங்கரலிங்கத்தை அழைத்துச் சில கேள்விகள் கேட்க விரும்புகிறேன். கோர்ட்டார் அனுமதிப் பார்கள் என்று நினைக்கிறேன்.

நீதிபதியும் அதற்குத் தலையசைத்தார்.

அரசாங்க வக்கீல் அந்தச் சமயம் எழுந்து, "சங்கரலிங்கத்தை எதிர்தரப்பு வக்கீல் கொலை வழக்குக்கு நேரிடையாகச் சம்பந்தமற்ற கேள்விகளைக் கேட்கக்கூடாது. அப்படிப் பட்ட கேள்விகளை நான் நிச்சயமாக ஆட்சேபிப்பேன். மேலும் எதிர்தரப்பு வக்கீல் சாட்சியை அலசி ஏதாவது கிடைக்காதா என்று பார்க்கவும், தான் பெயர் வாங்கவும் முயல்வதை நான் அனுமதிக்கமாட்டேன். அவர் புகழ் வாங்குவதற்காகத்தான் இவ்வாறு முயற்சி செய்கிறார்.

நீதிபதி: கோர்ட்டார் அதுமாதிரி செய்ய ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்கள்.

மேஸன்: அதேபோல் இந்தச் சாட்சி முக்கியமான சாட்சியானதால் நான் கேள்விகளைக் குறுக்கு விசாரணை மாதிரி கேட்க அனுமதிக்கவேண்டும்.

நீதிபதி அதை ஆமோதித்து அனுமதித்தார் சங்கரலிங்கம் சாட்சிக் கூண்டில் ஏறிப் பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

மேஸன்: எவ்வளவு காலமாக இந்த எஸ்டேட் தங்களிடம் இருக்கிறது?

அரசாங்க வக்கீல் துள்ளி எழுந்து, "இந்தக் கேள்வியை நான் ஆட்சேபிக்கிறேன்" என்றார். அவருடைய ஆட்சேபணையை நீதிபதி தள்ளிவிட்டார்.

சங்கரலிங்கம்: பதினேழு ஆண்டுகளாக எஸ்டேட் என்னிடம் இருக்கிறது.

மேஸன்: உங்கள் தோட்டத்தில் காவல்காரனாகவும் வேலைக்காரனாகவும் இருக்கும் முத்துதான் போலீஸாரால் தேடப்பட்ட காளிமுத்து என்பவர் என்று உங்களுக்கு எவ்வளவு காலமாகத் தெரியும்?

இந்தக் கேள்வியைக் கேட்டவுடன் சங்கரலிங்கத்தின் முகம் கறுத்துவிட்டது. இதை எதிர்ப்பதற்கு முனைந்த அரசாங்க வக்கீல் சங்கரலிங்கத்தின் முகத்தைப் பார்த்தவுடனேயே இடத்தில் அமர்ந்துவிட்டார். பிறகு சங்கரலிங்கம் நடுங்குவதைப் பார்த்து மீண்டும் கேள்வியை ஆட்சேபித்தார். ஆனால் நீதிபதி அதை ஏற்காமல் தள்ளிவிட்டார். மேஸன் மீண்டும், "இந்தக் கேள்வி தங்களுக்குப் புரிகிறதா?"

சங்கரலிங்கம்: புரிகிறது.

மேஸன்: நீங்கள் அதற்குப் பதில் சொல்லப்போகிறீர்களா?

சங்கரலிங்கம் (பெருமூச்சு விட்டு): சில ஆண்டுகளாக எனக்குத் தெரியும்.

மேஸன்: முத்து என்பவர் உங்களுக்கு என்ன உறவு? போலீஸாரால் தேடப்பட்டவர் என்று தெரிந்தும் நீங்கள் அவருக்கு அடைக்கலம் கொடுத்து இருந்தீர்கள் அல்லவா?

"ஆமாம். அவர்—முத்து என் சகோதரர் என்பதைத் தெரிந்துகொண்டதால் அடைக்கலம் கொடுத்தேன்."

"அந்த உண்மையைத் தெரிந்துகொண்ட இறந்துபோன ஜம்புலிங்கம் அதை வைத்துக்கொண்டு உங்களிடம் பணம் பறித்தார் அல்லவா?"

"ஆமாம்."

அரசாங்க வக்கீல் அதை ஆட்சேபிக்க முயன்றபொழுது, "நீங்கள் இனி ஆட்சேபிக்கக்கூடாது. எதிர்தரப்பு வக்கீல் கேட்கும் கேள்விகளிலிருந்து இந்த வழக்கின் உண்மையான நிலை இப்பொழுதுதான் தெரியவருகிறது. குமார் என்னும் துப்பறிபவரிடம் கொடுக்கப்பட்ட கைரேகை காளிமுத்துவின்

னுடையதுதான் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?" என்றார் நீதிபதி.

"ஆமாம் கனம் நீதிபதி அவர்களே" என்றார் மேஸன்

சாட்சிக் கூண்டிலிருந்த சங்கரலிங்கம் சொன்னார்: "கனம் நீதிபதி அவர்களே, நானே எல்லா உண்மைகளையும் இப்பொழுது சொல்லிவிடுகிறேன். காளிமுத்து என்பவர் தான் முத்து என்னும் பெயரில் தோட்டக்காரராக இருப்பவர். அவர்தான் ஜம்புலிங்கத்தின் தகப்பனாரோடு ஆயுள் தண்டனை அடைந்தவர். என் பெயர்கூட சின்னமுத்து என்பதுதான். பிறகுதான் சங்கரலிங்கம் என்று மாற்றி வைத்துக்கொண்டேன். 'தினப் புளுகன்' என்னும் பத்திரிகையில் இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பு வந்த செய்தி ஒன்றைப் படித்த ஜம்புலிங்கத்தின் தகப்பனாருக்கு இந்த உண்மை தெரிந்திருக்கவேண்டும். அதில் பிரசுரமான புகைப் படத்தையும் அது சம்பந்தமான கட்டுரையையும் நாங்கள், எவ்வளவோ பிரயத்தனப்பட்டும் பிரசுரமாகாமல் தடுக்க முடியவில்லை. 'சங்கரலிங்கமும் அவருடைய தோட்டக்காரர் முத்துவும் அழகான கட்டடங்கள் கட்டுவதிலும், தோட்டங்கள் அமைப்பதிலும் திறமைசாலிகள். மேலும் பல கட்டடங்கள் கட்டுவதற்காக ஏற்பாடுகள் செய்கிறார்கள். மிக ஊக்கத்துடன் அவர்கள் பணியாற்றுகிறார்கள்' என்று அந்தப் பத்திரிகைகளில் சுருக்கமாக எங்களைப்பற்றி பிரசுரிக்கப்பட்டது. பிறகுதான் ஜம்புலிங்கத்தின் தந்தை நாகலிங்கம் எங்களிடமிருந்து பயமுறுத்திப் பணம் பறிக்க ஆரம்பித்தார். அதைத் தடுக்க என்னால் எதுவும் செய்ய முடியாமல் போய்விட்டது. என்னுடைய சகோதரருடைய கை ரேகை போலீஸ் கை ரேகை பதிவு ரிகார்டில் இருக்கிறது. என் சகோதரரைத் தோட்டக்காரர்மாதிரி என்னுடைய எஸ்டேட்டில் வைத்திருந்தபடியால் அவரால் வெளிவுலகத்திலிருந்து தனித்து வாழ முடிந்தது. இந்த ரகசியம் கொலையுண்ட ஜம்புலிங்கத்திற்கு அவன் தந்தை நாகலிங்கத்தின் மூலமாகத் தெரிந்தது. அதனால் ஜம்புலிங்கத்திற்கும் நான் அடிக்கடி பணம் கொடுக்க நேர்ந்தது. ஜம்புலிங்கம்

என்னிடம் அடிக்கடி பணம் பெற்றது அவருடைய தகப்பனாருக்குக்கூட தெரியாமல் இருந்திருக்கலாம். கொலை நடந்த அன்று நான் பெங்களூரில் ஒரு பிரபல ஓட்டலில் தங்கி இருந்தேன். பெங்களூரில்தான் ஜம்புலிங்கத்தின் தந்தை இறந்த செய்தி எனக்குத் தெரிய வந்தது......"

மேஸன்: நாகலிங்கம் இறந்ததுபோல் அவர் மகன் ஜம்புலிங்கத்திற்கும் அதே கதி நேர்ந்துவிட்டால் உங்களுடைய ரகசியம் காப்பாற்றப்படும் என்று நினைத்தீர்கள் அல்லவா?

சங்கரலிங்கம்: அப்படி இல்லவே இல்லை. தன் தகப்பனார் இறந்ததற்கு ஆகும் செலவிற்காகவும் தன் செலவிற்காகவும் ஜம்புலிங்கம் என்னை அதிகப் பணம் கேட்டாராம். இந்தச் செய்தி என்னுடைய எஸ்டேட்டிலிருந்து டெலிபோன் மூலம் எனக்கு எட்டியது. ஆனால், நானோ, என் சகோதரரோ ஜம்புலிங்கத்தைக் கொலை செய்யவில்லை. என்னுடைய சகோதரர் டெலிபோனில் பேசினார். நான் பெங்களூரில் இருப்பதாக மற்றவர் எண்ணச் செய்து உடனடியாக சங்கராபுரம் எஸ்டேட்டுக்கு வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். நேரிடையாக வந்தால் எல்லாவற்றையும் சொல்வதாகக் கூறினார். அதேபோல் நான் தங்கியிருந்த பெங்களூர் ஹோட்டலில் இரவுச் சாப்பாட்டை அங்கேயே சாப்பிட்டுவிட்டு இரவுப் படுக்கப் போகும்பொழுது ஒருவருக்கும் தெரியாமல் காரை வேகமாக ஓட்டிக்கொண்டு இரவு 11 மணிக்குப் பிறகு என்னுடைய எஸ்டேட்டுக்கு வந்து சேர்ந்தேன். அந்நேரத்திலும் என்னுடைய சகோதரருடன் ஜம்புலிங்கம் பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்தேன். மிகவும் அநியாயமாக மிகப் பெரும் தொகை ஒன்றை என் சகோதரரிடம் அவர் கேட்டுக்கொண்டிருப்பது எனக்குத் தெரிந்தது. அந்தத் தொகையைக் கொடுத்தால் அத்துடன் என்னை விட்டுவிடுவதாகவும் அவர் கூறினார். தன் தந்தை இறந்துவிட்டபடியால் இனி இரண்டு பேர் பணத்திற்குத் தொந்தரவு செய்யும் தொல்லை இருக்காது என்றார். மேலும் தன்னை ஒரு பெண் தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும்

அவளிடமிருந்து தப்புவதற்கு நான் ஒரு பொய் சாட்சியம் சொல்லவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். 'முடியாது' என்று கண்டிப்பாக நான் மறுத்துவிட்டேன். 'பணம் வேண்டுமானாலும் தருகிறேன், பொய் சாட்சியம் சொல்வது என்பது என்னால் முடியாது' என்று மறுத்துவிட்டேன். நாற்பதாயிரம் ரூபாய் கொடுத்தால் இந்த நாட்டைவிட்டே ஓடிப்போய்விடுவதாகவும் கொலை வழக்கு ஒன்றில் தனக்குப் பொய் சாட்சி சொல்லவேண்டுமென்றும் மீண்டும் வற்புறுத்தினார். நான் கண்டிப்பாக முடியாது என்று கூறிவிட்டேன். தன்னைத் தொடர்ந்து வரும் பெண் ஒரு வக்கீலிடம் தன்னைப் பற்றிய உண்மைகளைச் சொல்லி இருப்பதாகவும் அவள் அந்த வக்கீலை மீண்டும் பார்க்கப்போகும் முன்பாக அவள் அப்படிச் செய்யாமலிருக்க நடவடிக்கை எடுக்கவேண்டு மென்றும் அல்லது தான் இந்த நாட்டைவிட்டே ஓடிப்போய் விடவேண்டுமென்றும் அவர் மிகவும் பதட்டத்துடன் கூறினார். அந்த சமயத்தில் அவர் நிதான புத்தியோடு இருந்ததாகத் தெரியவில்லை. அப்படிப் பேசிக்கொண்டிருந்து விட்டு திடீரென்று தான் மிக முக்கியமான விஷயமாக வெளியே போகவேண்டியிருப்பதாகவும் மீண்டும் ஒரு மணிக்குத் திரும்பி வருவதாகவும் சொல்லிவிட்டு அங்கிருந்து புறப்பட்டார். பெண் ஒருத்தியைப்பற்றி அவர் சொன்னார்; ஆனால், பெண் யார் என்பது தெரியவில்லை. அந்தப் பெண் யார் என்று சொல்லாமல் சாட்சியம் மட்டும் சொல்ல வேண்டும், சொல்லவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தார். அவர் புறப்பட்டுச் சென்ற பிறகு நானும் என் சகோதரரும் பேசிக்கொண்டிருந்தோம். திடீரென்று ஒரு வேட்டுச் சத்தம் கேட்டது. நான் ஓடிப்போய் வெளியே பார்த்தபொழுது ஒன்றும் தெரியவில்லை. கார் தொலைவில் வெளியே சென்றுகொண்டிருக்கும் சப்தம் கேட்டது. ஜம்பு லிங்கம்தான் காரில் செல்வதாக நாங்கள் அப்பொழுது நினைத்தோம். மணி பன்னிரெண்டு இருக்கலாம். சாதாரண மாக பத்து மணிக்கே பூட்டப்படும் வெளிகேட்டை, ஜம்பு லிங்கம் பேச வந்ததால் திறந்து வைத்திருந்தோம்.

இவ்வளவும் நடந்ததற்காக நான் மிகவும் வருத்தப்படு கிறேன். அவர் யாரைக் கொலை செய்ய எத்தனித்தார் என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால் பெங்களூரில் என்னைத் தங்கியிருக்கச் சொன்னதும் என்னுடன் அவரும் அந்தச் சமயத்தில் ஒரு வியாபார விஷயமாய் தங்கியிருந்தார் என்று போலீஸாரிடம் சாட்சியம் சொல்ல வேண்டுமென்று சொன்னதும் கொலைக் குற்றத்திலிருந்து தான் தப்புவதற்காக இருக்கலாம் என்று நான் ஊகித்துக் கொண்டேன். இவ்வளவு சம்பவங்கள் நடந்ததுபற்றி நான் மீண்டும் வருத்தப்படுகிறேன் என்னுடைய சகோதரருடைய குட்டு வெளிப்பட்டுவிட்டது. அவரை மறைத்து வைத்திருந்த தற்காக நான் மிகவும் வருந்துகிறேன். கைரேகை நிச்சயம் காண்பித்துக் கொடுத்துவிடும் என்று எனக்கு முன்பே தெரியும்."

"அவ்வளவுதானே?" என்றார் பெரிமேஸன். "நான் மேற்கொண்டு கேள்விகள் கேட்கப்போவதில்லை" என்றும் அவர் கூறினார்.

அரசாங்க வக்கீலும் சங்கரலிங்கத்தை எந்தக் கேள்வியும் கேட்க விரும்பவில்லை.

இப்பொழுது பெரிமேஸன் நீதிபதியை நோக்கி, "நான் மற்றொரு அரசாங்கத் தரப்பு சாட்சியை மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய விரும்புகிறேன்" என்றார்.

"யார் அந்தச் சாட்சி?" என்று நீதிபதி கேட்டார்.

"மிஸஸ் ரத்னம் என்று அழைக்கப்படும் மரகதம் அவர்கள்" என்று கூறினார் மேஸன்.

மரகதம் கூண்டிற்கு அழைக்கப்பட்டாள். "நீங்கள் ஏற்கனவே சத்தியப் பிரமாணம் செய்திருக்கிறபடியால் இப்பொழுது மீண்டும் செய்யவேண்டாம். கூண்டில் ஏறிக் கேள்விகளுக்குப் பதில் சொல்லுங்கள்" என்றார் நீதிபதி.

மேஸன்: நீங்கள் ஏற்கனவே சொல்லியிருக்கிறீர்கள், பிரமிளாவுக்கு உதவியாளர்போல் இருந்ததாக. அவளுக்கு

வரும் டெலிபோன்களையும் கடிதங்களையும் பார்த்து அவளுக்கு யோசனை கூறி வந்ததாகவும் சொல்லியிருக்கிறீர்கள் இல்லையா?

“ஆமாம்” என்று மரகதம் கூறினாள்.

“அன்று பிரமிளாவுக்கு வந்த புத்தக விற்பனைக்காக ‘யார் யாரைக் காணவேண்டும்’ என்ற பட்டியலில் பத்துப் பேர்களுக்கு மாறாகப் பதினோறாவது பேர் டைப் அடிக்கப்பட்ட விதம் மற்ற டைப்ரைட்டர் எழுத்துக்களிலிருந்து வேறுபட்டிருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. நான் நினைக்கிறேன், மரகதம் அவர்களே! அந்த பட்டியலில் கடைசி பெயரை நீங்கள் சேர்த்திருக்கிறீர்கள். நீங்களாகச் சேர்த்திருக்கிறீர்கள். அதற்குப் பதில் சொல்லும் முன்பு நன்றாக ஆலோசித்து நீங்கள் கோர்ட்டில் சத்தியப் பிரமாணம் செய்திருக்கிறீர்கள் என்பதையும், புத்தகச் சம்பெனியாரிடமிருந்து அவர்கள் கொடுத்த பட்டியலில் பத்து பேர் இருந்ததா அல்லது பதினோறு பேரா என்பதைக் கண்டறியமுடியும் என்பதையும், கையெழுத்தைப்போலவே டைப் எழுத்தையும் நிபுணரைக் கொண்டு பரிசோதிக்கமுடியும் என்பதையும் நினைத்துப் பதில் சொல்லவும்” என்றார்.

மரகதம் நீண்ட நேரம் பதில் சொல்லாமல் நின்றுகொண்டிருந்தாள். பிறகு, “ஆமாம், அந்தப் பதினோறாவது பெயரை நான்தான் டைப் செய்தேன்” என்றாள்.

“அப்படி நீங்கள் செய்ததற்த என்ன காரணம்? அந்த விலாசத்தில் வசித்து வந்தவர்மீது உங்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டு யார் அந்த விலாஸத்தில் வசிக்கிறார்கள் என்பதைக் கண்டறிய வேண்டுமன்பதற்காகத்தானே?”

“ஆமாம், எதற்கு அந்த விலாசத்தில் என் கணவர் மாற்றுப் பெயருடன் வசிக்கிறாரோ என்று சந்தேகம் ஏற்பட்டது. டிரைவிங் லைசென்ஸில் இருந்து ஜம்புலிங்கம் என்பவருடைய பெயர், தோற்றம், எடை முதலியவை

யாவும் எனக்குச் சந்தேகத்தை அளித்தன. அதை விசாரித்து அறிவதற்காகப் பிரமிளா புத்தகம் விற்பதுபோல் சென்றால் கண்டுபிடித்து அறிந்துகொள்வாள் என்று அந்தப் பட்டியலில் அப்பெயரையும் சேர்த்து வைத்தேன்.

வக்கீல்: பிறகு ஏதோ நடந்திருக்கிறது. நீங்கள் உங்களுடைய திட்டத்தை மாற்றிக்கொண்டுவிட்டீர்கள்.

“ஆமாம். என்னுடைய கணவர் இருதார வாழ்க்கை
நடத்தி வருகிறார் என்பதை நான் தெரிந்துகொண்
டேன். நான் அவருடைய இரண்டாவது மனைவிதான்
என்பதை அறிந்துகொண்டேன். என் கணவரும், பிரமி
ளாவை நான் ஜம்புலிங்கம் வீட்டிற்கு அனுப்பியதைத்
தெரிந்துகொண்டுவிட்டார். பிரமிளா உண்மைச் செய்தியை
என்னிடம் தெரிவித்துவிடுவாள் என்று தீர்மானம் செய்து
கொண்டு அவளைக் கொலை செய்வதற்காக ‘ஸ்டிரிக்னைன்’
விஷத்தைப் பழரசத்தில் கலந்து கொடுத்திருக்கிறார். ஆனால்,
பிரமிளா சாமர்த்தியமாக அதைக் குடிக்காமல் கீழே
கொட்டியிருக்கவேண்டும். அன்று இரவு பிரமிளா ரிவால்வ
ருடன் திரும்பி வந்ததும் அவள் ஒன்றுமே பதில் சொல்லாமல்
இருந்ததும் எல்லாவற்றிற்கும் முடிவு ஏற்படும் ஒரு காலம்
வந்துவிட்டது என்பதை நிச்சயம் செய்துகொண்டேன்.
அவள் பொய் சொல்வதாக நான் சந்தேகப்பட்டேன்.
அதனால் அவளுக்குத் தூக்க மருந்தைப் பாலில் கலந்து
கொடுத்துத் தூங்கச் செய்துவிட்டு ரிவால்வரை எடுத்
துக்கொண்டு என் கணவரைப் பார்க்கச் சென்றேன் அந்தக்
குறிப்பிட்ட விலர்ஸத்திற்கு. அவர் சங்கரலிங்கத்திடம்
அவ்வப்பொழுது பணம் பெற்று வருவது எனக்குத் தெரியும்.
ஆனால் என்ன காரணத்திற்காக என்று எனக்குத் தெரியாது.
நான் சங்கராபுரம் எஸ்டேட்டுக்குச் செல்வதற்கும் என்
கணவர் சங்கரலிங்கத்திடம் பேசிவிட்டு வெளியே வருவதற்
கும் சரியாய் இருந்தது. அவர் என்னை அந்த வேளையில் அந்த
இடத்தில் என்ன செய்கிறேன் என்று கோபமாகக் கேட்டார்.
நான் அவர்மீது குற்றம் சாட்டினேன். அவர் என்னை

உடனே கொன்றுவிடத் தீர்மானித்து என் மென்னியைப் பிடித்து அழுத்தினார். நான் என்னைத் தற்காத்துக்கொள் வதற்காகத் துப்பாக்கியின் குதிரையைத் தட்டினேன். அவர் சுருண்டு கீழே விழுந்துவிட்டார். நான் உடனே காரை எடுத்துக்கொண்டு என் வீட்டிற்கு வந்துவிட்டேன். போனது வந்தது தெரியாமல் ரிவால்வரைத் திரும்பவும் பிரமிளாவின் தலையணையின் கீழே வைத்துவிட்டேன்" மரகதம் இவ்வாறு சொல்லி முடித்தாள்.

உடனே பெரிமேஸன் அரசாங்க வக்கீலை நோக்கி, "பிரமிளாவின் மீதுள்ள வழக்கு இப்பொழுது முடிந்து விட்டது அல்லவா" என்று கேட்டார்.

14

வழக்கின் முடிவு குறித்து மேஸன் விளக்கம்

வக்கீல் பெரிமேஸன், அவருடைய செயலாளர் உஷா, துப்பறியும் நிபுணர் அர்ஜுன்சிங் ஆகியோர் பெரிமேஸன் காரியாலயத்தில் கூடி வழக்கைப்பற்றிய பலாபலன்களைப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

மேஸன் சொன்னார்: ஒவ்வோர் அங்குலமாகக் கவனிக்க வேண்டியதன் அவசியத்தை இந்த வழக்கு நிரூபித்துவிட்டது. கடைசி நிமிஷத்தில் விசித்திரமான மாறுதல் ஒரு வழக்கிற்கு நேரும் என்பதை இது தெரிவிக்கிறது அல்லவா? சங்கரலிங்கத்தின் வீட்டு வேலைக்காரன் தன்னுடைய ரிவால்வர் காணாமல் போனதாகச் சொன்னது பொய் யல்ல ரத்னம் என்னும் ஜம்புலிங்கம் தனது இரண்டாவது மனைவியின் வீட்டிலிருந்து முதல் மனைவியின் வீட்டிற்குத் திரும்பி வரும்பொழுது நடு வழியில் அதைக் கண்டுபிடித்து அதைத் தன் சொந்த உபயோகத்திற்குப் பயன்படுத்தலாம் என்று தன்னிடம் வைத்துக்கொண்டார். அந்தத் துப்பாக்கி தான் சங்கரலிங்கத்தை இந்த வழக்கில் சம்பந்தப்படுத்தி விட்டது. ஜம்புலிங்கத்திற்கு அந்தத் துப்பாக்கி யாருடையது என்று தெரியாது. சங்கரலிங்கத்தினுடைய சகோதரர் சிறையிலிருந்து தப்பி வந்தபொழுது சங்கரலிங்கம் நிலங் களை வாங்கி விற்கும் சிறு விற்பனையாளராக இருந்தார்.

தன்னுடைய சகோதரனுடன் அவர் சேர்ந்துகொண்டார்.
சங்கரலிங்கம் பிரபலமாகத் தன் தொழிலை நடத்தத் தொடங்
கியவுடன் பத்திரிகைக்காரர்கள் அவருடையபோட்டோ
பிரசுரிக்க விரும்பிப் பிரசுரித்தும் விட்டார்கள். ஜம்புலிங்
தான் முதலில் மணந்துகொண்ட மனைவியிடம் வாழ்
அலுத்துவிட்டதால் மற்றொரு பெண்ணின்மீது ஆ
பட்டார். அதாவது மரகதத்துடன் வாழ ஆரம்பி
வசதியாய்ப் பணம் கிடைத்ததால் இரு தாரத்தி
வைத்துக்கொண்டு வாழ்க்கை நடத்துவது அவருக்கு
யாக-சௌகரியமாக-இருந்தது. அவர் அடிக்கடி மரக
விட்டு வெளியே சென்றதனால், தன்னுடன் துணை
பிரமிளாவை மரகதம் வசிக்கச் சொன்னது அவரு
சௌகரியமாயிற்று. ஆனால், அவரே விரித்த வ
அவரே சிக்கிக்கொள்ளும்படியான நிலை ஏற்பட்டுவிட
அவரால் முன்யோசனை இல்லாமல் திட்டத்தைத் தய
முடியவில்லை.

அர்ஜுன்சிங்: ஓஹோ! அதுதான் செல்வாக்
பிரபல அரசாங்க வக்கீலைத் துணிவுடன் எதிர்த்தீர்க
உங்கள் மாதிரி மனோதைரியம் ஒருவருக்கும் வராது.

பெரிமேஸன்: கட்சிக்காரரிடம் ஒரு வக்கீல் அ
மாகவும் நியாயமாகவும் நடந்துகொள்ளவேண்டும்.
நிறைவேற்றும்பொழுது எவ்வளவோ கஷ்டங்கள் நே
அதை எதிர்பார்த்துத்தான் எப்பொழுதும் சாம
மாகவும் தயாராகவும் மனோதிடத்துடனும் சட்ட நு
கங்களைச் சமயத்தில் உபயோகிக்கக்கூடிய வகையில் ஆ
லும் இருக்கவேண்டும்.

அவர் இவ்வாறு சொன்னவுடன் அர்ஜுன்சிங்
உஷாவும் அவரை மிகவும் நன்றியறிதலுடனும் அன்புட
நோக்கினர்கள்.

TAMILNADU ARCHIVES LIBRARY
EGMORE, MADRAS-600 008
No. 111603
144

(2)	(1)	(2)

பெரிமேஸன் துப்பறிந்த

இரட்டைக் கொலை வழக்கு

ERLE STANLEY GARDNER

ஒருவரைப் பார்த்தால் மிகவும் நல்லவர்போல் தோன்றுவர். ஆனால், இதயத்தில் கபடம், வஞ்சம் நிறைந்திருக்கும். வாய்ப்பு நேரும்போது தங்கள் சுய ரூபத்தைக் காட்டத் தயங்கமாட்டார்கள். குந்துமணியின் உடல் முழுவதும் சிவப்பு நிறமாக இருந்தாலும் அதன் மூக்கில் கருமையைக் கண்டுவிட முடிகிறது. ஆனால், வஞ்சக வேடதாரிகளைக் கண்டுபிடிக்க முடியாமல் பலர் அவர்களது சூழ்ச்சி வலையில் சிக்க நேரிடுகிறது.

> *"புறம்குன்றி கண்டனையர் எனும் அகம்குன்றி*
> *மூக்கின் கரியார் உடைத்து"* — திருக்குறள் 227.

ஏர்ல் ஸ்டான்லி கார்டனர் எழுதியுள்ள "பெரிமேஸன் துப்பறிந்த இரட்டைக்கொலை வழக்கு" என்னும் நாவலில் இப்படிப்பட்ட அகமும் புறமும் வெவ்வேறாக வாழ்க்கை நடத்திய தீயவனின் சாகஸங்களையும், அதைத் தொடர்ந்த பரபரப்பான சம்பவங்களையும், குற்றவாளி தண்டிக்கப்படுவதையும் காண்கிறோம்.

WORLD FAMOUS

ERLE STANLEY GARDNER'S

PERRY MASON SOLVES THE CASE OF THE

BIGAMOUS SPOUSE

(IN TAMIL)

Published by THE LITTLE FLOWER CO., MADRAS-17.

1

[PRICE RE. 1.75